மறைக்கப்பட்டு விடுமா

கொத்துக்குண்டு விவகாரம்?



பக். 12

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 235 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆடி 03, திங்கட்கிழமை 18.07.2016

## தமிழ் யாத்திரிகர்கள் மீது கதிர்காமத்தில் தாக்குதல்

### இது எமது இடம். உங்களை யார் வரச் சொன்னது கேட்டு சிங்களவர்கள் தாக்கினர் என முறைப்பாடு

கொழும்பு, ஜூலை 18
கதிர்காமத்துக்குச் சென்ற தமிழ் யாத்திரிகர்கள் மீது, தாக்குதல் நடத்தப்பட்டது என்று கதிர்காமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. இந்தத் தாக்குதல் சம்பவம் நேற்று மதியம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.
தமிழ் யாத்தி பக்.25

## அரிய சாதனை

மூன்று நாள்களில் மூன்று நிகழ்வுகளில் தங்கம் வென்று சாதனை படைத்தார் தட்சணாமருதமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையைச் சேர்ந்த பி.பிரியங்கா.
மாகாண மட்ட பாடசாலைத் தடகளப் போட்டிகள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்று வருகின்றன. இதில் 400 மீற்றர் தடை தாண்டல், 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம் ஆகிய மூன்று நிகழ்வுகளிலும் முன்னைய சாதனைகளை முறியடித்து புதிய சாதனைகளைப் படைத்தார். இது ஓர் அரிய சாதனை என விளையாட்டு ஆர்வலர்கள் பாராட்டினர். (விரிவு:பக்கம் 27)



## விடுவிக்கப்பட்ட காணிகளை கையகப்படுத்தியது பொலிஸ்

### உரிமையாளர்கள் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், ஜூலை 18
காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பகுதிகளைப் பொலிஸார் நேற்று வேலிகளை அமைத்து மக்கள் பாவனைக்கு அனுமதி மறுத்தனர் என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.
"காணிகளைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்த எம்மை அங்கிருந்து வெளியேறுமாறு பொலிஸார் பணித்தனர். மீறி நின்றால் கைது செய்வோம் என்றும் எச்சரித் பக்.25

பல்கலை. அடிதடி விவகாரம்

## இனவாதத்துக்குள் புதைக்கிறது முகநூல்




யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். பல்கலைக் கழக தமிழ் - சிங்கள மாணவர் அடிதடி தொடர்பில், சமூகவலைத் தளங்களில் பல்வேறு கருத்துக்கள் பகிரப்பட்டு வருகின்றன. இனவாத ரீதியிலான கருத்துக்களே அதிகம் பக்.25

## இழுத்து மூடப்பட்டது யாழ். பல்கலை.

யாழ்ப்பாணம், ஜூலை 18
விஞ்ஞானபீட தமிழ் - சிங்கள மாணவர்களுக்கிடையிலான மோதலையடுத்து, யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழகம் நேற்று அறிவித்தது.
யாழ். பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களும், மருதனார்மடம் நுண்கலைப்பிரிவு, கைதடி சித்த மருத்துவப் பிரிவு, கிளிநொச்சியிலுள்ள பீடங்களும், வவுனியா வளாகம் அனைத்தும் மூடப்பட்டன.
பல்கலைக்கழகத்தில் தமிழ் - சிங்கள மாணவர் இடையே நடந்த அடிதடியின் பின்னர், விஞ்ஞான பீடத்தை மறு அறிவித்தல் வரை மூடுவதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. பல்கலைக் கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் அனைத்துப் பிரிவுகளையும் தற்காலிகமாக மூடிவிடுவது பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் அன்றிரவே கலந்துரையாடியிருந்தார்.
இந்த நிலையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் மற்றும் பீடாதிபதிகள் கலந்துரையாடலின் பக்.25

## பல்கலைக்கழகக் குழப்பம்; விசாரணைக்கு மூவர் குழு

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ் - சிங்கள மாணவர்களுக்கு இடையில் நடந்த அடிதடி தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு மூவர்கொண்ட குழு நியமிக்கப்பட்டது. இரண்டு தமிழர்களும், ஒரு சிங்களவரும் இந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர் பக்.25

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் வெளிப்படைத் தன்மை அவசியம்

### சிவில் சமூகப் பிரதிநிதிகள் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 18
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் வெளிப்படைத்தன்மை தேவை. இராஜதந்திர வரையறை என்பதைச் சொல்லி, தமிழ் மக்கள் சார்பில் எடுக்கப்படும் முடிவுகள் மறைக்கப்படக்கூடாது. அவ்வகையான போக்கு கூட்டமைப்பிலிருந்து களையப்படவேண்டும்.
இவ்வாறு வலியுறுத்தினர் சிவில் சமூகப் பிரதிநிதிகள்.
"தடம் மாறுகிறதா தமிழ்த் தேசியம்?" என்னும் தலைப்பிலான கருத்துப் பகிர்வு, மன்னாரில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட சிவில் சமூ கப் பிரதிநிதிகளில் சிலரே மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.
"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தற்போது கிடைத்துள்ள ஜனநாயக வெளியை உரிய வகையில் பயன்படுத்தவில்லை. தமிழ் மக்கள் பிரச்சினையைப் பன்னாட்டு மயப்படுத்த இந்த வெளி பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். ஜனநாயக வெளி உரியவகையில் பயன்படுத்தப்படாமையினால், அது பக்.25

## குடாநாட்டில் கொள்ளையிடப்பட்ட 128 பவுண் நகைகள் மீட்பு

### இருவர் கைது



யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். குடாநாட்டில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தில் இரண்டு பேர் கைது செய்யப் பட்டனர். அவர்களால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான 128 பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்கள் இருவரும் 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.
கடந்த வாரம் கார் ஒன்றைச் சோதனையிட்ட போது, அதிலிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகள் சில மீட்கப்பட்டன. சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரது கார் தடுத்து வைக்கப்பட்டது. அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் கொழும்பிலுள்ள நகைக்கடை ஒன்றுக்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.
(விரிவு: பக்கம் 07)

## மாணவர்கள் அடிதடி; கூட்டமைப்பு அதிர்ச்சி

### நல்லிணக்கத்தைப் பாதிப்பதற்கு அனுமதிக்கக்கூடாது எனவும் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18
யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அடிதடி சம்பவம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கடும் அதிர்ச்சி வெளியிட்டது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் நேற்று இரவு அனுப்பி வைக்கப்பட்ட ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
யாழ். பல்கலைக்கழக அடிதடியினால் பல மாணவர்கள் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். சிங்கள மாணவர்கள் பாதுகாப்புக் கருதி வெளியேற்றப்பட்டுள்ளனர். இவற்றுக்காக வருந்துகின்றோம். பக்.25



யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற அடிதடியில் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள மாணவர்களை, வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று நேரில் சென்று பார்வையிட்டார் என ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான, தொழில்நுட்ப பீடங்களை தமிழ் மாணவர் அதிகம் நிரப்ப வேண்டும்

## தயார்ப்படுத்துமாறு சரவணபவன் எம்.பி. பெற்றோருக்கு அறைகூவல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பீடங்களை தமிழ் மாணவர்கள் அதிகளவு நிரப்பப்பட வேண்டும். இதற்குப் பெற்றோர் இப்போதே தங்கள் பிள்ளைகள் அந்தத் துறைகளைத் தெரிவு செய்வதற்கு ஏற்ற வகையில் அத்திவாரம் அமைக்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்டங்களின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் ஏற்பாட்டில், சரவணபவன் அறக்கட்டளையும் – புலமைச்சுடர் கையேடும் இணைந்து நடத்தும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கான சிறப்பு இலவச வழிகாட்டல் கருத்தரங்கு நேற்று ஆரம்பமானது. ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் நடத்தப்பட்டது. காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணிவரை நடத்தப்பட்ட கருத்தரங்கில், ஆசிரியர்களான பி.அம்பிகைபாகன், வே.அன்பழகன், என்.எஸ். தீபன், து.திலீப்குமார் மற்றும் நிமலன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து சிறப்பித்திருந்தனர்.





இந்தக் கருத்தரங்கை நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆரம்பித்துவைத்தார்.

"யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடத்தில் நடந்த சம்பவம் எல்லோரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப பீடங்களுக்கு தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது மிகக் குறைவு. எமது மாணவர்களிடமும் இந்தத் துறைகள் மீதான ஆர்வம் குறைந்துவிட்டது. எதிர்காலத்தில் பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் இந்தப் பீடங்களை நிரப்ப வேண்டும்.

இந்தத் துறைகள் மீது தமது பிள்ளைகள் ஈடுபாடுகாட்டச் செய்யும் அளவுக்குப் பெற்றோர் அத்திவாரத்தை அமைக்கவேண்டும். இதன் மூலமே பல்கலைக்கழக வளாகத்தில் எமது தமிழ் மாணவர்களைப் பெருவாரியாக இணைத்துக்கொள்ள முடியும்" என்று நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

கருத்தரங்குகளின் இறுதியில் புலமையாளராகக் காணப்பட்ட மாணவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் ஆசிரியர்களுடன் இணைந்து பரிசில்களை வழங்கி வைத்தார்.

இன்று காரைநகர் யாழ்ரன் கல்லூரியில் மாலை 2.30 மணி தொடக்கம் 5.30 வரையும், நாளை செவ்வாய்க் கிழமை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மற்றும் சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 3.30 வரையும் இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன. (வ-5)

## ஆலயத்தில் நின்றோரை தாக்கிய கருங்குளவிகள்

ஆடிப் பிறப்பு சிறப்பு வழிபாட்டில் கலந்து கொண்டோரை பறந்து வந்த கருங்குளவிகள் தாக்கியதில் இரண்டு பெண்கள் உட்பட மூவர் பாதிப்புக்குள்ளாகினர்.

இந்தச் சம்பவம் மட்டுவில் தெற்கில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் வீழந்த பனை ஓலைக்குள்ளிருந்து பறந்து வந்த குளவிகள், ஆலயத்தில் நின்ற பலரைத் தாக்கின.

கருங்குளவிகளால் தாக்கப்பட்ட மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டனர்.

தென்மராட்சி பிரதேசத்தில் வருடாந்தம் காற்றுக் காலத்தில் பனை மரங்களிலிருந்து விழும் ஓலைகளுக்குள் அல்லது மரங்களில் கூடு கட்டியிருக்கும் கருங்குளவிக் கூடுகள் நிலத்தில் வீழ்ந்து வீதியில் செல்வோரைத் தாக்கி வருகிறது.

கடந்த மாதம் கச்சாய் பகுதியில் ஆலய வழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மூன்று பெண்கள் உட்பட ஐவரும், மீசாலைப் பகுதியில் தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்ற மாணவர்களும் கருங்குளவிகளால் தாக்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றிருந்தனர்.

டெங்கு நுளம்பினை அழிக்க மருந்து விசிறுவதுபோல மரங்களில் கூடு கட்டியுள்ள கருங்குளவிக் கூடுகளை மருந்து விசிறி அழிக்க சுகாதாரப் பகுதியினரும் பிரதேச இயற்கை இடர் முகாமைத்துவப் பிரிவினரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டோர் கேட்டுக் கொண்டனர். (வ-9)

# கருணா குழுவை வழிநடத்திய புலனாய்வு அதிகாரி கைதானார்

## லசந்த படுகொலை வழக்கில்

கொழும்பு, ஜூலை 18

சண்டேலீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலையுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைதுசெய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு அதிகாரி, கருணா குழுவை வழிநடத்தியவர்.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகமான சண்டேலீடர் செய்தி வெளியிட்டது.

இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக சந்தேகத்தில் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மூத்த அதிகாரியான பிரேமானந்த உடலகம குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார். லசந்த விக்கிரமதுங்க படுகொலையை நேரில் கண்ட சாட்சி ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கி, அவருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்று இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு, விசாரணைக்காக அழைக்கப்பட்ட பிரேமானந்த உடலகம, விசாரணையின் பின்னர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பிரேமானந்த உடலகம, இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் சுரேஸ் சாலியின் நெருங்கிய உதவியாளராவார். 2009ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி லசந்த படுகொலை இடம்பெற்ற போது, இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த மேஜர் அன்சாருடன் இணைந்து பணியாற்றியிருந்தார்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து பிரிந்த கருணா குழுவினரை, வழிநடத்திய இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் குழுவிலும் உடலகம இடம்பெற்றிருந்தார். இராணுவப் புலனாய்வுப் பிரிவின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண பணியாற்றியிருந்தார்.

இதன்பின்னர், 2010ஆம் ஆண்டு உடலகம ஜேர்மனியில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் மூன்றரை ஆண்டுகள் பணியாற்றினார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை வழக்கில் இராணுவப் புலனாய்வு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தியுள்ள, இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெநாத் ஜெயவீர, கருத்து எதையும் வெளியிட மறுத்துள்ளார் என்றுள்ளது. (வ-5)

# அரசியல் கட்சிகள் சுயநலத்துடன் ஊடுருவி கல்வியைக் கெடுக்க முயற்சி

## மாணவர் ஒன்றியம் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மூவின மாணவர்களும் ஒற்றுமையாகவே படித்து வருகின்றார்கள். அரசியல் சக்திகள் சுயநலத்துடன் மாணவர்களிடையே ஊடுருவி கல்வியைக் கெடுக்க முற்படுகின்றன. அதற்குப் பல்கலைக்கழக மாணவர் ஒன் றியம் ஒருபோதும் அனுமதிக்காது.

இவ்வாறு தெரிவித்துள்ளது யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர் ஒன்றியம்.

இது தொடர்பில் ஒன்றியம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில்தெரிவிக்கப்பட்டதாவது:

ஓரளவு சுமுகமான அரசியல் சூழ்நிலையில் மாணவர்கள் கல்வியைத் தடையின்றிக் கற்கின்ற சூழ்நிலையில் மேற்கொள்ளப்படும் குழப்பங்களுக்கு இடமளிக்கமுடியாது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் முதலாம் வருட மாணவர்களுக்கான வரவேற்பு உபசார நிகழ்வு விஞ்ஞானபீட மூத்த மாணவர்களால் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

இது வழமையானது. இந்த நிகழ்ச்சி நிரலில் மாற்றம் செய்து நிகழ்ச்சி நடத்தவேண்டும் என ஒரு மாணவர் குழுவும், நிகழ்ச்சி நிரலில் மாற்றம் ஏற்படுத்தாது நிகழ்ச்சி நடத்தவேண்டும் என விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த இன்னொரு மாணவர் குழுவும் வலியுறுத்தின. இதனால் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

இந்த நிலையில் பீடாதிபதியும், மாணவ ஆலோசகர்களும் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் ஏற்படுத்தாது வழமைபோல நிகழ்ச்சி நடத்துமாறு விழாக்குழுவிடம் வலியுறுத்தி இருந்தனர். அத்துடன் துணைவேந்தரின் அனுமதி பெறாத நிகழ்ச்சிகள் நடைபெறக்கூடாது என்ற அடிப்படையிலும் கருத்துக் கூறப்பட்டது. இதனால் முரண்பாடுகள் ஏற்பட்டன. பின்னர் இந்த முரண்பாடு மாணவர் குழுக்களிடையே வலுப்பெற்றது. விஞ்ஞானபீடாதிபதி, மூத்த மாணவர் ஆலோசகர், மாணவ ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள் ஈடுபட்டு சுமுக நிலையை ஏற்படுத்தினர். சகல மாணவர்களினதும் பாதுகாப்புக் கருதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அதிகமான மாணவர் எண்ணிக்கையைக் கொண்ட தேசிய பல்கலைக்கழகங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் ஒன்று. இந்த நிலையில் ஒரு சிலரை உள்ளடக்கிய மாணவ குழுக்களுக்கிடையில் பல அடிப்படையில் பிணக்குகள் ஏற்படுவதுண்டு. ஆனால் அடுத்த நிமிடமே நாம் யாவரும் பல்கலைக்கழக மாணவர்கள் என்ற அடிப்படையில் ஒன்றிணைந்து ஒற்றுமையாகவே படித்து வருகின்றோம்.

சிலர் சிறிய பிணக்குகளையும் பூதாகரம் ஆக்கி சுய நன்மை அடைய முனைகின்றனர்.

மேலும் தொடர்புசாதனங்களுக்கும் ஒரு உன்னத சமூகப் பொறுப்பு உண்டு. உண்மையை அறிந்து மாணவர்களுக்கும் சமூகத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் தகவல்களை வழங்குமாறும் தொடர்பு சாதனங்களை வேண்டுகின்றோம். குறிப்பாக தென்னிலங்கைசார்ந்த தொடர்பு சாதனங்களுக்கு மக்களுக்கு உண் மையான தகவல்களையும் உண்மையான நிலைமைகளையும் நடுநிலமையுடன் சேர்க்கவேண்டியபொறுப்புஉண்டு. உண்மை நிலையைத் தெரிவிக்க வேண்டிய கடப்பாடு பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு உரியது. மாணவர்களுடைய கல்வியைப் பாதிக்காது விரைவில் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்து சகல மாணவர்களின் கல்வியையும் தொட ரப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் துணைவேந்தரை வேண்டி நிற்கின்றது. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்பதையும் தெரிவித் துக் கொள்கிறது – என்றுள்ளது. (வ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றச்சாட்டுக்கள் உண்மையானால் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படும்

## அயலுறவு அமைச்சர் மங்கள தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 18

போர்க்குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்று உறுதியானால் விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

இது தொடர்பில் அரச ஆங்கில ஊடகமான சண்டே ஒப்சேவருக்கு அவர் வழங்கிய செவ்வியில் தெரிவித்ததாவது :

போர்க்குற்ற தீர்ப்பாயங்களையோ, கலப்பு நீதிமன்றத்தையோ இலங்கை உருவாக்கவில்லை. இந்த இரண்டு சொற்பதங்களின் ஊடாகத் தவறான புரிதல் ஏற்படுத்தப்படுகிறது.

தீர்ப்பாயங்கள் எதுவும் கிடையாது. போர்க்குற்றச்சாட்டுகள் மாத்திரமே உள்ளன. இந்தக் குற்றச்சாட்டுகள் உண்மையானவை என்று உறுதியானால், நம்பகமான விசாரணைக்கு பொறிமுறைகள் அமைக்கப்படும். கலப்பு நீதிமன்றங்களை ஐ.நாவே நியமிக்கும். கலப்பு நீதிமன்றத்துக்கு நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் இலங்கை அரசுக்கு இல்லை. இலங்கையில் இத்தகைய வழக்கமும் இல்லை. போர்க்குற்றச்சாட்டுகளை முன்னைய அரசைப்போல நான் மறுக்கப்போவதில்லை. குற்றச்சாட்டுக்களில்உண்மையில்லை என்றால், அப்போது அதனை மறுத்துக் கூறுவேன். வெளிநாட்டு நீதிபதிகள் வேண்டும் என்று ஒரு சாராரும் வேண்டாம் என்று ஒரு சாராரும் கூறுகின்றனர்.

இந்த இரண்டுக்கும் இடையிலான வழிகள் குறித்து ஆலோசித்தே இறுதிமுடிவை எட்டமுடியும்.

எல்லாத் தரப்பினதும், பன்னாட்டுச் சமூகத்தினதும் நம்பிக்கையைப் பெறத்தக்க ஒரு நம்பகமான செயல்முறையை கொண்டு வருவதே அரசின் எண்ணமாகும். இந்தப் பொறிமுறையானது, எதிர்காலத்தில் இடைமாற்று நீதிப் பொறிமுறைகளுக்கு முன்மாதிரியாக அமையும்.

வடக்கில் இராணுவ முகாம்களை வைத்திருப்பதால் மாத்திரம், விடுதலைப் புலிகளின் மீள்எழுச்சியைத் தடுத்து விடமுடியாது. தமிழர்களின் மனங்களை வெற்றி கொள்வதன் மூலமே அது சாத்தியமாகும் - என்றார். (வ-5)

Galaxy Star
வெற்றி வாரம் 075
திகதி 17.07.2016
04 04 17 44 53
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 7,714,480/-
இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 17.07.2016
2005
03 33 36 39
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,000,000 /-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## மீன்வாடி தீக்கிரை

வாழைத்தோட்டம் கடற்கரையில் மீன்வாடி தீக்கிரையாக்கப்பட்டதாக சேருநுவர பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் இனந்தெரியாத நபர்களால் மீன்வாடிக்கு தீ வைக்கப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

வாழைத்தோட்டம், மாவடிச்சேனையில் உள்ள கனகசூரியம் ஜெயராசா என்பவருக்குக்குச் சொந்தமான மீன்வாடியே தீக்கிரையாக்கப்பட்டது.

வாடியின் கூரை ஓலையால் வேயப்பட்டிருந்தது. தகரத்தால் சுற்றி அடைக்கப்பட்டுள்ளது. அதற்குள் 150 மீற்றர் நீளமுடைய 5 தோரா வலைகளும் 75 மீற்றர் நீளமுடைய 27 குறுள் வலைகளும், 300 லீற்றர் மண்ணெண்ணெய், 60 லீற்றர் பெற்றோல், 40 லீற்றர் என்ஜின் ஒயில், 18 லீற்றர் டியுட்டி ஒயில், 500 தூண்டில் பதித்த வலை ஒன்றும், 2 பெற்றோல் லாம்பும் எரிந்து நாசமாகியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (வ-5)

## இலங்கையில் முதலீடு செய்வதற்கு கனடா வாழ் தமிழர்கள் தயாரில்லை

### நிரந்தர அரசியல் தீர்வுக்குப் பின்னரே அது சாத்தியம் என்கிறார் அந்த நாட்டு எம்.பி. ஹரி ஆனந்தசங்கரி

யாழ்ப்பாணம், ஜூலை 18

நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படுவதற்கு முன்பாக, கனடாவிலுள்ள தமிழ் மக்கள் இங்கே முதலீடு செய்யும் மனநிலையில் இல்லை.

இவ்வாறு தெரிவித்தார் கனேடிய நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஹரி ஆனந்தசங்கரி, யாழ்.முகாமையாளர் சம்மேளனத்தினால் யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

'இலங்கையில் நிரந்தர அரசியல் தீர்வு ஏற்படவேண்டும். அவ்வாறான நிலைமை உருவாகும் வரையில் கனடாவில் வாழும் தமிழ் முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்யும் நிலையில் இல்லை. நான் கனடாவில் வாழும் முதலீட்டாளர்களை நேரில் சந்தித்து இந்த விடயம்பற்றிப் பேசினேன். அவர்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்துவிட்டனர். அவர்கள் உடனடியாக இங்கு முதலிடுவார்கள் என்று நம்பிக்கை வைக்க வேண்டாம். மக்களின் உடனடித் தேவைகளுக்கு உதவி செய்வதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்' என்றார் ஹரி ஆனந்தசங்கரி.

தமிழ் மக்களுக்கு சிங்கள மொழியையும், சிங்கள மக்களுக்கு தமிழ் மொழியையும் கற்பிக்கும் செயற்றிட்டத்துக்கு கனேடிய அரசு இரு தடவை பெரியளவிலான நிதிஉதவிவழங்கியுள்ளது. மூன்றாவது தடவையாகவும் வழங்கவுள்ளது. ஆனால் இந்தச் செயற்றிட்டம் இங்கு உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை - என்று ஹரி ஆனந்தசங்கரிக்கு சுட்டிக்காட்டப்பட்டது. (வ-5-101)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவித்தல்

வவுனியா வளாகம் உட்பட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் அனைத்தும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. மீள ஆரம்பிக்கப்படும் திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

**பதிவாளர்**

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை

**மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை**

### ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் : 04 - ஆதன இல:- 93 (புதிய பதிவு)**

**வீதி: சுதுமலை வீதி - கிராம சேவையாளர் பிரிவு : - J/130**

வட்டாரம் 04 சுதுமலை வீதி, ஆதன இல. 93 (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம், வலிகாமம் மேற்கு, பகுதி மானிப்பாய் கோவிற்பற்று சுதுமலை இறை "தெங்கன் தோட்டம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 04 கொண்ட இவ்வாதனமனது Hinter Berg 2, 6318 Walchwic Swiss ஐச் சேர்ந்த வைத்திலிங்கம் பெண் ஸ்ரீதரன் பெண் இந்திராணி யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கு, மானிப்பாயை சேர்ந்த சண்முகராசா கைம்பெண் இராசமணி ஆகிய இவர்களால் சுதுமலை மானிப்பாயைச் சேர்ந்த ஞானேஸ்வரன் நரேந்திரம் பெண் சுபாஉமா என்பவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி அபர்ணா ஜனார்த்தன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 334 ஆம் இலக்க 04.11.2015 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு.கே. இளையதம்பி அவர்களால் வரையப்பட்ட 587 ஆம் இலக்க 2012.09.05 ஆம் திகதிய நில அளவைப் படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது தெங்கன் தோட்டம் நிலப்பரப்பு 04 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள் களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து குறித்த ஆதனமானது ஞானேஸ்வரன் நரேந்திரம் பெண் சுபாஉமா என்பவரின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

# பல்கலை. மாணவர் மோதலினால் மீளத் தலைதூக்குகிறது இனவாதம்

## ஜே.வி.பி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

யாழ்.பல்கலைக்கழக மோதலினால் இனவாதம் தலைதூக்கியுள்ளது. இதனை அரசும், பல்கலைக் கழக நிர்வாகமும் உடனடியாகத் தடுக்க வேண்டும். தடுக்கத் தவறினால் இதுவரையிலும் தோன்றியிராத மிக மோசமான இனவாதமாக இது மாறும்.

இவ்வாறு எச்சரிக்கிறார் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க. கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற சம்பவம் மீண்டும் ஓர் இரத்தக்கறையை தோற்றுவிக்காது தடுக்கப்பட வேண்டிய விடயம். மிக பயங்கரமான இனவாதமாக இது மாறுவதற்கு முன்னர் இதனைத் தடுக்க வேண்டும்.

சுயாதீன கல்வி உரிமையை மாணவரிடம் இருந்து பறித்து அரசு பணம் படைத்தவரிடம் கல்வியை விற்கின்றது. நரியிடம் கோழியை கொடுப்பது போல, மாலபே விடயம் சுகாதார அமைச்சரிடம் வழங்கப்பட்டது. மகிந்த காலத்தில் மாணவர்கள் எவ்வாறு வதைக்கப்பட்டு உரிமைகள் முடக்கப்பட்டதோ, அது போலவே நல்லாட்சி அரசிலும் மாணவர்கள் கைது செய்யப்படுவதும், வகுப்புத் தடைகள் விதிக்கப்படுவதும் தொடர்கின்றது.

போராட்டத்தை முன்னெடுத்து வீதியில் இறங்கும் மாணவர்களுடைய பிரச்சினைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் - என்றார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி வன்பொருள் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஜூலை 18
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் கணினி வன்பொருள் பயிற்சி நெறிக்கு யாழ்ப்பாண பயிற்சி நிலையத்தில் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று மாவட்ட முகாமையாளர் கி.கிருஷ்ணபாலன் தெரிவித்தார்.

கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவர்கள் ஜீ.சீ.ஈ. சாதாரண தரம் வரை கற்றிருப்பதோடு, விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயது தொடக்கம் 35 வயதுக்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

சுயமாகத் தயாரித்த விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், NAITA, இல. 44, சோமசுந்தரம் வீதி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'கணினி வன்பொருள் கற்கை நெறி' எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ற-ரி)

# கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையின் ஏற்பாட்டில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பக் கற்கை நெறிக்கு யாழ்ப்பாணம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜீ.சீ.ஈ. சாதாரண தரத்தில் ஏதேனும் 3 பாடங்களில் திறமைச் சித்தியும், கணிதம், ஆங்கிலம் உள்ளடலங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் ஜீ.சீ.ஈ.உயர்தர பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புவர்கள் விண்ணப்ப முடிவுத்திகதி அன்று 16 வயதுக்கும் 25 வயதுக்கும் உட்பட்வராக இருத்தல்வேண்டும். சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை யாழ்ப் பாணம், சோமசுந்தரம் வீதி, இல. 44 மாவட்ட அலுவலர் என்ற முகவரிக்கு தபால் மூலமாக எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பவேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் தகவல் தொடர்பாடல் கற்கை நெறிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும் என்று யாழ். மாவட்ட அலுவலர் கி.கிருஷ்ணபாலன் தெரிவித்தார். (ற-ரி)

# சாதாரண பயணிகள் ஆசனத்தில் விமானத்தில் சென்ற அமைச்சர்

கொழும்பு, ஜூலை 18
அமைச்சர் கபீர் ஹாசிம், சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தின் வர்த்தகப்பிரிவு ஆசனத்தில் அமராது பயணிகளுடன் சாதாரண ஆசனத்தில் பயணம் செய்தார்.

இந்தியாவுக்கு அமைச்சர் கபீர் ஹாசிம் அவரது மனைவியுடன் அண்மையில் சென்றிருந்தார். அவரை வர்த்தகப் பிரிவு ஆசனத்தில் அமர்ந்து பயணம் செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு அமைச்சர் ஹாசிம், வரி செலுத்துபவர்களின் பணத்தில் தாம் சொகுசுப் பயணம் மேற்கொள்ள விரும்பவில்லை என்று தெரிவித்து, வர்த்தக ஆசனத்தில் அமர மறுத்து விட்டார்.

கபீர் ஹாசிமின் அமைச்சின் கீழேயே, சிறிலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவை நிறுவனமும் உள்ளடங்குகின்றது. (வ-5)

# இறுவட்டு வெளியீடு

"இரக்கத்தின் இராகங்கள்" கிறிஸ்தவப் பாடல்கள் இறுவட்டு மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள குடும்பநல பொது நிலையினர் பணியக மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையம் கலையருவியின் சிறப்பு வெளியீடாக அருட்தந்தை தமிழ் நேசன் அடிகளாரின் எண்ணம், எழுத்து, இயக்கத்தில் இந்தப் பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஓமந்தை பதில் பங்குத்தந்தை அருட்தந்தை டக்ளஸ் மில்ரன் லோகு தலைமையில் இடம்பெறவுள்ள வெளியீட்டு விழாவில் முதன்மை விருந்தினராக மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு கிங்ஸ்லி சுவாமிப்பிள்ளை ஆண்டகை கலந்துகொள்வார். (ற-50)

# பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18
உடுவில் மகளிர் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று திங்கட்கிழமை பி.ப. 3மணிக்கு நடைபெறும்.

கல்லூரியின் முதல்வர் திருமதி சிராணி மில்ஸ் தலைமையில் பரிசளிப்பு விழா இடம்பெறும். பிரதம விருந்தினராக மதுரை பெண்கள் கிறிஸ்தவ கல்லூரி முதல்வர் கலாநிதி ரிட்லிவ் மாக்கிறற் வோல்டர் கலந்து கொள்வார்.

கல்வி, விளையாட்டு, கலாசாரம் மற்றும் பிறதுறைகளில் சிறந்து விளங்கிய மாணவர்களுக்குப் பரிசில்கள், விருதுகள், சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது. சிறப்பு நடனங்களும், பேச்சுக்களும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-50)

# கருத்தாடல்

கொழும்புத்துறை, ஜூலை18
பல்சமய கருத்தாடல் நிலையம் மற்றும் யாழ். ராகஸ்வரம் இசைமன்றத்தின் அனுசரணையில் ஒளிப்படங்களின் காட்சிப்படுத்தலும் கருத்தாடல் நிகழ்வும் யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது. நமது கிராமம் நமது மக்கள் என்னும் தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த நிகழ்வு இணைப்பாளரும் யாழ். ராகஸ்வரம் இசைமன்றத் தலைவருமான புகைப்படக் கலைஞர் ஜோ.எ.ஜஸ்ரின் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக கியூடெக் கரித்தாஸ் இயக்குநர் அருட்திரு.எஸ்.கியூஜின் பிரான்சிஸ் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ். சமூக மேம்பாட்டுமைய இணைப்பாளர் என்.சுசிந்தராஜ், யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி மருத்துவர் பி.யசிதரன், சாந்திகம் நிறுவன இயக்குநர் வி.முருகதாஸ், திருமறைக்கலாமன்ற பிரதி இயக்குநர் யோன்சன் ராஜ்குமார் பல்சமயகருத்தாடல் நிலை இயக்குநர் முகமட் இம்தியாஸ், புனித சாள்ஸ் மகாவித்தியாலய அதிபர் திருமதி கெ.கிறிஸ்ரபெல், கலாசார உத்தியோகத்தர் திருமதி சி.மாலினி ஆகியோர் கலந்துகொள்வர். (ற-135

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
சின்னப்பொடி
மணியம்

தோற்றம்
01.07.1942

மறைவு
29.07.2015

அன்பிலே சிறந்தவராய் மண்ணிலே உதித்து
அமைவுற்ற வாழ்வினில் நறுமணம் பரப்பி
இல்லத்தின் விருட்சமாய் பாசநிழல் தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய்
உரிமையாய் உணர்வை அன்பாய்ப் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
ஆண்டொன்று பறந்தோடிச் சென்றதனால்
என்றென்றும் அவர் பாசம் போற்றியே பணிந்திடுவோம்.

அன்னாரின் ஒருவருட நினைவு நாள் இன்று (18.07.2016)திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

54/09, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

# வன்புணரப்பட்டதை மறைக்குமாறு மிரட்டி அடித்தார் பெண் பொலிஸ்

## ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவில் சிறுமி முறைப்பாடு

வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட விடயத்தை சட்ட வைத்திய அதிகாரியிடம் கூறக்கூடாது என்று மிரட்டிய பெண் பொலிஸ் உத்தியோகத்தர் தனக்கு இடுப்பில் பலமுறை அடித்தார் என்று பாதிக்கப்பட்ட பதின்ம வயதுச் சிறுமி முறைப்பாட்டில் தெரிவித்தார்.

பஸ் நடத்துநர் ஒருவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சிறுமியொருவர் ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவில் கடந்தவாரம் முறைப்பாடு செய்தார்.

கடந்த ஜூன் மாதம் 19ஆம் திகதி பாடசாலை சென்று திரும்புபோது பாடசாலை பஸ்ஸின் சாரதியால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சம்பவத்தைப் பொலிஸாரிடம் கூறினால் பெற்றோரை கொன்று விடுவேன் என்று அந்த நபர் சிறுமியை அச்சுறுத்தினார்.

சிறுமி தனக்கு நேர்ந்த விடயத்தை பெற்றோருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து பெற்றோர், அப்புத்தளை பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாடு செய்வதற்காக கடந்த 7ஆம் திகதியன்று அப்புத்தளை பொலிஸ் நிலையத்துக்குச் சென்றபோது, "பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் என்னை அடித்து விட்டு சட்ட வைத்தியர் முன்கூட்டிச் சென்றார். பஸ்ஸின் சாரதி வல்லுறவுக்கு உட்படுத்திய விடயத்தை சட்ட வைத்திய அதிகாரியிடம் கூறக்கூடாது என மிரட்டிப் பல முறை இடுப்பில் அடித்ததார்" - என்று பாதிக்கப்பட்ட சிறுமி ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவில் செய்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்தார். "ஆனாலும், சட்ட வைத்திய அதிகாரியிடம் எனக்கு நடந்த விடயங்கள் அனைத்தையும், தான் கூறிவிட்டேன்" என்றும் அவர் கூறினார்.

சம்பவம் குறித்து அப்புத்தளை பொலிஸில் முறைப்பாடு செய்த போதும் பொலிஸார் எதுவித விசாரணைகளையும் மேற்கொள்ளவில்லை எனச் சிறுமியின் பெற்றோர் ஆணைக் குழுவிடம் கூறினர்.

சந்தேகநபர் செல்வந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதால், நீதிமன்றில் முற்படுத்தாது விடுதலை செய்யப்பட்டார் என்றும் பாதிக்கப்பட்ட பெற்றோரால் குற்றஞ் சாட்டப்பட்டது.

தாம் இன, மத ரீதியாக சிறுபான்மையினர் என்பதால் நீதிக்கான தமது கோரிக்கையை பொலிஸார் உதாசீனம் செய்தனர் எனவும் பெற்றோர் கூறினர். (ற-4)

# பாதுகாப்புச் சேவைகள் கல்லூரி அபிவிருத்திக்கு சீனா நிதியுதவி

பாதுகாப்புச் சேவைகள் கல்லூரியை அபிவிருத்தி செய்யும் வகையில் சீனத் தூதரகம் 3.2 மில்லியன் ரூபா நிதி உதவி வழங்கியுள்ளது.

பாதுகாப்பு அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் நிதிக்கான காசோலையை பாதுகாப்பு அமைச்சர் ருவன் விஜேவர்தன சீனத் தூதரக பாதுகாப்பு ஆலோசகர் மூத்த கேணல் லி செங்லின்டமிருந்து பெற்றார்.

நிகழ்வில் பாதுகாப்புச் செயலாளர் பொறியியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஏபிஜி கீத்சிறி, இரு பாதுகாப்பு சேவைகள் கல்லூரிகளின் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்திரி மந்திர சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 18

வலி. வடக்கு மக்களுக்காக ஒரு மாத கால காயத்திரி மந்திர சாதனை நிகழ்த்தப் படவுள்ளது.

உலக ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறுவனத்தின் இலங்கை வடபிராந்திய இணைப்புக் குழு இதனை முன்னெடுக்கின்றது என்று இணைப்பாளர் க.நல்லையா தெரிவித்தார்.

நாளை செவ்வாய்க்கிழமையிலிருந்து ஆரம்பித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி வரை இந்த நிகழ்வு நடைபெறும்.

வலிகாமம் வடக்கு மக்கள் கடந்த 25 வருட காலமாக இடம்பெயர்ந்து துன்பப்பட்டு தற்போது தமது சொந்த ஊருக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

இதனை விரைவாக நிறைவேற்ற காயத்திரி மந்திரத்தை ஓதி மக்கள் விரைவாக குடியேற சுவாமியை வேண்டவும் என்று அவர்கள் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

சங்கானை நிலையத்தில் காலை 6 மணியிலிருந்து 6.30 மணிவரையும், மாலை 6 மணியிலிருந்து 6.30 மணிவரையும் ஓதப்படவுள்ளது. நிலையத்துக்கு வர வசதி இல்லாதவர்கள் வீட்டில் மாலை 6 மணிக்குப் பின் குறிப்பிட்ட ஒரு நேரத்தில் அரை மணி நேரம் குடும்ப அங்கத்தவர்களுடன் சேர்ந்து ஓதலாம் என அவர் தெரிவித்தார்.

(ற-ரி)

# கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

திறந்த கலந்துரையாடல் களமான சமூக விஞ்ஞானப் படிப்பு வட்டம் கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் இந்த நிகழ்வு இடம்பெறுகிறது.

இந்தக் கலந்துரையாடலில் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியாவின் வெளியேற்றமும் அதன் தாக்கமும் என்ற தலைப்பில் அகிலன் கதிர்காமர் விசேட உரையினை நிகழ்த்துவார். தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். சமூக விஞ்ஞான ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். (ற-4)

# முதிரைக் குற்றிகள் மீட்பு

வவுனியா, ஜூலை 18

2 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் இளம் மருதங்குளம் வீதியில் சேமமடு காட்டுப் பகுதியில் கைப்பற்றப்பட்டுள்ளன என்று ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா ஓமந்தைப் பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையில் இந்த முதிரைக் குற்றிகள் கைப்பற்றப்பட்டன.

குறித்த மரங்கள் ஏற்றப்பட்டிருந்த வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-4,402)

# தேர்த் திருவிழா

அளவெட்டி, ஜூலை 18

அளவெட்டி தெற்கு அருள்மிகு ஸ்ரீமுத்து மாரி அம்பாள் தேவஸ்தான தேர்த்திருவிழா இன்று மு.ப.10 மணிக்கு விசேட பூசைகள் ஆராதனைகளுடன் இடம் பெறும். நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

(ற-36)

**நாகபூசணி திருமண சேவை**

மணமகன், மணமகள் அனைவருக்கும் பதிவுக் கட்டணங்கள் இலவசம். (17.07.2016 இலிருந்து 30.07.2016 வரை) நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்துதரப்படும். 7 நாள்களும் திறந்து வைக்கப்படும்.

383/14B , கோயில் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்
(நல்லூருக்கு வடக்குப் பக்கம்)
021 222 9306, 077 138 7596
Email:- nakapoosanywedding@gmail.com

**வாணி ரெக்ஸின்**
**விசேட ஆடித்தள்ளுபடி விற்பனை**

வாணி ரெக்ஸ்ரைலின்
ஆடிமாதத்தை முன்னிட்டு
விசேட
ஆடித்தள்ளுபடி



16.07.2016 தொடக்கம் 16.08.2016 வரையிலான காலப்பகுதியில் சகலவிதமான ஆடைகளுக்கும் 10% தொடக்கம் 30% வரையிலான அசத்தலான விலைக்கழிவுகள் வழங்கப்படும்.

எமது அனைத்து வாடிக்கையாளர்களும் தங்களுக்குத் தேவையான சகல ஆடைத் தெரிவுகளையும் பெற்று விசேட ஆடித்தள்ளுபடியினை அள்ளிச் செல்லுங்கள்



**Vani Tex**
**No.81,Grand Bazaar, Jaffna.**
**Tell: 021 222 5578**

**21 ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
**செல்வன் சௌந்தரராஜன்**
21 **ரிஷிஷாந்** 21



அச்சுவேலி தெற்கு நாவலம்பதியைச் சேர்ந்த சௌந்தரராஜன் - கிருஷ்ணவேணி தம்பதிகளின் செல்வப் புதல்வன்
ரிஷிஷாந்
இன்று (18.07.2016) திங்கட்கிழமை
21ஆவது பிறந்ததினத்தைத் தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடுகின்றார். அவரை அப்பா, அம்மா, பெரியப்பா, மாமாமார், அத்தைமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார், தம்பிமார் அனைத்துச் செல்வங்களும் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.
பெரியமாமா (டென்மார்க்)
நாவலம்பதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி

**சமையல் வேலை**

உடுவில் மகளிர் கல்லூரியின் விடுதியில் சமைப்பதற்கு அனுபவமுடைய ஆண், பெண் இருபாலாரும் அனுபவத்திற்குரிய சான்றிதழ்களுடன் 20.07.2016 புதன்கிழமை மாலை 3.00 - 5.00 மணிவரை பாடசாலைக்கு வருகை தரவும்.

**மணிவிழா நாயகனை வாழ்த்துகிறோம்**



**திரு. சின்னத்தம்பி கந்தசாமி**
**(SLPS -I)**
**(18.07.2016)**

நல் ஆசிரியனாய் நட்புமிகு அதிபராய்
கல்விப்புலத்தில் பணிசெய்து
வாழ்வுத்தளத்தில் வயது அறுபதை எட்டும்
அன்பரை வாழ்த்துகிறோம் !
வரங்கொடு இறைவா சீமான்
நூற்றாண்டு வாழ.

**வாழ்த்துவோர்:**
**மகாலிங்கசிவம் ஐயா குடும்பத்தினர்.**
**சிவா ஆசிரியர் குடும்பத்தினர்.**
**குருக்கள் குடியிருப்பு. வரணி.**

## பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி
## குடிசார் வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்

பிரதேச செயலரினால் குடிசார் வேலைகளுக்கு கேள்விகள் கோரப்படுகின்றன.

| | ஒப்பந்த பெயர் நிர்மாணம் | ஒப்பந்த தொகை (மில்லியன்) | கேள்விப் பிணைப்பணம் | செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| 1 | கோயில்வயல்-பலநோக்கு மண்டபம் | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 2 | இயக்கச்சி-பொதுநோக்கு மண்டபம் | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 3 | முகாவில்-கருவில் குளம்அணைக்கட்டு | 0.45(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 4 | முகாவில் -பற்றாவளை வீதி | 0.45(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 5 | மாசார்- சோமசுந்தரம் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 6 | சோறன்பற்று - கரந்தாய் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 7 | தர்மக்கேணி - வடிகால் | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 8 | புலோப்பளை- அரசன் குடியிருப்பு வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 9 | முல்லையடி-திராய்க்கரைபிள்ளையார் கோயில் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 10 | தம்பகாமம்-வண்ணாங்கேணி வடக்கு மத்திய வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 11 | பளை நகரம் - நரசிம்ம வைரவர் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 12 | புலோப்பளை மேற்கு உள்ளக வீதி | 0.99 வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 13 | அல்லிப்பளை பொன்கல்லம் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 14 | கச்சார்வெளி- செல்வபுரம் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 15 | அரசர்கேணி- நாகதம்பிரான் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 16 | இத்தாவில்- சேமக்காலை வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 17 | முகமாலை-மாணிக்கப்பிள்ளையார் வடிகால் | 0.99 வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 18 | வேம்பொடுகேணி நவனிவெளி அம்மன்கோவில்வீதி | 0.99 வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |
| 19 | கிளாலி தொம்மையர் வீதி | 0.99(வற் நீங்கலாக) | ரூபா20,000.00 | 31/10/2016 |

I. நிர்மாணப்பயிற்சி C9 or மேற்பட்ட அபிவிருத்தி நிறுவனத்தினால் இக்ராட்(ICTAD/CIDA) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்ததாரராக பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். அல்லது மாவட்ட, பிரதேச செயலகத்தில் ஒப்பந்த வேலைகளை செய்வதற்காக பதிவு செய்யப்பட்ட சமூக மட்ட அமைப்புக்களாக இருக்க வேண்டும்.

II. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த கேள்விதாரர்கள் கேள்விப்பத்திரங்கள் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை பச்சிலைப் பள்ளி பிரதேச செயலகத்தின் நிர்வாகக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம் (தொ.பே.இல.0212050042,பக்ஸ் 0212050041).

III. இருஅரக்கு முத்திரையிடப்பட்ட உறைகளில் (மூலப்பிரதி,பிரதி) தனித்தனியாக சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதி அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருத்தல் வேண்டும்.

IV. அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாவும் **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு பிரதேசசெயலகம், பச்சிலைப்பள்ளி, பளை** எனும் விலாசத்துக்கு 08.08.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன் கிடைக்கப் பெறல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

ப.ஜெயபாரனி
திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரும்,
பிரதேச செயலர்,
பச்சிலைப்பள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பதாவது அகவையில்
22 ஆம் ஆண்டு நினைவுகள்.....

தோற்றம்
07
.
01
.
1936



மறைவு
21
.
07
.
1994

அமரர் தம்பு துரைராஜா
(18.07.2016 திங்கட்கிழமை)
ஆடிச் சதுர்த்தசியில் எமைப் பிரிந்த ஐயாவின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து நிற்கும்

கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

அன்பு மறவாத
பாசமலர்கள்.

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ
மணிதீபத்தின்
31 ஆம் நாள் நினைவுகள்



அமரர்
சங்கரப்பிள்ளை
சுப்பிரமணியம்

தோற்றம்
10.01.1934

மறைவு
18.06.2016

மாதமொன்று ஆனதப்பா மாறவில்லை எம் துயரம்
மனம் கலங்கி வாடுகின்றோம்
வற்றவில்லை எம்கண்ணீர்
அப்பா உமை நினைத்து
அனுதினமும் அழுகின்றோம்
ஆத்மா சாந்தி அடைந்திடவே
அப்பா நாமும் வேண்டுகின்றோம்.

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

உங்கள் நினைவால்
வாடும்
குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்
நன்றி நவிலலும்



தோற்றம்
07.03.1925

மறைவு
18.06.2016

அமரர் கார்த்திகேசு கனகராசா

அன்பின் திருவுருவே பாசத்தின் உறைவிடமே அப்பா
அன்பையும் பண்பையும் தவிர
வேறெதையும் கண்டதில்லை உங்களிடத்தில்
நான் அழுதால் நீர் பொறுக்கீர்
இன்று மலையாய் அழுகின்றேன் வாரீரோ அப்பா! என் மகவாய்!

கடந்த 18.06.2016 சனிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கார்த்திகேசு கனகராசா அவர்களின் 29ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் 16.07.2016 சனிக்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. 31ஆம் நாள் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அவரின் மறைவுச் செய்தி அறிந்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து ஆறுதல்களும் உதவிகளும் நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி – கைதடி நுணாவில், சாவகச்சேரி,
தற்போதைய முகவரி – 50/21, ஆள்காட்டி வீதி, அரியாலை.

குடும்பத்தினர்.
இ.சுந்தரகுமார்
(மருமகன்)

# அரச வைத்தியசாலைகளில் இனி குருதிப் பரிசோதனைக்கு ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 18

அரச ஆதார வைத்தியசாலை மற்றும் அரச மாவட்ட வைத்தியசாலை என்பவற்றில் சகல விதமான குருதிப் பரிசோதனைகளையும் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

சகல வைத்தியசாலைகளுக்கும் ஒடோ அனலைஸர் இயந்திரம் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கூறினார்.

இந்த இயந்திரத்தின் மூலம் 3 செக்கன்களுக்கு 16 குருதிப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும். குருதிப் பரிசோதனைகளை அரச வைத்தியசாலைகளில் செய்து கொடுக்கவேண்டும் என்ற சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனால் அரச வைத்தியசாலைகளுக்கு அருகாமையில் குருதிப் பரிசோதனை நிலையங்களை நடத்த வேண்டிய தேவை ஏற்படாது எனவும் அமைச்சர் தெரிவித்தார். (ற-4)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
மயில்வாகனம்
குலசிங்கம்
திதி: வளர்பிறை சதுர்த்தசி
(18.07.2016)

மண்ணில்
01.09.1937

விண்ணில்
29.07.2015



ஆண்டுகள் கடந்து போகும் அரும்புகள் பூவாய்
காயாய், கனியாய் பின்னர் விதையாய் விருட்சமாய்-----
வளரும் வீழும்! மனதுக்கு நிம்மதி தந்து ---
தினமும் --- உங்கள் நினைவுகள்
என்றும் வாழும் பன்னிரு கரத்தான் கந்தன்
பதம் தொழும் வம்சம் வந்த
மன்னவன் குலசிங்கம் மாண்புற மன்னார் தன்னில்- இந்து மக்கள்
மதித்திடும் தலைவனாகி மகிதலம் போற்ற வாழ்ந்தாய்
பதி சிவன் பாதம் சென்றாய்
பரகதி பெற்று வாழ்வாய்.

துரை வீதி, இணுவில்.

குடும்பத்தினர்.

அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்
நன்றி நவிலலும்



அமரர் பொன்னையா சிவபாதம்
(சமாதான நீதிவான், முன்னாள் தலைவர் - பனை அபிவிருத்திச்சபை)

மலர்வு
03.02.1949

உதிர்வு
18.06.2016

கடந்த 18.06.2016 சனிக்கிழமையன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டு உதவிகள் புரிந்தவர்களுக்கும் வெளிநாட்டில் இருந்தும் உள்நாட்டில் இருந்தும் தொலைபேசி மூலமாகத் துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி உரையில் பங்கு கொண்டவர்களுக்கும் மலர்வளையம் சாத்தியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி துண்டுப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் இறுதிக் கிரியைகளுக்கு உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை காலை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நாளை (19.07.2016) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள தியாகி அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்திலும் (TCT Hall) இடம்பெற உள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

34, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## தமிழ்த்தின விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் தமிழ்த் தின விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரியின் தம்பையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது என தமிழ் மன்றத் தலைவி க. சிவசொரூபி தெரிவித்தார்.

தமிழ் மன்றத் தலைவியின் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுனரும் சொற்பொழிவாளருமான தமிழருவி த.சிவகுமாரன் கலந்து கொள்ளவுள்ளார். மாணவர்களின் கலைநிகழ்வுகளும் நடைபெறவுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி)

## சிவசிதம்பரத்தின் பிறந்த தின நிகழ்வுகள்

கரணவாய், ஜூலை 18

தமிழினத்தின் தலைவரும் முன்னாள் பிரதி சபாநாயகருமான மு.சிவசிதம்பரத்தின் 93ஆவது பிறந்த தின நிகழ்வுகள் கரவெட்டி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் நாளை இடம்பெறவுள்ளன.

கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத் தலைவர் உபாலி வி.சி. பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் கலந்து கொள்வார். அமரரின் நினைவப் பேருரையை நகரத் திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் நிகழ்த்துவார். கருத்துரைகளை அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், முன்னாள் மாவட்ட நீதிபதி இ.விக்கினராஜா மற்றும் யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் சி. சிவலிங்கராசா ஆகியோர் நிகழ்த்துவர். (ற-108)

## திருமுறைப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

அகில இலங்கைத் திருமுறை மன்றம் வருடந்தோறும் ஆடிமாத பூரணைத் தினத்தில் நடத்திவரும் திருமுறைப் பெருவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கு யாழ்ப்பாணம், பலாலி வீதி, இந்து சமயப் பேரவை அருள்மிகு ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக் கோயில் மகா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆலய காலைப் பூசையைத் தொடர்ந்து, அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறை பாராயணம், தலைமை உரை, அகில இலங்கைத் திருமுறை, இசைமாமணி பட்டத்துக்கான திருமுறைப்பண்ணிசை வகுப்பில் பயிலும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி, சிவதொண்டன் நிலைய மாண வர்களின் தேவாரப் பண்ணிசை, நாயன் மார் நால்வர், திருமுறைச் சுவடிகளுக்கு சோடசோபசார பூசை, திருமுறை இசை வல்ல ராகக் கௌரவம் பெறவுள்ள நுண்கலை மாணி செல்வி சித்திராசுந்தசாமியின் தேவார இன்னிசை, பண்ணிசை வல்லார் என்பன நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள் சிக்கினர்

## 70 லட்சம் ரூபா பெறுமதியுடைய 128 பவுண் நகைகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் உட்படப் பல்வேறு இடங்களில் கொள்ளையிடப்பட்ட சுமார் 70 இலட்சம் ரூபா பெறுமதியான 128 பவுண் நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவை கொழும்பு வரை கொண்டு செல்லப்பட்டு, நகைக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கொள்ளையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் சன்ஜீவ தர்மரட்ணவின் வழி நடத்தலில், யாழ் பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பரிசோதகர் வீரசிங்க தலைமையில் அமைக்கப்பட்ட தனிப் பொலிஸ் அணியினர் கொள்ளைச் சந்தேகநபர்களைக் கைது செய்தனர்.

கடந்த காலங்களில் குற்றம் மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களைத் தொடர்ச்சியாகக் கண்காணித்து வந்ததின் அடிப்படையில் கடந்த 11ஆம் திகதி சந்தேகத்துக்கு இடமான கார் ஒன்றைச் சோதனையிட்டபோது, அதிலிருந்து கொள்ளையிடப்பட்ட நகைகளில் சில மீட்கப்பட்டன.



சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன் அவரது கார் தடுத்து வைக்கப்பட்டது.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகள் கொழும்பிலுள்ள நகைக்கடை ஒன்றில் விற்பனை செய்யப்பட்டது தெரிய வந்தது. பொலிஸ் குழு ஒன்று கொழும்புக்குச் சென்று, உருக்கப்பட்ட நிலையில் கட்டிகளாக பவுணை மீட்டது என்றும், ஆபரணங் களாகவும் சில மீட்டது என்றும் பிரதி பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

மோசடியான வகையில் பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்ட 4 வங்கி கணக்குப் புத்தகங்களும் கைப்பற்றப்பட்டன. தொடர்ச்சியான விசாரணையின் மூலம் மேலும் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பல கொள்ளைச் சம்பவங்கள் தொடர்பில் மேலதிக தகவல்கள் கிடைத்துள்ளன. அவை தொடர்பான விசாரணைகள் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர். நகைகளும் நீதிமன்றில் பாரப்படுத்தவுள்ளன என்று யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண தெரிவித்தார்.

(ந-4,106,101)



## தனியார் பஸ்மீது தாக்குதல்; இரு சந்தேகநபர்கள் கைது

கிளிநொச்சி, ஜூலை 18

தர்மபுரம் - நெத்தலியாறுப் பகுதியில் தனியார் பஸ்ஸின் கண்ணாடி அடித்து நொருக்கப்பட்டது. தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 2 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

முரசுமோட்டைப் பகுதியில் சமாந்திரமாக வந்த இரண்டு மோட்டார் சைக்கிள்களை முந்திச் செல்வதற்காக பஸ் சாரதி ஒலிச் சமிக்ஞை செய்தார். இதையடுத்து பஸ்ஸை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வழி மறித்ததால் வாய்த் தர்க்கம் ஏற்பட்டது. பின்னர் தர்மபுரம் - நெத்தலியாறுப் பகுதியில் பஸ்ஸை மீண்டும் வழிமறித்த குறித்த இருவரும், சாரதியைத் தாக்குவதற்கு முற்பட்டனர். பஸ்ஸின் முன்கண்ணாடியையும் அடித்து நொருக்கினர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

தர்மபுரம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட சம்பவத்தை விசாரித்த பொலிஸார் ஒருமணி நேரத்துக்குள் குறித்த இரண்டு சந்தேகநபர்களையும் கைது செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ந-4)

## பன்னாட்டு நீதிபதிகளின் பங்களிப்புக்கு இலங்கை அரசை வலியுறுத்த முடியாது

### பிரிட்டன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18

பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு போர்க்குற்ற விசாரணையை முன்னெடுக்குமாறு இலங்கையை வலியுறுத்துவது நியாயமற்றது.

இவ்வாறு தெரிவித்தார் பிரிட்டனின் கன்சவேர்டிவ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் லோட்ஸ் நேஸ்பி.

ஈராக் போர் தொடர்பான அறிக்கை பிரிட்டன் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது. இந்த விவாதத்தில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவினதும், பிரிட்டனதும் நிலைப்பாடு ஆச்சரியமளிக்கின்றது. போர்க்குற்ற விசாரணையில் பன்னாட்டு நீதிபதிகளைக் கொண்டு விசாரிக்கக் கோருவது நியாயமற்றது. இது ஏற்றுக் கொள்ள முடியாதது. ஈராக் தொடர்பான விவகாரத்தில் பிரிட்டன் தனது நீதிபதிகளைக் கொண்டே விசாரணைகளை நடத்தியது. தன்னுடைய விடயத்தில் உள்நாட்டு நீதிபதிகளைப் பயன்படுத்திய பிரிட்டன், இன்னொரு நாட்டு விடயத்தில் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்பை கோருவது நியாயமற்றது" என்று லோட்ஸ் நேஸ்பி தெரிவித்தார்.

(வ-5)

## இளம் பெண் தவறான முடிவு

தென்மராட்சி, ஜூலை 18

வெளிநாட்டில் உள்ள பெற்றோரிடம் செல்ல முடியாமல் மனவிரக்தியுடன் வாழ்ந்ததாகக் கூறப்பட்ட 29 வயதுப் பெண் ஒருவர் தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்துள்ளார் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி கிழக்கு மறவன்புலவு வேலம்பிராயில் நேற்றுமுன்தினம் சம்பவம் இடம்பெற்றது.

இந்தப் பெண்ணின் பெற்றோர் சகோதரர்கள் உறவுகள் வெளிநாட்டில் வசிக்கின்றனர். அவருக்கு இன்னமும் விசா கிடைக்காததால் வெளிநாடு செல்ல முடியவில்லை. இங்கு அம்மம்மாவின் வீட்டில் வசித்து வந்ததோடு, கைதடி தொழிற் பயிற்சி நிலையத்தில் தொழிற் பயிற்சி பெற்று வந்தவர் எனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(வ-4)



எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், மன்னார் ஆயர் இல்லத்துக்குச் சென்று மன்னார் மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையைச் சந்தித்து நலம் விசாரித்தார். அவருடன் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசாவும் உடன் சென்றிருந்தார். முதலில் ஆயர் இல்லத்துக்குச் சென்ற எதிர்க் கட்சித் தலைவர் உள்ளிட்ட குழுவினர் மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகையைச் சந்தித்து உரையாடியதோடு ஆசி பெற்றனர். பின்னர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகையைச் சந்தித்து நலம் விசாரித்தனர். திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம்மானுவேல், ஆயரின் செயலாளர் அருட்தந்தை முரளிதரன் ஆகியோரும் உடனிருந்தனர். (ந-4,56)

## காணாமற்போன சிறுவன் கிணற்றில் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 18

கிளிநொச்சி - வட்டக்கச்சி புதுக்காடுப் பகுதியில் காணாமற்போன சிறுவன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த காந்தரூபன் தர்சன் என்ற சிறுவன் கடந்த 15ஆம் திகதி தொடக்கம் காணாமற்போயிருந்ததான். அவனைத் தேடும் பணிகளில் பெற்றோர் மற்றும் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு 10.30 மணியளவில் பாதுகாப்பற்ற கிணறு ஒன்றிலிருந்து சிறுவனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. சடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ந-4)

## கைக்குண்டு மீட்பு

வவுனியா, ஜூலை 18

வவுனியா - ஓமந்தையில் 6 கைக்குண்டுகளை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பனைமரம் ஒன்றின் கீழ்ப்பகுதியில் கைக்குண்டுகள் இருப்பதை அவதானித்த பொதுமகன் ஒருவர் ஓமந்தை கிராம அலுவலர் ஊடாகப் பொலிஸ் நிலையத்துக்கு அறிவித்தார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் கைக்குண்டுகளை மீட்டனர்.

(ந-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிருக பலியிடலுக்கான தடை நீடிப்பு யாழ். மேல் நீதிமன்றால்

## சட்ட ஆட்சிக்குக் கட்டுப்பட்டே காரியங்கள் இடம்பெறவேண்டும் என்றும் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஆலயங்களில் மிருக பலி கொடுப்பதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை யாழ். மேல்நீதிமன்று எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி வரை நீடித்தது.

இப்போது நடப்பது கலியுகம். சட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, சட்ட ஆட்சிக்குக் கட்டுப்பட்டே காரியங்கள் இடம்பெற வேண்டும். புராண இதிகாச வரலாறுகள் என்று தெரிவித்து தற்சமயம் காரியங்களைத் தொடர முடியாது என்று நீதிமன்று சுட்டிக்காட்டியது.

ஆலயங்களில்மிருகபலிகொடுப்பதை நிறுத்துவதற்குத் தடை ஆணைகோரி அகில இலங்கை இந்து மகா சபையின் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து தடையீட்டு எழுத்தாணை மனு ஒன்றை யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார். அந்த மனு கடந்த புதன்கிழமை யாழ். மேல்நீதிமன்றில் மேல் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் மேற்கு மற்றும் கோப்பாய் பிரதேசசபைகளின் செயலாளர்கள், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், தெல்லிப்பழை, சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய், கோப்பாய் ஆகிய பிரதேசங்களின் சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மிருக பலி கொடுக்கும் வேள்விக்கு ஏன் நிரந்தர தடை ஆணை பிறப்பிக்கக்கூடாது என எதிர் மனுதாரர்களுக்கு அறிவித்தல் வழங்குமாறும் மனுவில் மனுதாரர் கோரியிருந்தனர்.

மனுவைப் பரிசீலனை செய்த நீதிபதி கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி ஆலயங்களில் மிருக பலி கொடுப்பதற்கு எதிராக உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்திருந்தார்.

> “இடைக்காலத் தடை உத்தரவு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடை முறையில் இருந்து வருகின்றது. இக்காலப் பகுதியில் இந்த நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளித்து, மிருக வேள்வி பூசைகள் அனைத்துக் கோவில்களிலும் நிறுத்தப்பட்டன.”

எதிர் மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி, மிருக வேள்வி கடந்த 300 ஆண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருகின்றது, அதனை நடத்துவதற்கு அனுமதிக்க வேண்டும் என இடைபுகு வாதம் செய்தார்.

அகில இலங்கை இந்து மகா சபையின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, மிருக வேள்வி பலியை அனுமதிக்கக் கூடாது எனவும் வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுவதால், இடைக்காலத் தடை உத்தரவை நீடிக்குமாறும் மன்றைக் கோரினார்.

இடைக்காலத் தடை உத்தரவு ஏப்ரல் மாதத்தில் இருந்து நடைமுறையில் இருந்து வருகின்றது. இக்காலப் பகுதியில் இந்த நீதிமன்றத்தின் இடைக்காலத் தடையுத்தரவுக்கு மதிப்பளித்து, மிருக வேள்வி பூசைகள் அனைத்துக் கோவில்களிலும் நிறுத்தப்பட்டன.

இந்துக் கோவில்களில் வேள்வியின்போது, மிருக பலி கொடுப்பதற்கு இறைச்சிக் கடை சட்டத்தின் கீழ் பிரதேச சபை அனுமதி வழங்குவதா என்பதே இந்த வழக்கின் முக்கிய கேள்வி- என்று தெரிவித்த மேல் நீதிபதி இளஞ்செழியன் தடை உத்தரவை நீடித்து விசாரணையை ஒத்தி வைத்தார்.

(ந-4)



## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் கைது

வவுனியா, ஜூலை 18

வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் ஒரு கிலோ கேரளக் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் 28 வயதுடைய ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று வவுனியா போதை ஒழிப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியிலிருந்து வவுனியாவுக்குப் பொதி செய்யப்பட்டு எடுத்து வரப்பட்ட நிலையில் வவுனியா, மன்னார், முல்லைத்தீவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்பு பிரிவினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இந்தக் கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகநபர் மாமடு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார் என்று போதை ஒழிப்பு பிரிவினர் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் சந்தேகநபர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார் என்று மாமடு பொலிஸார் தெரிவித்தனர்.

(ந-4)

திறன்களால் நிறைவான நாடு
இலங்கை – ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGTI) கிளிநொச்சி



ஜேர்மனிய சனநாயக கூட்டுக்குடியரசின்
நிதி உதவியில் நிர்மாணிக்கப்பட்ட
இலங்கை - ஜேர்மன் பயிற்சி நிறுவனம் (SLGTI), கிளிநொச்சி
Deutsche Gesellschaft für Internationale Zusammenarbeit (GIZ) GmbH
மற்றும்
KfW Development Bank, Germany
ஆகியவற்றின் நடைமுறைப்படுத்தல் உதவியுடன் நிறுவப்பட்டுள்ளதுடன்,
2016, ஜூலை 18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு
அதிமேதகு மைத்திரிபால சிறிசேன
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி
மற்றும்
கௌரவ ரணில் விக்ரமசிங்க
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம மந்திரி
ஆகியோரின் பங்கேற்புடன் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது.
இந்நிகழ்வில்,
அதிமேதகு கலாநிதி. ஜுர்கென் மொர்ஹார்ட்
இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஜேர்மனிய சனநாயக கூட்டுக்குடியரசின் தூதுவர்
கௌரவ ரெஜினோல்ட் குரே
ஆளுநர், வடமாகாணம்
மற்றும்
கௌரவ நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன்
முதலமைச்சர், வட மாகாணம்
ஆகியோரும் பங்கேற்கவுள்ளனர்.

இவர்களை
கௌரவ மஹிந்த சமரசிங்க
திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி அமைச்சர்
மற்றும்
கௌரவ பாலித ரங்கே பண்டார
திறன்கள் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தொழில் பயிற்சி இராஜாங்க அமைச்சர்
ஆகியோர் வரவேற்கின்றனர்.







உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

SLGTI KFW NAITA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அனலைதீவு ஐயனார் ஆலய பெருந்திருவிழா நடைபெறுகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை நடந்த ஆறாம் திருவிழாவில் கைலாச வாகனத்தில் ஐயனார் வீதி உலா வருகிறார். (ற-9)

# உறவினர் விவரம் தராவிடில் விடுதியில் சேர்க்க முடியாது

## சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகம் அறிவிப்பு

தென்மராட்சி, ஜூலை 18
உறவினர்கள் இல்லாது வரும் நோயாளர்கள் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெற அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.
நோயாளர்களை வாகனங்களில் ஏற்றி அனுப்பி விட்டு உறவினர்கள் வீடுகளில் இருந்து விடுகின்றனர். நோயாளரிடம் தொலைபேசி இலக்கத்தைக் கூட பெற முடியாத நிலைமையில் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் வைத்தியசாலை நிர்வாகம் சிரமங்களை எதிர்கொள்கின்றது என்று சுட்டிக்காட்டப்பட்டது.
உறவினர்கள் இல்லாது சிகிச்சைக்குவரும்நோயாளர்களிடம் முழு விவரங்களையும் பெற முடியாத சந்தர்ப்பத்தில் அவர்களை விடுதியில் தங்க அனுமதிக்கக் கூடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
விபத்து மற்றும் ஆபத்தான நிலையில் நோயாளர்கள் கொண்டுவரப்படின் நோயாளர்களிடம் விவரங்கள் பெறமுடியாதவிடத்து வாகனச் சாரதியின்விவரங்களைப்பதிவுசெய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.
அண்மையில் சிகிச்சைக்குத் தனியாக வந்த முதியவர் ஒருவருக்கு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டது. நோய் குணமான பின்னரும் அவர் அங்கிருந்து போக மறுத்தார்.
அவரது உறவினர்கள் குறித்து எந்தத் தகவலையும் பெற முடியவில்லை. வேறொரு நோயாளர் மூலம் முதியவர் குறித்து அறிந்து அவரை வைத்தியசாலை நிர்வாகம் தமது செலவில் கிளிநொச்சியில் உள்ள உறவினர்களிடம் அனுப்பியுள்ளது.
வைத்தியசாலைகளில் எவ்வித தகவல்களையும் தராது சேர்க்கப்படுவோர் சாவடையும் சந்தர்ப்பங்களில் உரிமை கோரப்படாது நீதிமன்ற உத்தரவின்பேரில் அடக்கம் செய்யப்படும் நிலையும் காணப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# வீர மக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகள் வவுனியாவில்



வவுனியா, ஜூலை 18
வீர மக்கள் தின இறுதிநாள் நிகழ்வுகள் நேற்று வவுனியா கோயில்குளத்தில் நடைபெற்றது. புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் தோழர் க.உமாமகேஸ்வரன் நினைவு இல்லத்தில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.
புளொட் அமைப்பின் தலைவரும், யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், கட்சியின் செயலாளர் சு.சதானந்தன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் க.சிவநேசன், ஜி.ரி.லிங்கநாதன் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.
ஓய்வுபெற்ற அதிபர் சிவசோதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வினோ நோகராதலிங்கமும் நினைவுப் பேருரை நிகழ்த்தினர்.
கழகத்தின் ஜேர்மன் கிளையால் 2 மாணவருககு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் இறுதி நாள் நிகழ்வு சிறப்பு நினைவுரையை ஆற்றினார். (ற-4)

# யானைகளைக் கட்டுப்படுத்த 10 கிலோமீற்றர் மின்சார வேலி

## ஒட்டுசுட்டானில் இருந்து முத்துஐயன்குளம் வரை

முல்லைத்தீவு, ஜூலை 18
ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட சின்னச்சாளம்பன், பெரியசாளம்பன், தட்டயமலைக் கிராமங்களுக்கு மின்சார வேலி அமைக்கப்படவுள்ளது. இந்தக் கிராமங்கள் நீண்டகாலமாக யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டிருந்த நிலையில் தற்போது இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
ஒட்டுசுட்டான் 14ஆம் கட்டைச் சந்திக்கு அருகில் முதற்கட்டமாக யானை (மின்சார) வேலி முத்துஐயன்குளம் வரையான 10 கிலோமீற்றர் தூரம் அமைக் கப்படும். இரண்டாம் கட்டமாக மேலும் 20 கிலோமீற்றர் தூரத்துக்கு யானைவேலி அமைக்கப்படவுள்ளது.
இந்தக் கிராமங்கள் நீண்ட காலமாக யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டன. பயன்தரு மரங்களும், விவசாயமும் யானைகளால் அழிவைச் சந்தித்தன. அண்மையில் யானையால் தாக்கப்பட்டு ஒருவர் காயமடைந்தார். பிரதேச செயலகத்திடமும், வனவளத் திணைக்களத்திடமும் பாதுகாப்பு வேலி அமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் கோரியிருந்தனர். (ற-ரி7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓய்வுபெற்ற ஆசிரியர்களை சேவையில் இணைக்கத் திட்டம்

## பற்றாக்குறைக்கான தற்காலிகத் தீர்வாக

கொழும்பு, ஜூலை 18
ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தற்காலிகத் தீர்வு பெறும் முயற்சியாக ஓய்வுபெற்ற ஆசிரியர்களை மீண்டும் சேவையில் இணைக்கும் நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.
இவ்வாறு கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்தார். குருநாகலில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அவர் தெரிவித்ததாவது:
சில பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. அதைப் போக்குவதற்கு 60 வயதாகி ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள திட்டமிடப்பட்டது. இணைத்துக் கொள்ளப்படும் ஆசிரியர்கள் புதிதாக ஆசிரியர்கள் பயிற்சியை முடித்து வரும்வரை சேவையாற்றுவர்.
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளில் மாணவர்களை இணைத்துக் கொள்வதில் புதிய முறை உருவாக்கப்பட்டது. 50 வீத மானவர்கள் மாவட்டதிலும், 50 வீதமானவர்கள் பிரதேச செயலக மட்டத்திலும் உள்வாங்கப்படுவர் - என்றார். (ற-4)

# நாமல் ராஜபக்சவின் கைதில் அரசியல் பழிவாங்கல் இல்லை

## பொலிஸ் மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 18
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவின் கைது, அரசியல் நோக்கம் கொண்டதல்ல. நான் பொலிஸ் மா அதிபர் என்ற நிலையில் இருந்து இதைக் கூறுகின்றேன்.
இவ்வாறு பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தர தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
குற்றம் செய்தவர் எவர் என்பது முக்கியம் அல்ல. குறித்த செயல் சட்டத்துக்கு முரணானதா என்பேதே பார்க்கப்பட வேண்டும். குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரின் செயல் சட்டவிரோதமானது என்று தெளிவானதையடுத்து அடுத்த கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது.
கடந்த காலங்களில் அரசியல் பழிவாங்கல்கள் நடைபெற்றனதான். இந்தக் கைதுகளில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதே தவிர, அரசியல் பழிவாங்கல் அல்ல - என்றார். (ற-4)

# பலாலி விமானத் தளம் குறித்த கள ஆய்வு நடத்துகிறது இந்தியா

கொழும்பு, ஜூலை 18
பலாலி விமானத் தளத்தை பிராந்திய விமான நிலையமாகப் பயன்படுத்துவதற்கான களஆய்வை இந்தியமேற்கொண்டது.
அது பற்றிய அறிக்கை விரைவில் இலங்கை அரசிடம் சமர்ப்பிக்கும்.
பலாலி விமானத்தளத்தை அபிவிருத்தி செய்வதற்கான கள ஆய்வுகளை இந்திய விமான நிலைய அதிகார சபை மேற்கொண்டது என்று இலங்கை சிவில் விமானசேவை அதிகார சபையின் பணிப்பாளர் எம்.எம்.சி.நிமல்ஸ்ரீ தெரிவித்தார்.
விமான நிலையத்தின் ஓடுபாதை ஆயிரம் மீற்றரில் இருந்து 2 ஆயிரத்து 300 மீற்றராக விஸ்தரிப்பதற்கு கடந்த மகிந்த ராஜபக்ச அரசின் ஆட்சிக் காலத்தில் இந்திய அரசு ஒத்துழைப்புக்களை வழங்கியது. (ற-4)

# வரிச் சுமைகளை மக்கள் உணராது செயற்பட்டோம்

## மகிந்த எம்.பி. கூறுகின்றார்

கொழும், ஜூலை 18
நாம் அரசைப் பொறுப்பேற்றபோது, முந்தைய அரசு பாண் உண்ட கடனையும் செலுத்தினோம். தற்போதைய அரசு எம் மீது கொண்ட வெறுப்பால் சிறுபிள்ளைகளின் முன்பாகவும் எம்மை ஏசுகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்த ராஜபக்ச.
பெலியந்தவில் நேற்றுமுன்தினம் நிகழ்வொன்றில் அவர் கலந்து கொண்டார். அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
நாங்கள் செய்த மாற்றங்கள் சுமையாக இருக்கவில்லை. பாதைகள் செப்பனிடப்பட்டன. அதன் சுமை மக்களுக்கு விளங்கவில்லை. அதிவேகப் பாதை அமைத்தபோதும், மக்களுக்கு சுமை தெரியவில்லை. தற்போது வைத்தியசாலைக்குச் சென்றால் மருந்துகள் இல்லை. மருந்து எடுக்கச் சென்றாலே வரிச்சுமையை உணர்கின்றோம் - என்றார். (ற-4)



# கனேடிய அமைச்சர் இலங்கை வருகிறார்

கொழும்பு, ஜூலை 18
கனடாவின் வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் டியோன் இந்த மாத இறுதியில் இலங்கை வருகின்றார். 13 ஆண்டுகளின் பின்னர் இலங்கை வரும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் இவராவார். மூன்று நாள் பயணம் மேற்கொள்ளும் இவர்- ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமவீர ஆகியோரைச் சந்திக்கவுள்ளார். (ற-4)

# நல்லாட்சியை விமர்சித்து பேசுவதற்கு பிரபா கணேசனுக்கு அருகதையில்லை

## சாடுகின்றார் அமைச்சர் பழனி திகாம்பரம்

கொழும்பு, ஜூலை 18
மகிந்த ராஜபக்ச அரசின் காலத்தில்பெறப்பட்ட கடன்களாலும், அநாவசியச் செலவுகளாலும், மோசடி வர்த்தகத்தாலுமே நாட்டு மக்கள் கடன் சுமைக்கு ஆளாகினர். அது பற்றிப் பேச பிரபா கணேசனுக்கு எந்த அருகதையும் இல்லை.
இவ்வாறு சாடினார் அமைச்சர் பழனி திகாம்பரம்.
வற் வரி அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, புறக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது. அது குறித்து பிரபா கணேசன் ஊடகங்களுக்கு விளக்கமளித்தார். அதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் பழனி திகாம்பரம் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வரிகளை அதிகரித்து கடன் சுமையில் இருந்து மீள் எழுவதற்கே நல்லாட்சி அரசு பாடுபடுகின்றது. வரி அதிகரிப்பு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நடத்தப்பட்ட கடை அடைப்பு போராட்டத்தில் உள்வாங்கப்பட்ட மலையக இளைஞர்களைப் பிரச்சினையில் இருந்து காப்பாற்றவே நானும், மனோ கணேசனும் அங்கு சென்றோம். அதைக் கொச்சைப்படுத்திப் பேச பிரபா கணேசனுக்கு எந்த அருகதையும் இல்லை.
மகிந்த ராஜபக்சவை எதிர்த்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமத்தினோம். அதனால் மக்களுக்கு சேவையாற்றக் கூடிய அளவு அந்தஸ்துள்ள அமைச்சைப் பெற்றுள்ளேன்.
மகிந்த ராஜபக்சவுடன் இருந்த பிரபா கணேசன் என்ன செய்தார். ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் பொருள்கள் வாங்க நான் கடைக்கு போக தேவையில்லை. மகிந்தவின் ஆட்சிக்காலத்திலும் நான் கடைக்குப் போனதில்லை.
நடத்தப்பட்ட போராட்டம் நல்லாட்சி அரசைக் கவிழ்ப்பதற்கு மகிந்த ராஜபக்சவால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கை என்று நாம் கருகின்றோம். ஐக்கிய தேசியக் கட்சியின் அரசை இனிவரும் காலங்களில் கவிழ்க்க முடியாது என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றேன்.மக்கள் சேவகர் களான எங்கள் மீது அவதூறு பேசுவதற்கு பிரபா கணேசனுக்கு எந்த அருகதையும் இல்லை- என்றார். (ற-4)

# லசந்த கொலையில் கைதான இராணுவ அதிகாரிக்கு மறியல்

கொழும்பு, ஜூலை 18
லசந்த விக்ரமதுங்க கொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இராணுவ அதிகாரியை தடுத்து வைத்து, விசாரணை மேற்கொள்ள நீதிமன்று அனுமதித்தது.
சண்டேலீடர்பத்திரிகையின் ஆசிரியரான லசந்தவின் வாகனச் சாரதியைப் கடத்திச் சென்று விசாரணைகள் மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டிலேயே குறித்த இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டார். அவர் கல்கிசை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.
இராணுவப் புலனாய்வுப் பிரிவின் சார்ஜன் தர அதிகாரியான இவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார். (ற-4)

# உயர்தரப் பரீட்சை பெறுபேற்றின்படி கல்வியியல் கல்லூரிக்கு மாணவர்கள்

கொழும்பு, ஜூலை 18
2014ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த மாதம் வெளியிடப்படும் என்று கல்வியியல் கல்லூரிகளுக்கான ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.பண்டார தெரிவித்தார்.
புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளவதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனைகள் அடங்கிய அறிக்கை அமைச்சரவையின் அனுமதி பெறுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டது என்று அவர் தெரிவித்தார். கல்வியியல் கல்லூரிகளுக்கு 2014 ஆம் ஆண்டு புதிய மாணவர்களை இணைக்காதமையால் பல்வேறு சிக்கல்கள் எழுந்திருந்தன. (ற-4)

# அதிக விலைக்கு பொருள் விற்ற 99 வர்த்தகர்கள் மீது நடவடிக்கை

## நாடு முழுவதும் நடத்தப்படும் திடீர் சோதனைகளில் சிக்கினர்

கொழும்பு, ஜூலை 18
நிர்ணய விலைகளைவிடவும், கூடுதலான விலைக்கு பொருள்கள் விற்ற 99 வர்த்தக நிலையங்கள் மீது நுகர்வோர் விவகார அதிகார சபை சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.
நாடு முழுவதும் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சோதனையின் போதே வர்த்தகர்கள் சிக்கிக் கொண்டனர்.
310 வர்த்தக நிலையங்களில் சோதனைகள் நடத்தப்பட்டன. 200 பேர் கொண்ட அதிகாரிகள் குழு நாடு முழுவதும் இந்த சோதனைகளை மேற்கொண்டது.
கோழி இறைச்சி, சிவப்பு பருப்பு, நெத்தலி, கடலை, பயறு, ரின்மீன், வெண் சீனி, கோதுமை மா, இறக்குமதி செய்யப்பட்ட பால்மா மற்றும் உள்ளூர் பால்மா, இறக்குமதி செய்யப்பட்ட கிழங்கு, பெரிய வெங்காயம், செத்தல் மிளகாய், கட்டா கருவாடு, சாலயா மற்றும் மாசி கருவாடு, சஸ்டஜன் மா என்பவற்றுக்கு அரசு கட்டுப்பாட்டு விலை அறிவித்துள்ளது.
வர்த்தகர்கள் அவற்றை அதிக விலைகளுக்கு விற்பதால் நுகர்வோருக்கு நிவாரணம் வழங்கும் அரசின் நோக்கம் நிறைவேறாதுள்ளது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். (ற-4)

# சேருநுவரவில் கைகலப்பு 6 பேர் வைத்தியசாலையில்

கொழும்பு, ஜூலை 18
திருகோணமலை சேருநுவரவில் சிறுபான்மை இனங்களைச் சேர்ந்த இரு குழுக்கள் இடையே நேற்று கைகலப்பு ஏற்பட்டது. அதில் 6 பேர் காயம் அடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கைகலப்பை அடுத்து, அந்தப் பகுதியில் சிறிய பதற்ற நிலை ஏற்பட்டது. காணி விடயத்தில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியது என்று ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டது. பொலிஸார் இது குறித்து விசாரணைகளை நடத்துகின்றனர். (ற-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு / நிதி அமைச்சு/ கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

## அரசாங்கத்துடன் இணைந்து மொத்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தனியார் துறை நிறுவனங்களிலிருந்து முன்மொழிவுகளைக் கோரல்

2016 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் உள்நாட்டில் பொருள்களை விநியோகிக்கும் போது ஏற்படுகின்ற சமநிலையின்மையைத் தவிர்ப்பதற்காகவும் பொருள்களை விநியோகிக்கும் போது இடைத் தரகர்கள் பலர் தொடர்புபடுவதன் மூலம் பொருள்களை அசாதாரண விலையேற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கத்தினால் முறையான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், மொத்த வியாபாரத்தை நாடு பூராவும் விஸ்தரிப்பதற்காக அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து மொத்த வியாபார நிறுவனமொன்றைத் தாபிப்பதன் மூலம் நாட்டின் சகல பிரதேசங்களையும் உள்ளடக்கும் விதமாக அத்தியாவசிய உணவுப் பொருள்கள் உட்பட ஏனைய நுகர்வுப் பொருள்களின் பாதுகாப்புக் கையிருப்பைப் பேணுவதன் மூலம் சில்லறை வியாபார நிலையங்களுக்கு குறைந்தபட்ச விலைகளின் கீழ் தொடர்ச்சியாக வழங்குவதன் மூலம் தட்டுப்பாடின்றி நுகர்வோருக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

அரசாங்கமும் தனியார் துறையும் இணைந்து மொத்த வியாபாரத்தில் ஈடுபடுவதற்கு விரும்பும் உள்நாட்டு வியாபார நிறுவனங்கள் தமது முன்மொழிவுகளை 2016.07.25 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் விவரங்களை உள்ளடக்கியதாக பின்வரும் முகவரிக்கு அனுப்பவும். (முன்மொழிவுகள் அடங்கிய கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"அரசாங்கத்துடன் இணைந்து மொத்த வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்"** எனக் குறிப்பிடுக)

1) **உங்கள் நிறுவனத்தின் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதி**
2) **உங்கள் வியாபாரம் தொடர்பான வரிக் கோப்பு இலக்கம்**
3) **வியாபாரமுகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் தொடர்புகொள்கின்ற அலுவலரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்**
4) **உங்கள் நிறுவனத்தின் அனுபவம் பற்றிய விவரம்**
5) **விற்பனை செய்யப்படும் பொருள்களின் வகைகள் பற்றிய விவரம்**
6) **தேர்தல் தொகுதி அடிப்படையில் உங்கள் நிறுவனத்திற்குச் சொந்தமான தற்போது இருக்கின்ற விற்பனை நிலையங்கள் மற்றும் அமைவிடங்கள் பற்றிய விவரங்கள்**

**த.பெ.இல. 1529,**
**டீ.ஆர். விஜேவர்தன மாவத்தை.**
**கொழும்பு 01.**
**2016 ஜுலை 18**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## எத்தனை காலம் தான் ஏமாற்ற இன்னும் கணக்குப் போட இயலும்?

அரசியல் என்று ஒன்று இருக்க வேண்டுமாயின், "சுத்துமாத்து" அவசியமே என்று புதுவிதி எழுதும்போக்கு, இலங்கையில் அவ்வப்போது மேலெழுவது ஒன்றும் புதினம் அல்ல.

இப்போது, அந்த வகை சார்ந்த செயற்பாடு ஒன்று, இடம்பெயர்ந்த வலிகாமம் வடக்கு மக்களைக் குறி வைக்கிறது. அது என்ன, ஏது என்று அறிந்துகொள்வதற்கு, உங்கள் மனம் அவாவுகிறது அல்லவா?

கடந்து சென்ற 2012ஆம் ஆண்டில், எங்கள் நாட்டில் தங்களின் தேட்டமாக விளங்கிய சொந்தக் காணிகளை இழந்து, இடம்பெயர்ந்த மக்களில், 100 சதவீதமானோர், அவர்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்தப்பட்டு விட்டனர் என்று இலங்கை அரசின் மேலாளர்கள் நாக்கூசாமல், ஜெனிவா மனித உரிமைகள் சபையில் கூறி அனைத்துலக நாடுகளை ஏமாற்றினர் என்பது பழைய சங்கதி!

ஆனால் இன்னமும் அவர்கள் மீளக்குடியமர்த்தப்படவில்லை என்பதே உண்மையும், உள்ள நிலையும் ஆகும்.

இப்போது, விடுவிக்கப்படாத பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு காணிகள் வழங்குவதாக ஆசைகாட்டப்பட்டிருப்பதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சுற்றிச் சுற்றி வந்து பார்த்தால் --

வலி. வடக்கில் விடுவிக்கப்பட்ட பகுதிகளைப் பூர்வீகமாகக் கொண்ட காணியற்ற குடும்பங்களை புறக்கணித்துவிட்டு, விடுவிக்கப்படாத பகுதி மக்களுக்கு, மாற்றுக் காணிகளை வழங்குவதற்கு ஏற்பாடாகி வருகிறது!

இடம்பெயர்ந்தோர் பிரச்சினையை மூடி மறைக்கும்போக்கு, இது என்று பாதிப்புற்ற வலி. வடக்கு மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

1990ஆம் ஆண்டில் இடம்பெயரும் வேளையில், சிறுவர்களாக இருந்த பலரும், இன்று திருமணமாகி, (இரண்டு, மூன்று) பிள்ளைகளுடன் உள்ளனர்.

அவர்கள் தமது சொந்த நிலம் இன்றித் தவிக்கின்றனர்.

அத்தகையோருக்கு, அரச காணிகளில் 20 பேர்ச் நிலமும் வீட்டுத்திட்டமும் வழங்குவதாக ஆசை வார்த்தை காட்டப்படுகிறது.

பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதித்த நிலையே, வெட்ட வெளிச்சமாகத் தெரிகிறது!

இராணுவத்தினால் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களின் எந்தப் பகுதியிலேனும், நிலமற்ற தமக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்று நம்பியிருந்த மக்களுக்கு நல்லாட்சி அரசு எல்லாவற்றையுமே தலைகீழாக்கிக் காட்டுகிறது.

வலி. வடக்குப் பிரதேசத்தில் இதுவரை விடுவிக்கப்படாத -- படைத் தரப்பினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதிகளைச் சேர்ந்த நிலமற்ற மக்களுக்கு மட்டுமே, காணிகள் வழங்கப்படவுள்ளன!

விடுவிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எண்ணிக்கையை உலகுக்குக் குறைத்துக் காட்டி, அதன் அழுத்தத்தில் இருந்து தப்பும் கபட நோக்கத்துடனேயே, அரசு செயற்படுகிறது என்று சம்பந்தப்பட்ட தரப்பினர் ஐயுறவு கொள்கிறார்கள்.

2012இல் ஜெனிவாவில் மனித உரிமைகள் சபையில் வைத்து, இடம்பெயர்ந்த மக்கள் 100 சதவீதம் மீளக்குடியமர்த்தப்பட்டனர் என்று--

இலங்கை அரசு நாக்கூசாமல் கூறி "நாடகம்" ஆடியதும்; இதுவரை இடம்பெயர்க்கப்பட்ட மக்களில் பெரும் எண்ணிக்கையானோர் மீளக்குடியமரவில்லை; நலன்புரி நிலையத்து வாழ்க்கையையே நடத்துகின்றனர் என்பதும் அபத்த நிலையாகும்.

நேரத்துக்கு நேரம் நிலைமாறி, மீண்டும் குள்ள நரித் தனப்போக்குடன், அரசு கீச்சு மாச்சுத் தம்பளம் விளையாடுகிறது. தனது நல்லாட்சியின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கக்கூடாது என்றாவது எண்ணக் கூடாதா...??

# மறைக்கப்பட்டு விடுமா கொத்துக்குண்டு விவகாரம்?

சேரலாதன்

இறுதிப்போரின் போது படையினர் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவில்லையென முன்னாள் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா திட்டவட்டமாகத் தெரிவித்தார்.



கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்த வேண்டிய தேவை படையினருக்கு இருந்திருக்கவில்லையெனவும், கொத்துக்குண்டு போன்ற பாரதூரமான ஆயுதங்கள்படையினரிடம் இருந்ததில்லையெனவும் அவர்மேலும் தெரிவித்தார். ஆனால், அவரது கருத்துக்களை முற்றுமுழுதாக ஏற்றுக்கொள்ளமுடியாது. இறுதிப் போரின்போது அவரே இராணுவத் தளபதியாகப் பதவி வகித்திருக்கின்றார். படை நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்தார். இந்த வகையில் போர்க் குற்றம் எதையாவது அவர் ஏற்றுக் கொள்வாரா? என்பது சந்தேகமே. ஏற்கனவே காணாமற்போனோர் தொடர்பாக விசாரித்த ஆணைக்குழுவின் தலைவரான மக்ஸ்வெல் பரணகம கொத்துக் குண்டுகளை வீசியதில் தவறொன்றும் இல்லையெனத் தெரிவித்திருந்தார். ஆனால், பொன்சேகா ஒருபடி மேலே போய் கொத்துக் குண்டுகளைப் பயன்படுத்தவேயில்லையெனக் கூறியிருக்கிறார்.

கொத்துக்குண்டுகள் பேரழிவை ஏற்படுத்தக்கூடியன. போரொன்று இடம்பெறும்போதுகூட இதன் பாவனை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், உள்நாட்டில் இடம்பெற்ற போர் ஒன்றின்போது மக்கள்செறிந்து காணப்படுகின்ற இடங்களில் கொத்துக் குண்டு, களைப் பயன்படுத்தியமை பாரதூரமானதொரு குற்றச் செயலாகும். போர் இடம்பெற்ற பகுதியில் புலிகள் மட்டுமே இருந்திருக்கவில்லை. இலட்சக்கணக்கான அப்பாவி மக்களும் கூட அங்கிருந்திருக்கின்றனர். இவர்களுக்கெனப் பாதுகாப்பு வலயங்கள் கூட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. ஆனால், படையினர் இதையெல்லாம் பொருட்படுத்தவில்லை. எந்தவகையிலாவது புலிகளை அழித்துப் போரில் வெற்றியைப் பெறுவதே அவர்களது நோக்கமாக இருந்தது. இதன் காரணமாகப் பொதுமக்களின் உயிர்கள் ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை. இறுதிப் போரின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக போர் முடிவடைந்து ஏழு ஆண்டுகள் ஆகிய நிலையிலும் விசாரணை எதுவும் இடம்பெறவில்லை. சர்வதேச நீதிபதிகளா? அல்லது உள்ளூர் நீதிபதிகளா? என்ற விவாதம் மட்டுமே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நீதியான விசாரணைகள் இடம்பெறுவதற்கான அறிகுறிகளையும் காணமுடியவில்லை. இந்த நிலையில் கொத்துக்குண்டு விவகாரம் தொடர்பான விசாரணைகள் இடம்பெறுமா என்பது சந்தேகமே.

இதேவேளை-வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்த கருத்து ஒன்று நினைவுக்கு வருகின்றது. போர்க்குற்றத்துக்குப் படையினரைத் தூண்டியவர்களை விசாரித்துக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கப்படுமென்பதே மங்களவின் கருத்தாகும். அவர் கூறியது நடந்து விட்டால் சரத் பொன்சேகா உள்ளிட்ட வேறுபலர் தண்டனைக்குள்ளாக வேண்டிநேரிடும். ஆனால் இவை நடக்குமா? என்பதுதான் இன்றைய பிதான கேள்வியாகும்.

இறுதிப்போரில் பாதிக்கப்பட்ட தமிழர்களைப் பொறுத்தவரையில் மகிந்த அரசு, நல்லாட்சி அரசு என்பதில் வேற்றுமையைக் காண முடியவில்லை. அவர்கள் அழிவுகளை மேற்கொண்டார்கள். இவர்கள் அவற்றையெல்லாம் மூடி மறைக்கிறார்கள். உண்மையில் நல்லாட்சி ஒன்று நிலவுவதாக எடுத்துக்கொண்டால், போர்க்குற்றவிசாரணைகள் எந்தவிதமான பாரபட்சமுமின்றி இடம்பெறவேண்டும். குற்றவாளிகள் எவராக இருந்தாலும் தண்டிக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களின்தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். அகதி வாழ்க்கையை எவரும் வாழ்வதற்கு அனுமதிக்கக்கூடாது. ஆனால் இங்கு நடப்பதென்ன? இவ்வாறு இருக்கும்போது நல்லாட்சி இடம்பெறுவதாகக் கூறுவது எந்த வகையில் நியாயமானவை?

சரத்பொன்சேகா கூறிய கருத்தொன்றும் கவனிக்கத்தக்கது. கொத்துக்குண்டுகள் வீசியதாகக் கூறப்படுகின்றமை புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உயிரோடு இருப்பதற்குச் சமனானது என அவர் குறிப்பிட்டிருந்தார். அதாவது பிரபாகரன் இறுதிப் போரின்போது கொல்லப்படவில்லை எனச் சிலர் கூறுவது பொய்யென அவர் கூறுகின்றார். ஆனால், பிரபாகரனின் சாவு தொடர்பான மர்மம் இன்னமும் நீடித்துக் கெண்டுதான் இருக்கின்றது.

நந்திக்கடல் பகுதியில் காட்டப்பட்டது அவரது சடலமென்பதை மறுப்போரும் இருக்கத்தான் செய்கின்றனர். இதற்கு ஆதாரமாக பிரபாகரனின் சாவை புலிகளின் ஆதரவாளர்கள் அனுஷ்டிப்பதில்லையென்பதைச் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் அவரது சடலம் அவசரமாக அகற்றப்பட்டது ஏன்? எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். இவற்றுக்கெல்லாம் எங்கிருந்து விடைகிடைக்கப் போகின்றது என்பதும் தெரியவில்லை. சரத்பென்சேகா அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மோதல்களை உருவாக்குவதில் முக்கிய பங்கை வகித்தார் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம்தான். தமிழர்கள் கொடுப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கூறி வரும் இந்தப் பீல்ட் மார்ஷல் தான், இந்த நிலையில் கொத்துக்குண்டுகள் தொடர்பான உண்மைகளை அவரது வாயிலிருந்து எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? 1958 ஆம் ஆண்டில் இருந்து தமிழர்கள் இந்த நாட்டில் அனுபவித்த துயரங்கள் எல்லாமே மறைக்கப்பட்டு-மறக்கப்பட வைத்ததைப்போன்று கொத்துக்குண்டு விவகாரமும் மறைக்கப்பட்டு-மறக்கப்பட்டுவிடும் என்பது தான் யதார்த்தம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாற்றப்படும் தமிழர்கள்

மு.ஈழத்தமிழ்மணி

இந்த நாட்டில் 65 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது அரசியல் உரிமைகளை இழந்தும், திட்டமிட்டு பறிக்கப்பட்டும் தமிழர்கள் அவல வாழ்வு வாழ்கின்றனர். மாறி மாறி பதவிக்கு வருகின்ற அரசுகள் தமிழினத்தை வெறும் கறிவேப்பிலையாக பயன்படுத்தி வருகின்றன. ஐக்கிய தேசியக் கட்சியினரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் தேர்தல் காலங்களில் மாத்திரம் தமிழ்மக்களின் தேசியப் பிரச்சினை தொடர்பிலும் அவர் களின் அடிப்படைப் பிரச்சினைகளிலும் பிரச்சினைக்கான தீர்வு விடயத்திலும் உறுதி கொண்டுள்ளதாகத் தெரிவிப்பார்கள். தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைகளுக்கு ஆட்சிக்கு வந்தவுடன் தீர்வு காண்போம் எனத் தேனொழுகப் பேசுவார்கள்.

பதவிக்கு வந்ததும் அனைத்தையும் அடியோடு மறந்து விடுகின்றனர். தமிழ் மக்கள் இவ்விரண்டு ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு வந்த வரலாறுகள் ஏராளமாகும். கடந்த வருடம் ஜனவரி எட்டாம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில்தமிழ்மக்களின்பேராதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதியான மைத்திரிபால சிறிசேன வழங்கியுள்ள வாக்குறுதிகள் யாவும் தற்போதைய நிலையில் தமிழ் மக்களை ஏமாற்ற மடையச் செய்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரி, பிரதமரான ரணில் விக்கிரமசிங்க ஆகியோரது தலைமையிலான தேசிய அரசு என்ற நல்லாட்சி உருவாகி, 18 மாதங்கள் தாண்டி விட்டன. ஜனாதிபதி வடபகுதிக்குப் பல தடவைகள் வந்துள்ளார். நல்லாட்சியில் தமிழ் மக்கள் பல எதிர்ப்பார்ப்புகளோடு நல்லாட்சி அரசை எதிர்பார்த்திருந்தனர். நீதியான அரசியல் அதிகாரப் பகிர்வை தமிழினம் வேண்டி நிற்கின்றது. தேசிய இனப்பிரச்சினையின் பின்னணியில் தமிழ் மக்கள் என்றுமில்லாத வகையில் பெரிய இழப்புகளைச் சந்தித்து இன்றும் அதிலிருந்து மீள முடியாதவர்களாக அடிப்படைப் பிரச்சினைக ளைக் கூட முற்று முழுதாக தீர்த்து வைக்க முடியாமல் மைத்திரி-ரணில் நல்லாட்சி அரசானது இழுத்தடித்து வருகின்றது.

யதார்த்தத்தை உணர்ந்தேனும் தமிழ் மக்களின் நீண்ட காலப்பிரச்சினைகள் தொடர்பில் கரிசனை செலுத்த வேண்டிய தார்மீகப் பொறுப்பு மைத்திரி ரணில் கூட்டரசுக்கு உண்டு. புதிய அரசுபதவிக்கு வந்து 18 மாதங்கள் ஆகின்றன. வருடக் கணக்கில் கண்ணீர் சிந்தும் மக்கள் மைத்திரி அர சின் கவனத்தைவீர்க்கும் வகையில் வடக்கில் ஜனநாயகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எனினும் போராட்டங்களை அரசினர் கண்டுகொள்வதாகத் தெரியவில்லை. செவிடன் காதில் ஊதிய சங்காக ஆகிவிடுமோ என்ற அச்சம் தமிழ் மக்களை வாட்டி நிற்கின்றது.

> பதவிக்கு வந்ததும் அனைத்தையும் அடியோடு மறந்து விடுகின்றனர். தமிழ் மக்கள் இவ்விரண்டு கட்சியின் ஆட்சியாளர்களை நம்பியிருந்ததும் ஆட்சியாளர்களால் ஏமாற்றப்பட்டு வந்த வரலாறுகள் ஏராளமாகும்.

புதிய அரசானது பதவிக்கு வந்த பின்னர் இன்று வரையில் தமிழ் மக்கள் எதிர் நோக்குகின்ற நெருக்கடிகள் மகிந்த ஆட்சியில் எதிர்கொண்டதுபோல் தொடர் கதையாகிக் கொண்டு செல்கின்றது.

தமிழ் மக்களின் அரசியல்தீர்வு விடயத்திலும் சரி, அடிப்படைப் பிரச்சினைகளிலும் சரி தென்னிலங்கையின் கடந்தகால ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தவேயில்லை. புதிய நல்லாட்சி அரசு என்று சொல்லப்படுகின்ற மைத்திரி ரணில் தேசிய அரசும், ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகும். மகிந்த அரசின் வழியிலேயே தான் மைத்திரி அரசும் நடக்கின்றது என்பதை 18 மாதங்களில் தமிழ் மக்கள் உணர்ந்தனர்.

தமிழ் மக்களின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த புதிய அரசானது, தான் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறி வருகின்றது. இதனால் தமிழ் மக்கள் மத்தியில் இது தொடர்பில் பெரும் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாகச் சிறைகளில் வெளி உலகம் தெரியாதவாறு அடைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் அரசியல் கைதிகளை பொது மன்னிப்பின் பிரகாரம் விடுவிக்காதது, காணாமற் போனோர் விவகாரம் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள படையினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள தமிழ் மக்களின் நிலங்களை முழுமையாகவிடுவிக்காமை போன்ற விடயங்கள் யாவும் மைத்திரி அரசுக்கும் படையினருக்கும் சவாலாகவேயிருக்கின்றன.

தமிழ் அரசியல் கைதிகள் மூன்று நான்கு தடவைகளில் தங்களை நல்லாட்சி அரசு பொது மன்னிப்பளித்து விடுவிக்க வேண்டும் என்று கோரி, சிறைகளில் உணவுத் தவிர்ப்புப் போராட்டங்களை மேற்கொண்டிருந்தனர். சிலர் விடுவிக்கப்பட்டிருந்தாலும் பலர் தங்கள் வாழ்வு முழுவதும் சிறையிலே தான் கழிக்கவேண்டும் என்ற ஏக்கப் பெரு மூச்சோடு கலங்கி நிற்கின்றனர். 25 ஆண்டுகளுக்கு மேல் தங்களது சொந்த நிலங்களை படையினருக்குப் பறிகொடுத்து விட்டு வலிகாமம் வடக்கிலும் மற்றும் பல தமிழ்ப் பிரதேசங்களிலும் மீளவும் குடியேற முடியாமல் தவிக்கும் மக்கள்மைத்திரி அரசு காலம் கடத் திக் கொண்டிருப்பதை எண்ணி பெரு மூச்சு விட்டபடி உள்ளனர்.

தமிழ் மக்களது சொந்த நிலங்கள் உயர் பாதுகாப்பு வலயத்துக்குத் தொடர்ந்தும் தேவைப்படுவதால், அதனை எந்தக் காரணம் கொண்டும் வழங்க முடியாது, எனக் கதை விடுகின்றனர்.

கடந்த வருடம் மார்ச் மாதம் பிரதமரான ரணில் விக்கிரமசிங்க எங்களுடைய காணிகள் மீது எங்களுக்கு அக்கறை இருக்கின்றது. அதுபோல் தமிழ் மக்களுக்கு அவர்களுடைய காணிகள் மீது விருப்பம் அக்கறை இருக்கின்றது-இது நியாயமானது. அவர்கள் தாங்கள் வாழ்ந்த இடங்களில் திரும்பவும் வாழ்வதற்கு விரும்புவது ஏற்றுக் கொள்ளக் கூடியதே. காணிகளைத் தமிழ்மக்களிடம் கையளிக்கும்போது அவர் களுக்கு நம்பிக்கை ஏற்படும். அதுவே எங்களுக்குப் மிகப் பலமான பாதுகாப்பு அரண் என்று யாழ்.குடாவுக்கு வருகை தந்திருந்த வேளையில், முப்படையினர் மத்தியில் தெளிவாக அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதுமட்டுமன்றி இந்த நாட்டில் சிங்கள, முஸ்லிம் மக்களைவிடத் தமிழ் மக்களுக்கே அதிகளவு பிரச்சினைகள் இருக்கின்றன என்று முப்படையினர் மத்தியில் தனது அடிமட்டத்தில் எழுந்த கருத்துக்களையும் வெளியிட்டார் ரணில்.

ஒருவருடமான நிலையில் வலி.வடக்குப் பகுதியில் இராணுவத்தினரால் அழுங்குப்பிடியில் 25 ஆண்டுகளுக்கு மேலாக வைத்திருக்கின்ற தமிழ் மக்களின் நிலங்களில் ஒரு பகுதிகளை மட்டுமே விடுவித்துள்ள அரசானது, மிகுதிக் காணிகளை விடுவிக்க படையினர் முட்டுக் கட்டையாகவுள்ளனர். வடக்கில் பாது காப்புத் தேவைக்காக ஏற்கனவே அடையாளப்படுத்தப்பட்ட காணிகளையே சுவீகரிக்கின்ற நடவடிக்கைகள் நடைபெற்று வருவதாக பாதுகாப்பின் அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சியால் ஏப்ரல் மாத முற்பகுதியில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தினரின் நீண்டகாலத் தேவைகளுக்காக தமிழ்மக்களின் பூர்வீக நிலங்களை விட்டுக்கொடுக்க முடியாது என்ற நிலைப்பாட்டையே பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கருத்து சுட்டிக்காட்டுகிறது. யாழ்ப்பாணத்தில் தேசிய பாதுகாப்புக்குத் தேவையான அவசியமான காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட மாட்டாது என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

## கத்தோலிக்க சமயக் கட்டுரைகள் வழியாக அறிவு புகட்டும் உதயன் பத்திரிகைக்குப் பாராட்டுக்கள்

ஞாயிறு தினங்களில் கத்தோலிக்க ஆலயங்கள் பற்றிய ஒரு பக்கக் கட்டுரையை அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் ஆக்கத்தில் உதயன் பத்திரிகை வெளியிட்டு வருவது சிறப்பான விடயமாகும்.

காலத்துக்கு ஏற்ப எழுதப்படும் சிறந்த கட்டுரைகளை வாரா வாரம் வெளியிடுவதற்காக உதயன் பத்திரிகைக்கு நன்றிகளைத் தெரிவிக்கிறோம். சமய வேறுபாடின்றி நடுநிலைமை கருதி ஆற்றப்படும் இந்தப் பணி பாராட்டப்பட வேண்டியது.

மேலும், அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரால் எழுதப்படும் கட்டுரைக்கேற்ப பொருத்தமான சிறந்த படங்களையும் தேடி வெளியிட்டு வருகிறீர்கள். இது சிறப்பானதாகும். திருத்தந்தை பிரான்சிஸ் பற்றிய கட்டுரையில் அவரோடு கறுப்பின இளைஞன் செல்பி எடுக்கும் புகைப்படம், மடுப்பதியில் இலங்கையில் சமாதானம் வேண்டி திருத்தந்தை பிரான்சிஸ் சமாதானப் புறாவைப் பறக்க விடும் படம் மற்றும் மடு அன்னையை திருத்தந்தை பிரான்சிஸ் தாங்கி நிற்கும் படம் என்பன சிறப்பானவையாகும்.

பெல்ஜியம் புலம்பெயர் வாழ் மக்கள் மத்தியில் யாழ். நகரில் தொழிற்சாலைகளை நிறுவுங்கள் என்ற யாழ்.ஆயரின் வேண்டுகோளும் அதற்கமைவான படமும் சிறப்பானதாக இருந்தது.

இது தொடர்பாக கடந்த ஜூலை 3ஆம் திகதி, யாழ்.குடாநாட்டின் இன்றைய தேவை குறித்த யாழ். ஆயரின் பார்வை என்ற பொருளில் கே.எஸ்.சிவஞானராஜா வாசகர் திருமுகத்தில் கருத்து வெளியிட்டிருப்பது ஒரு பொதுவான சமயங்களுக்கு இடையிலான கருத்துரையாடல் களமாகவும் உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் விளங்குகின்றது என்பதற்குச் சான்று.

தொடருங்கள் தங்கள் பணியை என உதயன் பத்திரிகை ஆசிரியரை வாழ்த்தி அன்பான பாராட்டுக்களைத் தெரிவிக்கின்றோம்.

**ஞான ஆனந்தன்**
**கொழும்புத்துறை வீதி,**
**கொழும்புத்துறை.**

## பாடசாலைப் பெயரில் பணமோசடி

ஐயா! கடந்த 12ஆம் திகதி காலை சுமார் 8 மணியளவில் இளைஞர் குழுவொன்று மோட்டார் சைக்கிளில் வந்து தாங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து வருவதாகவும், அரநாயக்கா மண்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதி சேகரிக்க வந்திருப்பதாகக் கூறி ஒரு பெரிய புத்தகத்தை பணம் அன்பளிப்பு செய்தவர்களின் பெயர்களுடன் என்னிடம் தந்தார்கள். நானும் எனது பங்களிப்பாக 1000 ரூபா அன்பளிப்புச் செய்தேன். இவர்களின் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட எனது மனைவி திரும்பவும் அவர்களைக் குறுக்கு விசாரணை செய்தபோது தாங்கள் இது சம்பந்தமாக ஒலிபெருக்கி மூலம் அறிவித்ததாகக் கூறினார்கள். இதே பாணியில் அவர்கள் கட்டுடை, சண்டிலிப்பாய் பகுதிகளில் பலரிடம் பணம் வசூலித்துள்ளார்கள். இந்த விடயமாக நான் கொக்குவில் இந்துக் கல்லூரியுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது தாங்கள் இந்த விதமான நிதி சேகரிப்பில் எவரையும் ஈடுபடுத்தவில்லை எனக் கூறினார்கள். நான் இது விடயமாக அவர்களை உங்கள் பத்திரிகையுடனும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொண்டேன். தயவு செய்து உதயன் வாயிலாக இந்த விடயத்தைப் பொதுமக்கள் அறிந்து இந்த மோசடிக் குழுவினர் தொடர்பில் அவதானமாக இருக்க அறிவுறுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**இ.பத்மநாதன்,மானிப்பாய்**

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர். முகவரி. தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அல்வாய் வே
# அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன்
# தேர்த்திருவிழா சிறப்பு மலர் - 1

### ஆலய பிரதம குருவின் வாழ்த்து



" நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே
மஞ்சன நீர் பூசைகொள்ள வாராய் பராபரமே" பராபரக்கண்ணி

என்று தாயுமானவர் தன் பராபரக்கண்ணியில் குறிப்பிடுகின்றார். அதாவது பராபரமே என் உள்ளமே உனக்கு திருக்கோயில் உன்னைப் பற்றிய நினைவே நறுமணத்தூபம் உன்பால் வைத்த என் அன்பே உன்னை நீராட்டும் அபிடேக நீர் இத்தகைய எனது பூஜையை ஏற்றுக் கொள்வாய் என இறைவனை வேண்டுகின்றார். இத்தகைய நிலையே இறைவனை அர்ச்சிக்கும் ஒவ்வொருவரது உள்ளத்தும் இருக்க வேண்டும் என்பதற்கமைய இறைபரம் பொருளை அன்னையாகவும் தந்தையாகவும் அன்பு கொண்டு வாழும் நெறி சைவநெறி. அத்தகைய நிலையில் தாய்த்தெய்வத்திற்கு உயர் வழிபாடு இயற்றும் சைவப் பெருமக்கள் அல்வையூரில் வேவிலந்தைப் பதியிலே இறைவனை கோயில் கொள்ள வைத்து வழிபாடு இயற்றும் தொன்மை போற்றற்குரியது. இத்தகைய இறைவிக்கு ஆடிப்பூரணையில் தீர்த்த உற்சவத்தை மையமாக வைத்து பதினைந்து தினங்கள் நடக்கும் இவ் உற்சவத்தில் பதின்நான்காம் நாள் இரத உற்சவம் இன்று அன்னை தேர் ஏறிவந்து ஆன்மாக்களின் பாசவினை நீக்கி அறியாமை இருளை அகற்றி மலங்களை அழித்து வையத்துள் வாழும் வகை காட்டும் இந்நாளில் அம்பிகையின் அருளால் ஆணவம் நீங்கி கன்மம் ஒழிந்து மாயையில் இருந்து அனைவரும் விடுபட்டு வாழ இறைவியை வேண்டு கின்றேன். அன்னையின் புதல்வர்கள் விநாயகன், முருகன் ஆகியோர் முன்னே சித்திரத் தேரில் செல்ல தொடர்ந்து ஆண்களும் பெண்களும் வடம்பிடிக்க அன்னை வலம் வந்து அருள் பாலிக்கும் நிகழ்வினைக் காணும் கண்களே பெரும் பேறு பெற்ற கண்கள் எனவே இன்று இறை தரிசனம் செய்து அனைவரும் உய்வடைய அம்பிகையினை வேண்டி ஆசிகூறி வாழ்த்துகின்றேன்.

" போற்றி போற்றி அன்னையின் பாதக்கமலங்களுக்கு போற்றி"

**பிரம்மஸ்ரீ சதாசிவ சிவகுமாரக்குருக்கள் ஆலயபிரதமகுரு**

### முன்னைநாள் பொருளாளரின் வாழ்த்து



அல்வாய் வேவிலந்தைப் பதியில் எழுந்தருளி மெய்யடியார்க்கெல்லாம் அருள் பாலித்துவரும் ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு இன்று (18.07.2016) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழா. நம்மை ஈடேற்றுவதற்காக நம்மைப் பீடித்துள்ள மலங்களை அழிப்பதற்காக வீதி உலாவரும் அம்பிகையின் தேர்வடம் பிடித்திழுக்கும் இருபாலாரும் புண்ணியம் செய்தவர்களாவர். பாவ விமோசனம் பெற நல்லதோர் சந்தர்ப்பம். வருடத்துக்கு ஒருமுறை கிடைக்கின்றது. அடியார்களின் அரோகரா என்னும் பேரொலியில் அம்பிகையின் அருட்பிரவாகம் மேலெழுகின்றது.

வருடத்தில் அம்பாளுக்கு ஏறக்குறைய நூற்று ஐம்பது அபிஷேகங்கள். தைப்பூசம், அபிராமிப்பட்ட விழா இலட்சார்ச்சனை, சிவராத்திரி, பங்குனி உத்தரம், கும்பாபிஷேக தின 1008 சங்காபிஷேகம் வருடாந்த மஹோற்சவம், தீபபூஜை, சுமங்கலிப்பூஜை, வரலக்ஷ்மி பூஜை, கேதாரகௌரி, நவராத்திரி, கந்தசஷ்டி, திருவெம்பாவையுடன் மாதாந்தம் பூரணை, வாரந்தோறும் செவ்வாய் அபிஷேகம் போன்ற நிகழ்வுகளால் அம்பிகையின் அருட்பிரவாகம் மேலீட்டினால் மெய்யடியார்கள் சகல செல்வமும் பெற்று நல்வாழ்வு வாழ்கின்றனர்.

வருடாந்தம் அத்தியாவசிய திருப்பணிகள் நிறைவேறுகின்றன. நேரந்தவறாத பூஜைகள், ஆலய புனிதம் யாவும் அடியார்களை கவர்வனவாயுள்ளன. ஆலய வளர்ச்சியில் அக்கறையுடைய நிர்வாகிகளின் மஹோற்சவகால ஒத்துழைப்பு பாராட்டப்பட வேண்டியது. மஹோற்சவத்தைச் சிறப்பித்துக் கொண்டுவரும் பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ சி.சுரேஸ்வரக் குருக்களை மனதிலிருத்தி வணங்காதவர்கள் யார்? அவர் தம் தியாகத்தைப் பாராட்டாதவர்கள் யார்? மஹோற்சவ காலத்தில் அடியார்க்கு அன்னதானம் செய்யும் இந்து இளைஞர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.நம்மை மறைமுகமாக அழிக்கும் கொடிய மலங்களை சங்காரம் செய்ய உலாவரும் அம்பிகையின் தேர்த்திருவிழா சிறக்க, மெய்யடியார்கள் அம்பாளின் அருளைப் பெற்று புனிதர்களாக வாழ்த்துகின்றேன்.

**முன்னைநாள் பொருளாளர் - நா.சந்திரசேகரம்**

### பரிபாலன சபை பொருளாளரின் வாழ்த்து



சமயம் என்பதற்கு வழி, நெறி, மார்க்கம் எனப் பல பொருளுண்டு. இவை ஒவ்வொரு சொல்லும் இவ்வையத்துள் வாழும் வகையறிந்து அமைக்கப்பட்டவை என்பதில் எதுவித கருத்து வேறுபாடும் கிடையாது. மனிதனை வழிப்படுத்துவன சமயங்கள், மனிதனை நெறிப்படுத்துவன சமயங்கள். மனிதன் மார்க்கமாக ஏற்றுக் கொள்வன சமயங்கள் எனவே சமயம் என்பது மனிதனை மாக்களாக்காது மனிதனாக வாழ வைப்பவை என விளக்கம் கொள்வர்.எனவே அந்தவகையில் சைவசமயம் மாதம் தோறும் பல்வேறு கிரியை நெறிகள் விரதங்கள் எனப் பல தினங்களைக் கொண்டவை. இவை ஒவ்வொருவரது வாழ்வையும் செம்மைப் படுத்துவன. பூரணப்படுத்துவன. எனவே இத்தகைய உயர்வான எமது சமுதாயத்தில் ஆலய உற்சவங்கள் ஊர் ஒருமைப்பாடு ஊர் ஒற்றுமை கூட்டுணர்வை வளர்ப்பனவாக அன்றுதொட்டு இன்றுவரைக்கும் நோக்கப்படுகின்றது. இதனையே கவிஞர்கள் நோக்கப்படுகின்றது. இதனையே கவிஞர்கள் தமது கவிதையில் சிறப்பாகக் காட்ட முனைவர்.

'ஊரெல்லாம் கூடி ஒருதேர் இழுக்கிறதே
வாருங்கள் நாமும் வடம்பிடிப்போம்'

என அனைவரும் ஒன்றிணையும் இன்றைய நன்நாளில் அன்னை தேரேறி வந்து தனது கடைக்கண் பார்வையினால் அருள் சுரக்கும் இனிய திருநாள் இந் நன்நாளில் அன்னையின் வடத்தில் நாமெல்லாம் ஒன்றிணைந்து பற்றி பாசவின்ன அறுந்து இவ் உலகில் நல்ல மனிதர்களாக, வழிகாட்டிகளாக, அன்புள்ளங்களாக, மற்றவர்களை நேசிப்பவர்களாக வாழ்க்கையே உயர்நெறி வாழ்வே சிறப்பான அம்சம் என ஒன்றிணைவது மிகமிக முக்கியமானது. அன்னையின் அளப்பரிய திருப்பணிகளுக்கு அள்ளி வழங்கி அன்னை ஆலயம் தொடர்ந்தும் பெருவளர்ச்சி கண்டு உயர்ச்சி பெற வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். வேவிலந்தை பதியாளின் அருள் அனைவருக்கும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

**-திரு.க.புவனேந்திரன்**
**பொருளாளர் ஆலய பரிபாலன சபை.**

### மஹோற்சவ குருக்களின் ஆசிச்செய்தி



நிகழும் மங்கலகரமான துர்முகி வருஷ ஆடிமாதம் 3ஆம் நாள் (18.07.2016) சந்திரனுக்கு உரிய வாரமான திங்கட்கிழமை அம்பிகை அதிபதியாக விளங்குகின்ற நன்னாளிலே சித்திரத்தேரேறி பவனி வருகின்ற காட்சியை அனைத்து அடியார்களும் தரிசிப்பதோடு வடம்பிடித்து இழுக்கின்ற பேறு கிடைக்கின்றது. உணர்வு பூர்வமாக அம்பிகையின் பக்தி வெள்ளத்தில் உள்ளமுருகி அம்பிகையிடத்தில் வேண்டிய வரங்களைப் பெற்று இவ்வையகத்தில் அனைவரும் பதினாறு பேறுகள் பெற்று பெருவாழ்வு வாழ்வதற்கு அம்பிகை அவருடைய கடைக்கண் பார்வையினால் தீயவற்றை அழிதது நல்லவற்றை தந்து ரட்சிக்கும் பொருட்டு அல்வாய் வேவிலந்தைப்பதி மஹா முத்துமாரி அன்னை யந்திர சாநித்தியம்.

மூர்த்தி சாநித்தியம், மந்திர சாநித்தியம் என்பவற்றைக் கண்டி யாகத்தின் அருளாலும் மஹோற்சவத்தின் அருளாலும் அனைவருக்கும் இறைவியினுடைய பரிபூரண அருள்கிடைக்கும் என்பதில் எதுவித ஐயமுமில்லை. குருவாகிய நான் வெளிநாடுகளிலும் உள்நாடுகளிலும் வசிக்கின்ற அனைத்து அடியவர்களுக்கும் பத்திரிகை மூலம் அம்பிகையினுடைய பாதக் கமலங்களைப் பணிந்து ஆசி கூறுகின்றேன்.

**-தி.சுரேஸ்வரக் குருக்கள்**
**அல்வாய் முத்துமாரி அம்மன் லண்டன் ஈழபதீஸ்வர ஆலயகுரு.**

### ஆலய பரிபாலன சபை தலைவரின் வாழ்த்து



அன்னை ஆதிபராசக்தி ஆன்மாக்களின் தாயாக அண்டங்கள் அனைத்தையும் காத்து அரவணைத்து அல்வை வேவிலந்தை பதியினிலே கோயில் கொண்டு அருளாட்சி புரிகின்றாள். அன்னையின் அருட்கடாட்சத்தினால் ஆயிரம் ஆயிரம் அடியவர்கள் ஈர்க்கப்பட்டு இன்று வடபகுதியிலே சிறப்பான ஓர் அம்பாள் ஆயைமாக விளங்குகின்றமை எமது ஊருக்குக் கிடைத்த பெரும் பேறு.

அல்வாய் வேவிலந்தைப் பதியாள் என்றால் புனிதம், பூஜை ஒழுங்குகள் நித்திய நைமித்தியக் கிரியைகள் மிகவும் உன்னதமாக நடைபெறுவதனை அடியவர்கள் கண்டு திருப்தி கொள்வதனைப் பார்க்கின்றோம். இத்தகைய உயர்வு மிகு அன்னை முத்துமாரி இன்று தேரேறி வந்து அடியவர்களுக்கு அருள்பாலித்து அவர்கள் இவ் வையத்துள் வாழ்வாங்கு வாழும் வண்ணம் தன் பிள்ளைகளாக அடியவர்களை அரவணைக்கும் அற்புத மருந்தாக அன்னை விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

அன்னையின் திருவருளால் அன்று மடாலயமாக இருந்த எம் ஆலயம் இன்று உயர்வு பெற்று பல திருப்பணி வேலைகளை நிறைவு செய்து ஆலய வாயில் கோபுரம் அமைந்து உயர்வு பெறவும் திருவுளம் கொண்டுள்ளாள். இத்தகைய பெருமளவு திருப்பணிகளுக்கும் அள்ளி அள்ளி கொடுத்த அன்னையின் அடியவர்கள் அனைவருக்கும் தலைவர் என்ற வகையில் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னையின் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டுகின்றேன். இதுவரை காலமும் இல்லாத அளவு சிறப்புப் பெற்று இன்று உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அன்பர்கள் பலர் இவ் ஆலய வளர்ச்சியைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சியினால் அள்ளி வழங்குவதனால் அவர்களுக்கு அருளாட்சி கிடைக்கப்பெற்று உயர்வு காண்கின்றனர்.

ஆலயப்பணி அளப்பரியது. ஆண்டவன் சந்நிதியில் மனிதர்கள் யாவரும் சமம். அன்னை அடியவன் என்ற வகையில் அன்னையின் அருள்மழையில் நாமெல்லாம் கலந்து அருளாட்சி பெறுவோம். அனைவருக்கும் அன்னையின் கடைக்கண் பார்வை அருளை வழங்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

" அம்பிகையைச் சரண் அடைந்தால் அதிக வரம் பெறலாம் "

**திரு சி.கணேசமூர்த்தி** - தலைவர், ஆலயபரிபாலனசபை.



தமிழர் தாயகத்தை வன்னி மன்
மழவராயர், மாப்பாணர், மணிவீரர் மு
வீரமாப்பாணர் முதலியார், குமார
என்று எல்லோராலும் அழைப்படுவர். இ
அதன் அதீத ஆற்றல் பற்றியும் ஊர்மு
தரும். ஒரு குளம், ஒரு கிணறு, ஒரு குகை, துலுக்கன் கோ
அழைக்கப்படும் மாயக்கைப் பிரதேசம்.

உடம்பே தெரியாது நீட்டிய ஒரு கையினை உடைய ஒ
அதிகம். அவர் அடிக்கடி அக்கம்மா அக்கம்மா என கூச்சலிடு
அவருக்கு அதிக பிரியம். விதவை ஆகையால் வெண்பட்டு உ
வெண்கல சிலையை வாங்கி வந்து தனது வீட்டில் வைத்து பூ

அந்த அம்மனை தனக்கு பின் யார் ஆதரிப்பார் என்ற
வேவிலந்தைக் காணி எனது தலவிருட்சமாகத்தோன்றிய வே
அது தான் எனக்கு பிடித்த இடம். அங்கே என்னை வைத்து
இத்திருத்தலம். வள்ளியின் வம்சாவழியினர் பராமரித்து வர
உறுப்பினர்கள் எனவும் 5 பரிபாலன உறுப்பினர் என்பதும்
காலப்போக்கில் கோயில் பொது நிர்வாகமாக அமைய வேண்
ஆலயம் பொதுவுடமை ஆனது .அதனைத் தொடர்ந்து 10 நாள்
வேளாண் குடிமக்களுக்குமாக மாற்றப்பட்டு இன்றும் நடை
பொறுப்பேற்று பலதிருப்பணிகளை முன்னெடுத்தது. மீண்டும்

மீண்டும் 1993 இல் புதிய நிர்வாகசபை தோன்றிய போது
மீண்டும் 1999 இல் புதிய நிர்வாகசபை பொறுப்பேற்றதுடன்
புலம்பெயர் அன்பர்களின் பெருநிதியினாலும் பிரம்மாண்ட தி
உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும் அம்பிகையின் ம
சுமங்கலி பூஜை . பக்தோற்சவம், வசந்தோற்சவம், சப்பறத்தி
ஆலயத்தின் திருப்பணிகள் மிகவும் உன்னதமானபணியாக
சபைக்கு கிடைத்த தலைவர் திரு.சி. கணேசமூர்த்தி அவர்க
ஒத்துழைப்பு ஆகும். அம்பிகைக்கான சித்திரதேர் விநாயகர்
.இராஜகோபுரம், அதற்கப்பால் மணிமண்டம், அம்பிகையின
சுரபியாக விளங்கும் அன்னதானமடம் நவக்கிரக மண்டபம்
அமைந்து விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. ஓசை செ
அருட்கொடையான 50 இலட்சம் ரூபா செலவில் 1600 கிலோ

இந்த ஆண்டில் ஆலயமுகப்பில் வாயில் கோபுரமும் அ
வணங்கும் வகையில் 24 மணிநேரமும் கண்காணிப்பு க
இன்று ஈழவளநாட்டில் உன்னத சக்தி ஆலயங்களுள் ஒன்ற
நடைபெறும் உற்சவங்கள் யாவும் சிறப்பான முறையில் ஒழு
சுமங்கலி பூஜை தீப வசந்த உற்சவம் மஞ்சத்திருவிழா. வரல
பூரணை உற்சவம் என்று அனைத்தும் சிறப்பாக நடைபெறு

" மு
தொகுப்

### அன்னையின் வடம் பிடிக்க அணிதிரள்வோம்



அல்வாய் வேவிலந்தைப் பதியினிலே குடிகொண்டு ஆண்டுபலவாக வேண்டும் வரம்தரும் வேவிலந்தைப் பதியாளாகி இன்று ஆயிரம் ஆயிரம் அடியவர்களைத் தன்னகத்தே கொண்டு அருளாட்சி நடத்தும் அம்பிகை இன்று அடியார்களுக்கு அருள் சுரக்க இரதமேறி வருகின்றாள். வாருங்கள் நாமும் வடம் பிடிப்போம்.

ஆண்டுதோறும் அன்னையின் ஆலயத்தின் மஹோற்சவம் ஆடிப் பூரணையை சமுத்திர தீர்த்தமாகக் கொண்டு நடைபெறுவது யாவரும் அறிந்ததே. அன்னைக்கு நடைபெறும். பதினைந்து நாள் உற்சவங்களும் மிகவும் சிறப்பானது. இக்காலத்தில் நவசக்தி அர்ச்சனை பக்தோற்சவம், திருவிளக்குப் பூசை, சுமங்கலிப்பூஜை, வசந்தோற்சவம் மற்றும் வேட்டைத் திருவிழா, தேர்த்திருவிழா, சமுத்திரத் தீர்த்தம் எனப் பலவும் சிறப்பு வாய்ந்தவை என்றால் அது மிகையாகாது.

அன்னையின் அடியில் சரண்புகுந்த நாம் அன்னைக்கு எத்தனை திருப்பணிகளை மனதார செய்தோம்: அதில் ஆலயம் இன்று புது வளர்ச்சி கண்டுள்ளது.நேரம் தவறாத பூஜைகள் மக்கள் மனங்கவரும் வகையிலான ஒழுங்கமைப்புகள், ஆலயத்தின் புனிதம் இவையாவும் அன்னையின் ஆலயத்தே சிறப்பானவை.

ஆலய வளவு அன்று வேவியும் இலந்தையும் சேர்ந்ததினால் வேவிலந்தைப் பதியாயிற்று. வேவிலந்தை அன்னைக்கு சித்திரத்தேர்கள் அமைத்தோம் அன்னையின் புதல்வர்களும் சித்திரத்தேரில் பவனிவரும் அழகு அன்னைக்கான மஞ்சம் அமைத்தோம்.

எத்தனையோ அழகு செழிப்பு மிக்கதாக எமது ஆலயம் இன்று புதுப்பொலிவு பெற்றுள்ளது.எனவே மக்கள் அனைவரும் ஒற்றுமையாக எமது ஊருக்குக் கிடைத்த அருமருந்தான அன்னையைப் போற்றி அவளின் திருவடிகளில் சரண் புகுந்து அன்னையின் அருளாட்சியில் நாமும் திளைப்போம்.

வாருங்கள் அணியணியாய் வடம்பிடித்து மகிழ்ந்திடுவோம்.

**-திரு.வே.பராஜசிங்கம்**
**முன்னைநாள் செயலாளர், ஆலய பரிபாலனசபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவிலந்தை
# ன் தேவஸ்தான
# - 18.07.2016

### தேரேறி வருகின்றாள் தேவி



ஆத்தாள் அண்டமெல்லாம் பூத்தாள் பூத்தவண்ணம் காத்தாள் மாதுளம்பூ நிறத்தாள் என அன்னை அபிராமவல்லியாக உலக மாதாவாக தாய்த்தெய்வமாக தொன்றுதொட்டு வழிபடப்படும் அம்பிகைக்கு இன்று இரதோற்சவம். ஆன்மாக்களின் ஈடேற்றத்துக்காக இறைவன் தனது சொரூப நிலையில் இருந்து தடத்த நிலைக்கு இறங்கி வந்து அருள்பாலிக்கும் உன்னதநாள். இத்தகைய உயர்வு மிக்க இறைவியின் அருள்மழையில் நாமும் நனைவோம். ஆனந்த பெருவாழ்வு வாழ்வோம். அனைவரும் அணியணியாக திரண்டு அன்னையின் வடம்பிடிப்போம் என வேண்டுகின்றேன்.

அல்வாய் வேவிலந்தைப் பதியில் அருளாட்சி புரியும் அன்னை இன்று ஆன்மாக்களின் ஆணவமலம் அடக்கி அண்டமெல்லாம் தீதொழித்து அனைத்து அடியவர்களும் இன்புற்று இருக்க இணையிலா அருள்மழை பொழிய வேண்டுகின்றேன்.

எத்தனை ஆயிரம் அடியவர்களின் மனக்கண்ணில் இடம் பிடித்திருப்பவளின் வடம் பிடிக்க அனைவரும் திரண்டு வாருங்கள். தேரேறி வந்து தேவி அருள் சுரக்க இருக்கும் அன்புக் காட்சியை நாமும் அனுபவிப்போம். அவளின் திருப்பணிக்காக அள்ளி வழங்குவோம். ஈழத்தில் உள்ள சக்தி ஆலயங்களுள் இணையிலா ஆலயமாக எம் ஆலயத்தை உயர்வு பெற வைக்க அன்னை திருவுளம் பூண்டுள்ள இவ்வேளை அவளின் பாதக் கமலங்களைப் போற்றி பாசங்கள் நீங்கி வையத்துள் வாழும் வகை அறிந்து வாழ்வோம். அன்னையின் வடம்பிடித்து அவளிடம் இடம்பிடிப்போம் என வாழ்த்தி வணங்குகின்றேன்.

**-திரு.ச.குமாரதேவன் தர்மகர்த்தா சபை உறுப்பினர்.**

### மண்ணிலும் விண்ணிலும் நல்லருள் பெறுவோம்



அண்டசராசரங்களை ஆளும் ஆதிபராசக்தி முத்துமாரி, திருமேனி தாங்கி மூவுலகையும் ஆளத் திருவுளங்கொண்டு அல்வையம்பதியில் விரும்பி உறைந்துள்ளாள். இயற்கையில் அமைந்துள்ள மரங்கள் சமூகத்துக்கு நிழலையும் வாழ்வையும் வழங்குகின்றன. அவ்வியற்கையைப் போற்றி வழிநடப்போமாயின் அமைதியும், சுகமும், சாந்தியும் கிடைக்கும் என்பதை உணர்த்தும் வகையில் அன்று வேம்பும், இலந்தையும் நின்ற பதியில் அமைந்தமையால் அவ்விடம் வேவிலந்தை என நாமம் பூண்டது.

இவ்வாறு அல்வையூரில் வேவிலந்தையில் அமர்ந்து அருள் சுரக்கும் முத்துமாரித்தாய் வெப்பமிகுதியால் ஏற்படும் நோய்களை நீக்கியருளுவாள். அந்நோயினால் பாதிக்கபட்டோர் அம்மையின் பதிசென்று குளிர்த்திக் கடமைகளைச் செய்த போது அந்நோய் நீங்கி உடல் வலிமையும் உள அமைதியும் பெற்றனர். வேண்டுவார்க்கு வேண்டும்வரம் வாரிவழங்கும் முத்துமாரித்தாயின் அருள் வெள்ளத்தில் மூழ்கியோர் வழங்கிய சிறுதுளி நீதி பெருநிதியாக மாறி இன்று கோயில் கோபுரமும் அருள் மாடங்களும் நிறைந்த தெய்வீக சூழலில் அன்னை வலம் வரும் அற்புதக் காட்சி கலியுகத்தில் மக்களைத் தெய்வீகத்தின் பால் ஈர்க்கும் செயற்பாடாக அமைந்துள்ளது.

அம்பிகையின் ஆலயத்தில் தாய்மையைப் போற்றும் தெய்வீக நிலை வழிப்படுதப்படுகின்றது. தாய்மையை அடையாத பெண்கள் அவள் அருள் வேண்டி நேர்த்தி வைத்து தாய்மையை அடைகின்றனர். மணவாழ்வினை அடையாதோர் ஏழு செவ்வாய்க்கிழமைகள் தொடர்ந்து வழிபாடாற்றி வேண்டும் வரத்தினைப் பெற்று மேன்மையடைகின்றனர். கள்வராலும் கயவராலும் பாதிப்புற்றோர் அன்னையின் அருள் வேண்டிப்பெற்று பயப்பீதி நீங்கி இன்பமுடன் வாழும் வழி பெறுகின்றனர்.

வைதாரையும் வாழவைக்கும் முத்துமாரித்தாயின். ஆடிப் பூரணையைத் தீர்த்தோற்சவமாகக் கொண்டு பஞ்சகிருத்தியங் களை உணர்த்திய மகோற்சவத்தில் அழித்தல் தொழிலைக் குறிக்கும் தேர் உற்சவம் இன்றாகும். இந்நன்நாளில் அம்பிகை சித்திரத் தேரேறி அருள் வெள்ளம் வாரி வழங்க வருகின்றாள். அவள் காட்சி பெறுவோர் உள் அழுக்குகள் அழியப் பெற்று அவள் அருள் மழையில் நனைவர். எனவே அம்பிகையின் தேரின் வடம் பிடித்து விண்ணிலே இடம் பிடிப்போம் மண்ணிலே நல்வாழ்வு பெறுவோமாக.

**திரு. ஆ. சிவநாதன் அதிபர்**
யா/ புற்றளை மகாவித்தியாலயம்.



அடியார் துயர் களையும் அம்பிகை

அல்வையம்பதியில் குடிகொண்டு
அடியார் துயர்களையும் அம்பிகையே
தேரேறி வாருமம்மா

கற்பூர ஒளியிலே
காட்சி தரும் காமாட்சியே
கற்பூர நாயகியே
தேரேறி வாருமம்மா

பாற்கடலில் பள்ளி கொள்ளும்
பரந்தாமன் சோதரியே
தேரேறி வாருமம்மா

சங்கரியே சாம்பவியே சிம்ம வாகினியே
தேரேறி வாருமம்மா

**பாரதிதாசன் சத்யா**
**அல்வாய்**

### தேரேறி வா தெய்வமே

**இராகம் : ரஞ்சனி தாளம் - ஆதி**

**பல்லவி**

தேரேறி வா முத்து மாரியம்மா - உன்
சிங்கார திரு வழகைக் காண்பதற்கு - தேரேறி

**அனுபல்லவி**

ஊர்கூடி உன்தேரில் வடம் இழுத்து - உன்
உள்ளத்தில் இடம்பிடிக்க வாருமம்மா - தேரேறி

**சரணம்**

உனையன்றி வேறொன்றும் நானறியேன் - தாயே
உனைப் பாடிப் பணிவதன்றி வேறறியேன்
தலை நாகமைந்தில் உறை நாயகியே - எமக்கு
தருவாயே உன் கடைக்கண் திருவருளே - தேரேறி

நின்றுன்னை வணங்குவதும் நின்னருளே - வந்து
சென்றங்கு காண்பதுவும் உன் அருளே
உன் கண்கள் காட்டு நெறி பேரருளே - தாயே
வந்துந்தன் வடம் பிடிக்க வரமருளே - தேரேறி

நான்பாடும் பாடல் உன்தன் அருளல்லவோ - அதை
தேன்பாலாக்கியது உன் செயலல்லவோ
வான் பாயும் அல்வாயின் திருமகளே - உனை
காண்பேனே கனகமணி தேரதிலே- தேரேறி

பல்லாண்டு கொண்டுன்னைப் பாடுகின்றேன் - தாயே
சொல்லாண்டு என் பணியை ஏற்றருளாய்
எல்லாரும் புகழ் முத்துமாரியம்மா - வந்து
சொல்லாயோ அருள்வார்த்தை தூமணியே - தேரேறி

**- ஆக்கம்: கலாபூஷணம் சி.பசுபதி**
**(குடாநீருரான்)**

## திருத்தலவரலாறு

...ன்னி மன்னர்கள் ஆண்ட போது அல்வாய் என்ற கிராமத்தில் சில நிலவுடமையாளர்கள் வல்லமை பெற்றிருந்தார்கள். ...ணிவீரர் முதலியோர் இந்த மரபில் தோன்றியவர்கள்தான்.

...யார், குமாரவேலர், கந்தர் ஆகியோர் அவரது புதல்வர்கள். வள்ளி நாச்சியார் அவரது ஒரேயொரு மகள். இவர் உடைச்சி ...ழப்படுவார். இவர் ஒரு விதவைப்பெண் ஆவார். இவரது காலத்தில் அக்கம்மா என்ற பெண்தெய்வத்தின் மாயங்கள் பற்றியும் ...ியும் ஊர்முழுவதும் ஒரே பேச்சு. ஊரில் கிழக்கே பரந்த பிரதேசம் மாரியில் வெள்ளம் தேங்கி பாரிய குளம் போல் காட்சி

...லுக்கன் கோட்டை என்ற காணியில் குகை, அருகில் நாச்சிமார் கோயில். இவையாவும் மாய+அக்கை, மாயா+கை என

...ா உடைய ஒரு பெண் தெய்வம் அது பலிகேட்பதாக ஊரவர் பேசிக்கொள்வர். உடைச்சிக்கு மாயா அக்கை மேல் பயபக்தி ...ன கூச்சலிடுவாராம். அக்காலத்தில் காத்தவராயன் கூத்து பார்க்க உடைச்சி தவறுவதில்லையாம். இதனால் முத்துமாரி மீது ...வெண்பட்டு உடுத்தி ஆண்டு தோறும் தோணி மூலம் மதுரை மீனாட்சி தரிசனம் செய்ய செல்வாராம். அங்கு ஒரு அம்மன் ...ல் வைத்து பூஜை செய்து மகிழ்வாராம்.

...ப்பார் என்ற கவலை உடைச்சியை வாட்டிய போது அம்பாள் கனவில் தோன்றி "வள்ளீ கவலைப்படாதே உங்களுடைய ...தோன்றிய வேம்பும் இலந்தையுமாக காட்சி தருகிறதே அது யாருமல்ல வேம்பு நான். இலந்தை சிவம். என அறிந்து கொள். ...னை வைத்து விளக்கேற்று " எனக் கனவுரைத்தபோது வள்ளியால் கொட்டில் கட்டி வணங்கப் பெற்று தோன்றியதுதான் ...ாமரித்து வரலாயினர். இதனைத் தொடந்து 1827 இல் பொது நிர்வாக அமைப்பினை உருவாக்கினர் என்றும் அதில் நாற்பது ...னர் என்பதும் அமையப்பெற்றதே முதலாவது நிர்வாகம் ஆகும். இச்சபையானது 1928 ஆம் ஆண்டு வரை தொடர்ந்தது. ...மைய வேண்டும் என்பதற்கமைய 1930 அளவில் புதிய நிர்வாகக் கட்டமைப்பு தோன்றி பல திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு ...ர்ந்து 10 நாள் உற்சவம் 15 நாள்களாக மாற்றப்பட்டு 10 நாள்கள் உற்சவம் வேளாண் பெருமக்களுக்கும் 5 நாள்கள் உற்சவம் ...றும் நடைமுறையில் உள்ளது. அதன்படி ஆலயம் அல்வையூரின் சொத்தாகியது. 1972 இல் மீண்டும் புதிய நிர்வாகசபை ...து. மீண்டும் 1989 இல் புதிய நிர்வாக சபை அமையப்பெற்று பல திருப்பணி வேலைகள் நிறைவடைந்தன.

...ன்றிய போதும் 1994 இடைக்காலநிர்வாக சபை தோன்றியது .இதனைத் தொடரந்து பல திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. ...பேற்றதுடன் திருப்பணிச்சபை ஒன்று தோற்றுவிக்கப்பட்டு இன்று வரை பல திருப்பணிகள் உள்நாட்டவர்களின் நிதியிலும் ...ம்மாண்ட திருப்பணிகள் முன்னெடுக்கப்பட்டன. அம்பிக்கையின் சந்நிதியில் மாதாந்த உற்சவங்களுடன் செவ்வாய்க்கிழமை ...கையின் மகோற்சவம் ஆடி மாத பூரணையை தீர்த்த உற்சவமாகக்கொண்டு 15 தினங்கள் நடைபெறும். திருவிளக்கு பூஜை. ...ம், சப்பறத்திருவிழா, தேர்த்திருவிழா, தீர்த்தத்திருவிழா என்பன விஷேட திருவிழாக்களாகும் கடந்த இருபது ஆண்டுகளில் ...னபணியாகவும் பலகோடிகளில் செய்யப்பட்ட திருப்பணிகளை காணமுடிகின்றது. இவற்றுக்கெல்லாம் அம்பிகையின் நிர்வாக ...ர்த்தி அவர்களின் முழுமுயற்சியும் அதற்கு பலமாக இருந்த பொருளாளர் செயலாளர் மற்றும் நிர்வாக உறுப்பினர்களின் ...ர் விநாயகர் முருகனுக்கான சித்திரதேர், திருமஞ்சம் என்பவற்றுடன் அவை தரிப்பதற்கான தேர்மாடங்கள், தேரோடும் வீதி ...அம்பிகையினை நோக்கிய வண்ணம் அமைந்துள்ள பிரம்மாண்டமான நந்தி, அதற்கப்பால் கலாசார மண்டபம் , அமுத ...க மண்டபம் ஆலய உள்வீதியெங்கும் மாபிள் பதித்ததரை பூங்காவனமண்டபம் ஆலயத்தின் அழகிற்கு அழகு சேர்ப்பதாக ...து. ஓசை கொடுத்த நாயகியாக விளங்கும் அம்பிகைக்கு புலம்பெயர் வள்ளல் திரு.அ. ஈஸ்வரமோகன் அவர்களின் ... 1600 கிலோ எடை கொண்ட காண்டா மணி வடமராட்சி எங்கும் ஓசை எழுப்புகின்றது.

...ாபுரமும் அமைய திருவருள் கைகூடியுள்ளமை குறிப்பிடக் கூடிய சிறப்பம்சம் எனலாம். இன்று அடியவர்கள் அச்சம் இன்றி ...ாகாணிப்பு கமராக்கள் பொருத்தப்பட்டு ஆலயத்திற்கு வரும் அடியவர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே ...களுள் ஒன்றாக எமது ஆலயம் உயர்வு பெற்றுள்ளமை எமக்கெல்லாம் பெருமை சேர்ப்பதாக உள்ளது. தொடர்ந்து இங்கு ...றையில் ஒழுங்கமைக்கப்பட்டே நடைபெறுகின்றன. செவ்வாய்க் கிழமை உற்சவம் மிகவும் உன்னதமான உற்சவமாகும். ...ருவிழா, வரலஷ்மி விரதம், கேதாரகௌரி விரதம், ஆடிப்பூர உற்சவம் நாயமார், குருபூஜை அபிராமிப்பட்டர் விழா மாதாந்த ...க நடைபெறுகின்றன.

" முக்கண்ணியை தொழுவார்க்கு ஒருநாளும் தீங்கில்லையே"

தொகுப்பு: திரு.ந. தேவராஜா - அதிபர் **தர்மகர்த்தாசபை** உறுப்பினர்.

### சித்திரத்தேர் ஏறி சிங்காரி வாருமம்மா

**இராகம் : காபி தாளம் - ஆதி**

**பல்லவி**

வேவிலந்தைப் பதியிலுறை வேதாந்த மாரியம்மா
வேண்டும் வரம் நல்கிடுவாய் வேதனைகள் போக்கிடம்மா
(வேவிலந்தைப்)

**அனுபல்லவி**

ஆலவாய் பதியிருந்து ஆச்சியுடைச்சியுடன்
அலைகடல் தான் கடந்து அல்வையிலே கோயில் கொண்டாய்
(வேவிலந்தைப்)

**சரணம்**

பாடிப்பாடிப் பக்தி செய்து பரவசம் ஆனேன் அம்மா
நாடியுந்தன் கால்பிடித்து நான்தொழுது நிற்பேனம்மா
தேவியுனைச் சரண் புகுந்தேன் தேவியே மாரியம்மா
தேவைகளை நீயறிந்து தேற்றி எனைக் காத்திடம்மா
(வேவிலந்தைப்)

ஆனைமுகன் ஆறுமுகன் அன்னையுந்தன் அருகிருக்க
அருளாட்சி செய்துவரும் அல்வையூர் மாரியம்மா
அன்னையுன்னை நாடிவரும் அபலைக் குழந்தைகளை
அரவணைத்து அருள்சொரியும் அன்னையே மாரியம்மா
(வேவிலந்தைப்)

மஞ்சமொடு சப்பறமும் மகிழ்வுடனே தான் அமர்ந்தாய்
மகமாயி மனமிரங்கி மக்கள் குறை கேட்டிடம்மா
சித்திரத்தேர் ஏறி வந்து சிங்காரி மாரியம்மா
சித்திகளைத் தந்திடம்மா சீக்கிரமாய் மாரியம்மா
(வேவிலந்தைப்)

**- ஆக்கம்: த.சந்திரதாஸ் (பரிபாலனசபையினர்)**
**ஆலய ஓதுவார் (இறை இசை அரசு)**

### என்னபேறு செய்தோமம்மா

அலைவந்து சேரும் அல்வையம்பதியிலே
கலையோடு கொடையும் வழங்கிடும் தாயே
வேவிலந்தை நாமம் எம் சிந்தையிலே
வேண்டிவரும் அடியவர் உன் மடியிலே
மாதர் குலத் தரசியே மாரியம்மா இங்கு
மங்களம் தந்திடுவாய் உன்னடியவர்க்கு
அகிலம் போற்றும் அடியவர் உன்னிடத்தே
அணைத் தெடுப்பாய் நம்துயர் தீர்க்கவே

பட்டருக்கு திங்களை திகழவைத்தாய் - இன்று
பார்போற்றும் தேரேறி வாருமம்மா
பாதியுரு பரமனுக்குப் பகிர்ந்தவளே
படும் துன்பம் விலக்கிடுவாய் இன்நாளிலே
சித்திரத் தேரேறி சிற்றிடையாள் எமைக்காக்க
சிறப்புடனே உலா வருவாய் அல்வையிலே
பெருமையுறு உன்னருளை நாம் காணப்
பெற்றிடவே இங்கு என்ன பேறு செய்தோம் - அம்மா

**- ஆக்கம்: அல்வையூர் யோகி**
**(த.யோகநாதன்)**

**இராகம் : சிந்துபைரவி தாளம் - ஆதி**

**பல்லவி**

ஓடிவந்தோடி அல்வையம் பதியதற்கு
ஓம் எனும் பிரணவத்தைப் பாற்பதற்கு

**அனுபல்லவி**

தேடி வந்தேனடி தேர் இழுக்க
தேவார பண்ணிசையைப் பாடுவதற்கு
(ஓடி)

**சரணம்**

காவடி கரகம் கற்பூரச் சட்டியுடன்
காக்கும் தெய்வம் நீயென்று போற்றி
தேவியென்று துதித்து திசை அனைத்தும்
தித்திக்கும் தமிழ்பாட வந்திடம்மா
(ஓடி)

இடம்பெயர்ந்தோர் இடுக்கண்
இன்னல் தனைக் களைந்து இன்பந் தந்திடம்மா
அடம்பன் கொடிபோல் நாம் திரண்டு
அவனியிலே வாழ வைத்திடம்மா
(ஓடி)

**- கவிஞர் அல்வையூர் மருதன் -**

### பரிபாலன சபை செயலாளரின் வாழ்த்து



*தனம்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா*
*மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா*
*இனந்தரும் நல்லனவெல்லாந் தருமன்பரென்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே*

என்று பாடுவார் அபிராமிப்பட்டர் இத்தகைய அன்னை இன்று தேரேறி வந்து ஆன்மாக்களுக்கு அருள் சுரக்க இருக்கின்றாள். அண்டங்கள் அனைத்திற்கும் தாயான அன்னை வேவிலந்தைப் பதியாள் பன் நெடுங்காலமாக இவ்விடத்தில் அமர்ந்து அருளாட்சி நடாத்தும் அற்புதம் பேரற்புதம்.

எத்தனை அடியவர்கள் வேண்டும் வரங்களைப் பெற்று வையத்துள் வாழும் வகையறிந்து சிறப்புற வாழ்ந்து வருவதால் பேருவகை அடைகின்றேன். அடியவர்களின் அத்தனை வேண்டுதல்களையும் தீர்க்கக் கூடிய அருமருந்தாக அல்வையில் பன்நெடுங்காலமாக அருளாட்சி நடப்பதனைக் காண்கின்றோம்.

தமிழர் எங்கெல்லாம் வாழ்கின்றார்களோ அங்கெல்லாம் சைவத்தையும் வளர்க்கும் பேறு கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

அத்தனை பண்பாட்டு அம்சங்களையும் தங்களின் செயற்பாடுகளினால் இன்றும் கைக்கொள்ள வேண்டும் என்ற பேரவாக் கொண்டு அவற்றை சமயத்தின் வழியே வளர்த்து விட வேண்டும் என்ற உயர் சிந்தையினராய் தான் ஆலயங்களை அமைத்தனர். ஆலயங்களின் உயர்வான பகுதிகளிலேயே இன்று எமது உயர்வான பண்பாட்டு வாழ்விற்குக் காரணமாக அமையும் உற்சவங்களை நாம் சிறப்பாகக் கொண்டாடி இளையோருக்கு வழிகாட்டி வளர்த்துக் கொள்ள வேண்டிய தேவை உள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே தேர்த்திருவிழா என்பது ஊரமக்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் உயர்வான ஒற்றுமையின் செயற்பாடாகும்.

இதன் மூலமாக சமூக ஒற்றுமை, கூட்டுணர்வு, உயர்வான சிந்தனை என்பன வளர்ந்தோங்குவதனை நாம் காண்கின்றோம். இதனை உயர்வாக செயற்படுத்தி வெற்றி பெறுவோம். அன்னையின் பாதக்கமலங்களை வணங்கி உயர்வான பேறுபெறுவோம் என வாழ்த்துகின்றோன்.

**திரு.க.சிவபாதசுந்தரம்**
**செயலாளர், ஆலயபரிபாலன சபை.**

...ளாக இன்று
அருள் சுரக்க
...டைபெறுவது
...த்தில் நவசக்தி
...ர்த்திருவிழா,
புது வளர்ச்சி
அன்னையின்
அமைத்தோர்
...மது ஊருக்குக்

அனுசரணை: உயர்திரு. ஈ.சரவணபவன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ். மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துருக்கியில் ஏற்பட்ட இராணுவப் புரட்சி மக்களின் துணையுடன் அடக்கப்பட்டது. அரசுக்கு ஆதரவாக வீதியில் இறங்கிய மக்கள் புரட்சியாளர்களுக்கு எதிராகப் போராடினர். இராணுவ டாங்கியின் மீது ஏறி வெற்றிக் கோசமிடுகின்றனர். (ற-ரி5)

# துருக்கிப் புரட்சியுடன் எந்தத் தொடர்புமில்லை

## குற்றச்சாட்டை மறுக்கிறது அமெரிக்கா

அங்கோலா, ஜூன் 18

துருக்கியில் நடந்த இராணுவப் புரட்சியின் பின்னணியில் அமெரிக்காவுக்குத் தொடர்பு உண்டு என்று வெளியான தகவல்களை அமெரிக்கா மறுத்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுப் பொய்யானது. இருநாட்டு உறவுகளுக்கு தீங்கு விளைவிக்கக் கூட்டியது என்றும் அமெரிக்கா எச்சரித்துள்ளது.

துருக்கியில் தோல்வியில் முடிந்த இராணுவப் புரட்சியின் பின்னணியில் அமெரிக்கா உள்ளது என்று அந்த நாட்டின் தொழில் துறை அமைச்சர் குற்றஞ்சாட்டியிருந்தார்.


இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கும்போது அமெரிக்க இராஜாங்க அமைச்சர் ஜோன் கெரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அதேவேளை -அமெரிக்காவில் உள்ள துருக்கிய மதகுருவான பெத்துல்லோ குலெனை நாடு கடத்த வேண்டும் என்று துருக்கிய ஜனாதிபதி ரையிப் ஏர்டோகன் அமெரிக்காவிடம்கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவப் புரட்சிக்கு குறித்த மதகுருவே மூளையாகச் செயற்பட்டுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டை குலென் மறுத்துள்ளார். இராணுவப் புரட்சியுடன் தனக்குத் தொடர்புண்டு என்று கூறுவது தன்னை அவமானப்படுத்துவதாக உள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். (ற)

# நைஸ் நகரத் தாக்குதல் 5 பேர் இதுவரை கைது



தாக்குதல்தாரி

பாரிஸ், ஜூலை 18

பிரான்ஸின் நைஸ் நகரில் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதலுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். பிரான்ஸ் தேசிய தின கொண்டாட்டங்களின்போது கூடியிருந்த மக்கள் கூட்டத்தின் மீது பாரவூர்தி மோதியதில் 84 பேர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் உலகமெங்கும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. பாரவூர்தி ஓட்டி வந்த நபர் பொலிஸாரால் சுடப்பட்டான்.

இந்தச் சம்பவம் குறித்து தீவிர விசாரணை நடத்தி வரும் பிரான்ஸ் பொலிஸார் அவரது மனைவியை கைது செய்து விசாரணை நடத்துகின்றனர். தற்போது கொலையாளியுடன் தொடர்பு வைத்திருந்தனர் என்று நம்பப்படும் மேலும் 4 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. 5 பேரில் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார். மீதமுள்ள மூன்று பேர் நேற்று முன்தினம் காலை கைது செய்யப்பட்டனர்.

84 பேரின் சாவுக்குக் காரணமாக இருந்த அந்த வாகனத்தை பொலிஸார் சோதனையிட்டபோது சில ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. தாக்குதல் நடத்திய நபர் நைஸ் பகுதியில் வசித்து வந்தது தெரியவந்துள்ளது. 31 வயதான அவர் துனிசியா நாட்டை சேர்ந்தவர் எனவும் பிரெஞ்சு குடியுரிமையுடன் அங்கு வசித்துள்ளார் என்றும் பிரான்ஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ற-ரி4)

# எல்லையை திறந்தது வெனிசூலா

லண்டன், ஜூலை 18

கொலம்பியாவுடனான எல்லைப்பகுதியை இந்த மாதத்தில் இரண்டாவது முறையாக வெனிசூலா திறந்துள்ளது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் ஒரு வருடத்திற்கு முன்னர் ஜனாதிபதி நிக்கொலஸ் மடுரோ கொலம்பியாவுடனான எல்லைப்பகுதியை மூடச் செய்திருந்தார்.

பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த வாரம் முதன் முறையாக எல்லைப்பகுதி திறக்கப்பட்டது. இதன் போது சுமார் 35 ஆயிரம் பேர் எல்லை தாண்டி கொலம்பியாவிற்குச் சென்று அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்திருந்தனர். (ற)

# நைஸ் நகர தாக்குதலில் பலரைக் காணவில்லை

பரிஸ், ஜூலை 18

பிரான்ஸின் நைஸ் நகரில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் பலர் காணாமல் போயுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தாக்குதலில் சிதறி ஓடியதில் பலர் தமது உறவினர்களைத் தொலைத்துள்ளனர் என்பது தற்போது தெரியவந்துள்ளது. தொலைத்தவர்கள் தமது உறவுகளை சமூக வலைத்தளங்கள் மூலம் தேடுகின்றனர்.

தாய் ஒருவர் தனது 8 மாதக் குழந்தையைக் காணவில்லை என்று சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். அவரது பதிவு 21 ஆயிரம் தடவைக்கு மேல் பகிரப்பட்டு தற்போது தனது குழந்தையை அவர் கண்டுபிடித்துள்ளார்.



காணாமல்போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ருவிற்றர் சமூக வலைத்தளம் புதிய கணக்கொன்றை ஆரம்பித்துள்ளது.

அதில் ஆயிரத்து 500 பேர் தமது காணாமல்போன உறவினர்கள் குறித்த விவரங்களைப் பதிவு செய்துள்ளனர். (ற-ரி4)

# ஜப்பானில் நிலநடுக்கம்

டோக்கியோ, ஜூலை 18

ஜப்பானில் நேற்றுக் காலை 5.0 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

பல கட்டடங்களில் அதிர்வுகள் உணரப்பட்டுள்ளன. எனினும் உயிர்ச்சேதங்களோ அல்லது பாதிப்புக்களோ இதுவரை பதிவாகவில்லை.

நிலநடுக்கம் காரணமாக சுனாமி ஏற்பட வாய்ப்பில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனும் ஆஸ்திரேலியாவும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை

***இருநாட்டுப் பிரதமர்களும் பேச்சு***

லண்டன், ஜூலை 18


ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறவுள்ள நிலையில் பிரிட்டனுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்துகொள்ள அழைப்பு விடுத்தது ஆஸ்திரேலியா.

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலகிய பின்னரும் பிரிட்டன் தொடர்ந்தும் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட இது ஒரு ஊக்கமளிக்கும் நடவடிக்கை என்று பிரிட்டனின் புதிய பிரதமர் தெரஸா மே தெரிவித்தார்.

வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பில் பிரிட்டன் பிரதமர் தெரஸா மேயும், ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் டேர்ன்புல்லும் தொலைபேசியூடாகப் பேசியுள்ளனர்.

ஆஸ்திரேலியாவுடன் மட்டுமல்லாது வேறு சில நாடுகளுடனும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்வது தொடர்பில் ஆராயப்படுகின்றது என்று பிரிட்டனின் வர்த்தக நடவடிக்கைகளுக்கான செயலாளர் லியாம் பொக்ஸ் தெரிவித்தார்.

பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து சட்டபூர்வமாக விலகும்வரை எந்த ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திட முடியாது. (ற)




# மோட்டார் சைக்கிளில் உலகைச் சுற்றிச் சாதனை

சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த ஒருவர் மோட்டார் சைக்கிளில் குறுகிய நாள்களில் உலகைச் சுற்றிச் சாதனை படைத்தார். சூரிச் நகரைச் சேர்ந்த கிரிசு கிரிஸ்லி என்பவரே இந்தச் சாதனையை நிகழ்த்தினார்.

இவர் அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்தார். விசேடமாகத் தயாரிக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் மணிக்கு 100 கிலோமீற்றர் வேகத்தில் அவரது பயணம் இருந்தது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆபிரிக்கா, பின்லாந்து, ரஷ்யா, சிங்கப்பூர், அலாஸ்கா, கனடா சென்று அமெரிக்கா சென்றடைந்தார். 119 நாள்களும் 21 மணிநேரமும் அவரது பயணத்துக்கு எடுத்தது.

இவர் பயணம் செய்ய மோட்டார் சைக்கிளுக்கு ஜேம்ஸ் பொண்ட் என்று அவர் பெயர் வைத்துள்ளார். ஹெலிவூட் நடிகரான ஜேம்ஸ் பொண்ட் தனது திரைப்படங்களில் பயன்படுத்தும் மோட்டார் சைக்கிளில் உள்ள வசதிகளை அவர் தனது மோட்டார் சைக்கிளிலும் ஏற்படுத்தியுள்ளார்.

முன்னர் பிரிட்டனைச் சேர்ந்த நிக் சான்டர்ஸ் என்பவர் 120 நாள்கள் 2 மணி நேரத்தில் உலகைச் சுற்றியமை சாதனையாக இருந்தது. (ற-ரி4)



# உனக்கு 71; எனக்கு 17; காதலுக்கு வயதில்லை

***அமெரிக்காவில் விநோதத் திருமணம்***

கொழும்பு, ஜூலை 18

71 வயதுப் பெண்மணி ஒருவர் 17 வயதுடைய இளைஞரைத் திருமணம் செய்துள்ளார். இந்தத் திருமணம் அமெரிக்காவின் டென்னிஸ் நகரில் நடந்தது. மூன்று வாரங்களுக்கு முன்னர் இவர்கள் திருமணம் செய்தனர்.

71 வயதான அல்மேதாவுக்கு நான்கு பிள்ளைகள். அவர் தனது கணவனை இழந்துவிட்டார். அண்மையில் தனது மூத்த மகனையும் இழந்துள்ளார். அதனால் அவர் மனமுடைந்து போயிருந்தார்.

மகனின் இறப்பின்போது 17 வயதான கெரி ஹாட்விக்கை அல்மேதா சந்தித்தார். மனமுடைந்து போயிருந்த அல்மேதாவை கெரி தேற்றினார். அவர்களிடையேயான உறவு காதலாக மாறியது. பிறந்தநாள் விழா ஒன்றின்போது கெரி தனது காதலை அல்மேதாவிடம் தெரிவித்தார். அல்மேதாவும் அதை ஏற்றுக் கொண்டார். தற்போது இருவரும் திருமணம் செய்து வாழ் கின்றனர். அந்தப் புகைப்படங்களை வெளியிட்டுள்ளனர். (ற-ரி4)

# கள்ளச் சாராயம் அருந்திய 17 பேர் உயிரிழப்பு

லக்னோ, ஜூலை 18

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் கள்ளச் சாராயம் அருந்திய 17 பேர் உயிரிழந்தனர்.

லக்னோ நகருக்கு அண்மையில் உள்ள மல்லிகாபாத், உனானோ கிராம்ங்களைச் சேர்ந்தவர்களே உயிரிழந்தனர். 40 பேர் வரையில் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

கள்ளச் சாராயம் அருந்தி 100 பேர் வரையில் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. இதுகுறித்துப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

# மது அருந்துவதைக் கண்டித்த மேலதிகாரி மீது துப்பாக்கிச் சூடு

***15 ஆண்டுகள் சிறையில் தள்ளியது சுவிட்ஸர்லாந்து நீதிமன்றம்***

ஜெனீவா, ஜூன் 18

மது அருந்துவதைக் கண்டித்த மேலதிகாரியைச் சுட்டுக் கொன்றவருக்கு 15 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது சுவிட்ஸர்லாந்து நீதிமன்றம்.

அரச போக்குவரத்துப்பணியாளர் ஒருவர் மது அருந்துவதை அவரது மேலதிகாரி அடிக்கடி கண்டித்தார்.

சம்பவ தினத்தன்றும் இது தொடர்பில் இருவருக்கும் இடையே தர்க்கம் ஏற்பட்டது. நிதானம் இழந்த பணியாளர் துப்பாக்கியால் உயரதிகாரியை இரு முறை தலையில் சுட்டார். உயரதிகாரி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தைத் தடுக்க முயன்ற மற்றொரு பணியாளர் மீதும் சூடு நடத்தப்பட்டது. அதில் அவர் காலில் காயமடைந்தார்.

வழக்கு விசாரணைகளில் இந்தச் சம்பவங்களின் உண்மைத் தன்மை நிரூபிக்கப்பட்டது. குறித்த நபருக்கு சுவிட்ஸர்லாந்து மத்திய நீதிமன்றம் 15 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை வழங்கியது.

இந்த வழக்கு முன்னர் கீழ்மட்ட நீதிமன்றில் நடந்தது. அங்கு விசாரணைகளின் முடிவில் 13 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்பட்டது. அது குறித்து மத்திய நீதிமன்றில் மேன்முறையீடு செய்யப்பட்டது. மேல் நீதிமன்று தண்டனைக் காலத்தை இரு ஆண்டுகள் அதிகப்படுத்தித் தீர்ப்பளித்தது. (ற)



# அலப்போவில் விமானத் தாக்குதல் சிறுவர்கள் உட்பட 28 பேர் சாவு

சிரியாவின் அலப்போ நகரில் நடத்தப்பட்ட வான் தாக்குதலில் சிறுவர்கள் உட்பட சுமார் 28 பேர் உயிரிழந்தனர்.

சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தகவலை வெளியிட்டது.

கிளர்ச்சியாளர்கள் வசமுள்ள அலப்போவின் பகுதிகள் மீது சிரிய அல்லது ரஷ்ய விமானங்கள் தாக்குதல் நடத்தின என்று தெரிவிக்கப்படுகின்றது.

பல பகுதிகளில் பீப்பாய்க் குண்டுகள் வீசப்பட்டன என்று அங்குள்ள மக்கள் தெரிவித்தனர். மருத்துவமனை மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

அதேவேளை அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள அலப்போவின் மேற்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்கள் நடத்திய ரொக்கெட் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார் என்று சிரிய அரசு அறிவித்தது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம் சொல்லும் பறவைகள்


கரிச்சான்குருவி
காலை 3 மணி


குயில்
காலை 4 மணி


சேவல்
காலை 4.30 மணி


காகம்
காலை 5 மணி


கௌதாரி
காலை 5.30 மணி


மீன்கொத்தி
காலை 6 மணி

# வர்ணம் தீட்டுவோம்





# சைவ நரியார்

அந்தக் காட்டில் பெரிய ஆலமரம் ஒன்று இருந்தது. அந்த மரத்தில் ஏகப்பட்ட குரங்குகள், அணில்கள், பறவைகள் என்பன வசித்து வந்தன. அந்த மரத்தின் கீழே இருந்த பெரிய பொந்தில், ஒரு முயல் தனது குட்டிகளோடு சுகமாக வாழ்ந்து வந்தது. ஒரு நாள், அந்த வழியாக வந்த நரி ஒன்று, முயல் குட்டிகளைக் கண்டது. ஆஹா, ஒவ்வொரு குட்டியும் கொழுகொழு என இருக்கின்றன. ஒரு குட்டியைப் பிடித்தால், மற்றவை தப்பிவிடும். மொத்தக் குட்டிகளையும் வேட்டையாட வேண்டும் என்று முடிவு கட்டியது. என்ன நரியாரே, இங்கே என்ன வேலை? என்று பொந்துக்குள் இருந்தவாறே முறைத்தது தாய் முயல்.

“தப்பாக எண்ணாதே முயலம்மா. உன் குட்டிகளின் அழகை ரசித்தேன். நான் எப்பவோ சைவத்துக்கு மாறிவிட்டோம்” என்றது நரி.

“என்ன? சைவத்துக்கு மாறிட்டீங்களா?” என்று நம்பாமல் பார்த்தது முயல்.

“அது ஒரு கதை. ஆற்றங்கரையில் ஒரு முனிவர் இருக்கிறார். ஒரு நாள் பசியோடு அங்கே போனேன். முனிவரின் குழந்தை தொட்டிலில் உறக்கத்தில் இருந்தது. அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு ஓடப் பார்த்தேன். முனிவர் சும்மா விடுவாரா? இன்று முதல் நீ சைவப் பிராணி ஆவாய் என்று சாபம் கொடுத்துவிட்டார். அதனால் என் குட்டிகளோடு விளையாட வேறு நரிக் குட்டிகள் முன்வரவில்லை” என்று சோகமாகக் கூறியது நரி.

“அடடா... உன் கதையைக் கேட்கவே வருத்தமா இருக்கிறது. நாளை உன் குட்டிகளை கூட்டி வா, என் குட்டிகளோடு விளையாடட்டும்” என்று நரி மீது இரக்கம் கொண்டது தாய் முயல். இதையெல்லாம் மரத்தின் மீது இருந்து கவனித்துக்கொண்டிருந்த குரங்கு ஒன்று, கீழே இறங்கி வந்து, “என்ன முயலம்மா, நரியோடு பேசிக் கொண்டிருந்தாயா” என்றது.

“ஆமாம். முனிவர் கொடுத்த சாபத்தால்...” என்று தாய் முயல் சொல்ல வர, குறுக்கிட்டது குரங்கு.

“எல்லாத்தையும் கேட்டேன். நரியின் தந்திரபுத்தி பற்றித் தெரியாதா உனக்கு? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கு. தந்திரத்தை தந்திரத்தால் வெல்வோம். எங்கள் கூட்டமும் அணில், பறவைகள் கூட்டமும் உனக்கு உதவும். நான் சொல்கிறபடி செய்ய வேணும்” என குரங்கு கூறியது.

மறுநாள்... நாக்கைத் தொங்கவிட்டுக் கொண்டு ஆலமரம் நோக்கி வந்தது நரி. “ என் குட்டிகள் இங்கே வரத் தயங்கின்றனர். நீங்கள் சேர்த்துக்கொள்ள மாட்டீங்கள் என்று நினைக்கிறார்கள் போல. இன்று மட்டும் உன் குட்டிகளை என் இடத்துக்கு அனுப்பி வை. என் குட்டிகளுக்கு நம்பிக்கை வரும். அப்புறம், இங்கே வந்து விளையாடும்” என்று சொல்லி அழைத்துச் செல்வதுதான் நரியின் திட்டம்.

ஆலமரத்தை நெருங்கிய நரி, பொந்தின் வாசலில் ஒரு குட்டி முயல் பரபரப்போடு இருப்பதைக் கண்டது. “என்ன குட்டிப் பயலே, என்ன வேடிக்கை? உன் அம்மா எங்கே?” எனக் கேட்டது நரி. “நரி மாமா, உனக்கு விசயம் தெரியாதா? இந்த இடத்தில் பூகம்பம் வரப்போகுதாம். பாதுகாப்பான வேறு இடத்தைப் பார்த்துவிட்டு வருவதற்காக அம்மா போய் இருக்கா” என்றது குட்டி முயல். “பூகம்பமா... யார் சொன்னது?” எனக் கேட்டது நரி.

“உங்களுக்கு சாபம் கொடுத்து சைவத்துக்கு மாற்றிய அதே முனிவர்தான் என்றது” குட்டி முயல். அப்போது, மரத்தில் மறைந்திருந்த குரங்குகள், கிளைகளை வேகவேகமாக ஆட்டின. பறவைகள் நான்கு திசைகளிலும் பறந்தன. அணில்கள் குதித்து ஓட்டம்பிடித்தன.

“என்ன குட்டிப் பயலே... உங்க அம்மா இன்னும் வரலையா? சீக்கிரம் இந்த இடத்தை விட்டு ஓடுங்க. ஆலமரம் வேரோடு சாய்ஞ்சுரும் போலிருக்கு” என்றபடி ஒரு அணில் ஓடியது.

அட கடவுளே! இது என்னடா சோதனை என நினைத்த நரி, எல்லோருக்கும் முன்னதாக ஓட்டம் பிடித்தது. உடனே மற்ற விலங்குகள் நின்றுவிட்டன. எல்லா விலங்குகளும் நரியின் ஓட்டத்தைக் கண்டு சிரித்தன.



# வரலாற்றில் இன்றைய தினம்

64 - றோமில் ஆறு நாள்களாகப் பரவிய தீயில் நகரின் அரைவாசிப் பகுதி எரிந்தழிந்தது.

1389 - பிரான்ஸும் இங்கிலாந்தும் போர் நிறுத்தத்துக்கு இணங்கின. 100 ஆண்டு காலப் போரில் 13 ஆண்டுகள் அமைதி நிலவ இந்தப் போர் நிறுத்தம் வழிவகுத்தது.

1925 - அடொல்ப் ஹிட்லர் தனது முன்மொழிவாக ‘மெயின் காம்ப்’ நூலை வெளியிட்டார்.

1942 - இரண்டாம் உலகப் போர் ஜேர்மனியர் ஜெற் இயந்திரத்திலான விமானப் பறப்பை சோதித்துப் பார்த்தனர்.

1994 - ஆர்ஜென்ரீனா யூத சமூக நிலையத்தின்மீது புவனேஸ் ஏயர்சில் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் அதிகளவில் யூதர் உட்பட 85 பேர் உயிரிழக்க 300 பேர் வரை காயமடைந்தனர்.


2002 - தன்னைப் பதவிலியிலிருந்து அகற்ற அமெரிக்காவால் முடியாதென ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூசைன் அறைகூவல்.

# மயில்



- அதிக ஒலியெழுப்பும் பறவைகளில் மயிலும் ஒன்று. சாதாரண நாள்களைவிட, மழைக் காலங்களில் அதிக முறை ஒலியெழுப்பும்.
- மயிலின் தோகை, நாம் பார்க்கும் கோணத்துக்கு ஏற்ப வெவ்வேறு நிறங்களை வெளிப்படுத்தும்.
- அகவல், ஆலல், ஏங்கல் போன்ற பல சொற்களால் மயிலின் ஒலியைக் குறிப்பிடுகிறார்கள்.
- 1963இல் மயில், இந்தியாவின் தேசியப் பறவையாக அறிவிக்கப்பட்டது.
- மயிலினங்களைத் தேசியப் பறவையாகக் கொண்ட வேறு நாடுகள் கொங்கோ மற்றும் மியன்மார்.
- உலகின் பல்வேறு பகுதிகளில், வெள்ளை மற்றும் சாம்பல் நிற மயில்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நட்பு எம்மை சேதப்படுத்தக் கூடாது

சி.நற்குணலிங்கம்

நட்பு என்பது இருவருக்கிடையில் அன்பைப் பகிர்ந்து கொள்வதற்கு உதவுகின்றது. மேலும் ஒருவருக்கொருவர் துன்பம் ஏற்படும்போது கைகொடுத்து உதவுவதற்கும், ஒருவர் தவறு விடும்போது அந்தத் தவறைத் திருத்தி, மேலும், தவறுவிடாதிருக்க ஆலோசனைக்கூறுவதற்கும் உதவுகின்றது. கண்டதும் காதல் போன்று அல்லாமல் தீர யோசித்து நல்ல நண்பனைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தூய நட்பானது என்றுமே அழிந்துவிடாது. அவர்களை அழித்தும் விடாது.

நட்பு ஆண்களுக்கிடையிலும், பெண்களுக்கிடையிலும் அல்லது இவர்கள் இருவருக்குமிடையிலும் ஏற்படலாம். எவருக்கிடையில் நட்பு ஏற்படுகிறது என்பதல்ல முக்கியம், ஏற்பட்ட நட்பு தூய்மையானதாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்க வேண்டும். நட்புக்கான தெரிவு நடைபெறும்போது ஆராய்ந்து நல்ல நண்பர்களைத் தெரிவு செய்ய வேண்டும்.

இளமைக்கால நட்பு மிகவும் அவதானத்துக்குரியது. இந்தப் பருவத்தில் தீய வழிகளில் செல்லாமல் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கக் கூடியதாக நட்பு காணப்பட வேண்டும். சிலர் போக்குவரத்துச் சாதனங்களூடாக நட்பைத் தெரிவு செய்வார்கள். அவ்வாறான நட்பு சில வேளைகளில் பாதகமான விளைவுகளைத் தோற்றுவிக்கக் கூடும். நல்ல நட்புதான் எதிர்காலத்தை வளமாக்கும்.

தவறான நட்பை உடனடியாகத் துண்டித்துக் கொள்ளப் பழகிக்கொள்ள வேண்டும். ஒருவரது மனநிலையை, நடத்தைக் கோலங்களை, குடும்பப் பின்னணியை, கதைக்கும் முறை, பழகும் முறை இவற்றை வைத்தே ஒருவரை எடைபோட முடியும். நீங்கள் சரியாக எடை போட்டு தெரிவு செய்யும்நட்பால் என்றுமே கெடுதல் இல்லை. அது உங்கள் வாழ்க்கையைச் சிதைக்காது உங்கள் வாழ்க்கையைச் சேதப்படுத்தாது.

உண்மையான நட்புக்கு எதுவும் ஈடாகாது. நல்ல நட்பு வட்டத்தைக் கொண்டவர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள். உண்மையான நட்பு சுயநலமற்றதாகவும் பிரதியுபகாரம் கருதாததாகவும் இனம், மதம், மொழி, சாதி, அந்தஸ்து என்பவற்றைக் கடந்ததாகவும். புனிதமானதாகக் காணப்படும். இந்த நட்பானது சிலருக்கு சிறுவயதில் கிடைக்கும், சிலருக்கு பள்ளிப்பருவத்தில், சிலருக்கு பல்கலைக்கழகக் காலத்தில், அலுவலகத்தில் என பலதரப்பட்ட தளங்களில் கிடைக்கும். நண்பர்களைத் தெரிவு செய்வதில் எப்போதுமே விழிப்புடன் இருக்க வேண்டும். பெற்றோரது பார்வையும் இந்த விடயத்தில் செலுத்தப்படுவது நன்று. சிலர் தமது தற்காலிகத் தேவைகளை நிறைவு செய்வதற்காக சிலரைத் தமது நண்பர்களாகத் தெரிவு செய்வார்கள். இந்த வகை நட்பால் எப்போதுமே தொல்லைகள்தான் ஏற்படும். இந்த நட்பு நீண்டகாலத்துக்கு நிலைத்து நிற்க முடியாது. நல்ல நண்பர்களாயின் நாம் செய்கின்ற தவறுகளை கண்டிப்பவர்களாக, நெருக்கடியான வேலைகளில் ஆறுதல் வார்த்தைகளைக் கூறுபவர்களாக எமக்குப் பெரும் உந்துசக்தியாகக் காணப்படுவர். இந்த நட்பு வாழ்நாள் முழுவதும் நிலைத்து நிற்கக் கூடியது.

சிறுபராயம் முதலே நல்ல நண்பர்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதர்களுக்கும் அவர்களது வாழ்க்கையில் நம்பகமான ஆலோசகராகத் தேவைப்படுபவர்களும் நண்பர்களே. பெற்றோர், உறவினர்கள், பிள்ளைகளது நட்பு விடயத்தில் கவனம் செலுத்தி தீய நட்பைக் களைந்து, ஆரோக்கியமான நட்புக்கு உதவ வேண்டும். தவறின், மதுப்பழக்கமுள்ளவர்களுடன், புகைத்தலைப் பகைக்காதவர்களுடன் சிறுமிகள் துஷ்பிரயோகத்தில் ஈடுபடுபவர்களுடன், சமூகச் சீரழிவுக்குள் மூழ்கியவர்களுடன் நட்பு பாராட்ட வேண்டி வரும். இவர்களது வாழ்க்கை புதைகுழிக்குள் மூடியும்.

நல்ல நட்பு தேவையற்ற சிக்கலை உருவாவதைத் தடுக்கும். உளரீதியான- புரிந்துணர்வுடன் கூடிய நட்பு மகிழ்ச்சியையே உருவாக்கும். கற்றல் விடயத்தில் புரியாதவற்றை புரியவைக்கவும், ஒழுங்கான கற்றலுக்கும் நல்ல நட்பு பேருதவியாக இருக்கும். தமக்கிடையே அல்லது தமது குடும்பங்களுக்கிடையிலான பிரச்சினைகள் உருவெடுத்தாலும்கூட, நட்பின் மூலம் சிதையாது பார்த்துக்கொள்ள முடியும். தொழிலுக்குச் செல்லும் காலத்தில்கூட தமது கடமைகளைத் திறம்படச் செய்வதற்கு அனைவருடனும் நட்பு பாராட்டுவது சிறந்த்தாகும். நல்ல நட்பின் ஆழம் விரிந்து சென்றுகொண்டே இருக்கும்.

இந்த உலகத்திலே மனிதர்கள் எவருமே நட்பின்றி வாழ் வதை நாம் காண முடியாது. வாழ்வியலுக்கு நட்புத் தேவை என்பது இதிலிருந்து புரிகின்றது. அந்த நட்பு நல்ல நட்பாக இருக்க வேண்டியது தான் முக்கியம். இளமையில் தெரிவாகும் நல்ல நட்பு சாவு வரை எடுத்துச் செல்லப்படும். நல்ல நட்பினால் வாழ்க்கை முழுவதும் நன்மையே கிடைக்கும். கூடா நண்பர்களுடன் நட்பை ஏற் [illegible] உறுதி செய்த பின்னரே அதில் உங்களை இணைத்துக் கொள்ளுங்கள்.

நல்ல
நட்பு தேவை
யற்ற சிக்கலை உரு
வாவதைத் தடுக்கும்.
உளரீதியான- புரிந்துணர்
வுடன் கூடிய நட்பு மகிழ்ச்
சியையே உருவாக்கும்.
கற்றல் விடயத்தில் புரியாத
வற்றை புரியவைக்கவும்.
ஒழுங்கான கற்றலுக்கும்
நல்ல நட்பு பேருத
வியாக இருக்கும்.

## பொருத்தமுறாத பொறி(நெறி)முறைகள்..! நிலை மாறாத நீதியின் அறிமுகம்...!

இலங்கைஅரசு, ஜெனிவா, ஐ.நா. சபை, விசேட அமர்வுகள், கூட்டறிக்கைகள், பிரேரணைகள், ஆணைக்குழுக்கள், அறிக்கைகள், மேம்படுத்தல்கள், அங்கீகரித்தல்கள், தலையிடல்கள், சந்திப்புக்கள்; பொறிமுறைகள் அதன் முன்பான அறிமுறைகள் என அத்தனையும் தன்னலன் சார்ந்து பொருத்தமுறாத பொறி(நெறி)முறைகளாக தமிழ்மக்கள் மத்தியிலே காட்சி தருகின்றன. நிலை மாறுகால நீதி என்ற பொருள் கோடல்கள் நிலை மாறாத நீதியின் அறிமுகமாக நீட்சி தருகின்றன. அழிவுகளின் பின்னணியில் இயல்புநிலை அடைவுகள் கடை நிலையிலே இருக்கையில் பொ(வ)ருத்த முறவில்லை. சகஜமற்ற ஒப்பாசாரம் செய்கின்றன.

இந்த நிலையிலே நீதியின் அடிப்படை நிர்மாணங்களை தாண்டியதாக இந்த நிலை மாறுதல் என்பதனுள் சொல்லப்படுகின்ற, எல்லையிடப்பட்டுள்ள உண்மையைக் கண்டறிதல், இழப்பீடு, கட்டமைப்புச் சார்பு நிலையிலிருந்தான சீர்திருத்தம், குற்றவியல் வழக்கு தொடருதல் என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவை ஆற்றுப்படுத்தலை வழங்கவில்லை..! ஒன்றோடொன்று தொடர்புற்று இயைபுறுமா என்பதும் தெரியவில்லை..! பொறுப்புக்கூறல் என்பது இதிலிருந்து தூரமயப்படுத்தப்பட்டிருக்கின்றது. அதற்கான முன்னாயத்தங்கள், காய்நகர்த்தல்கள் முன்னகர்த்தப்படுகின்றன. இந்தச் சந்தர்ப்பத்திலே உரோமச் சட்டத்தின் கீழ் உயிர்நிலை கொடுக்கப்பட்ட சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் கூட நீதி என்பது மேற்குலக வல்லாதிக்கங்களுக்கே கையசைக்கிறது. இலங்கை அரசு மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நா. சபையிலே பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளபோதும் விசாரணைகளை மேற்கொள்ள சந்தர்ப்பங்கள் இருக்கும்போதும் அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா ஆகிய நிரந்தர உறுப்புரிமை நாடுகளின் சர்வாதிகாரம், இணக்கம் என்பது சாத்தியமில்லை. சாத்தியமுறுமா என்பதும் தெரியவில்லை..! சாத்தியமுற வேண்டுமெனில், தமிழர் தலைமைத்துவங்கள் ஒற்றுமைப்பட்டு ஓயாது முயற்சிக்க வேண்டும். உண்மையை எடுத்துக்கூற தலையால் நடக்கவும் தயாராக வேண்டும். தயாராக இருத்தல் வேண்டும். அதற்கு முயற்சிக்க வேண்டும். ஒண்றிணைவார்களா...?

ஆக, போர்க் குற்றங்கள் தொடர்பில் நியாயமானதும் முறையானதுமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனில், வெளிநாட்டு நீதிபதிகளின் பிரசன்னம் அவசியம். அதேபோன்று கலப்பு பொறிமுறையே அவசியமானது. இவை இரண்டும் அரசால் மறுதலிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சி நிரல்களை இராஜதந்திரம் என்ற சொல்லப்படுகின்ற தன்னலன் சார்ந்த மீட்டல்களை திட்டமிடுகின்ற வல்லரசுகளும் அவ்வப்போது அழுத்தம் என்ற போர்வையில் உற்சாக ஊக்கிகளையே அரசுக்கு பரிசளிக்கின்றன.

தொட்டிலையும் கிள்ளிவிட்டு பிள்ளையையும் ஆட்டி விடுகின்றன. மொத்தத்தில் விசாரணை என்பது தமிழர்களை ஏய்க்காட்டும் உப்வாசமாக கடைப்பிடிக்கப்படுகின்றன. தீர்வுகள் எதுவுமற்ற தோரணையைத்தான் சுட்டி நிற்கின்றன. இந்த நீண்ட, இனி நீண்டு செல்லப்போகும் உபவாசங்களுக்கான பாறணையாக, முடிவாக பிரேரணைகள், அறிக்கைகளே தொடர்புறப் போகின்றன. இதனையே அரச இயங்கு நிலையின் பக்கம் சார்ந்தவர்களும், பக்கம் சாரதவர்கள்போல தங்களை வெளிக்காட்டுபவர்களும் மிக அண்மிதமாக சொல்லியிருக்கின்றனர். கட்டமிடலாக சொல்லுகின்றனர். உண்மையில் ஐ.நா. செயலாளர் நாயகத்தின் நியமனம், ஐ.நா மனித உரிமைகள் சபை என்பன முற்றுமுழுதான அரசியல் தலையீடுகளை உடையவை. அங்க அங்கத்துவம் செய் கின்ற அத்தனை நாடுகளினுடைய அரசுகளும் செல்வாக்கை செலுத்துகின்றன. அவற்றின் நலன்களும் முன்னிலை பெறுகின்றன. அரசியல் செயலூக்கம்பெறுகின்றன. இவைதவிர இலங்கை அரசின் வெளி விவகாரம் என்ற தந்திரங்கள் ஒவ்வொரு நாடுகளினுள்ளும் மாய மந்திரமாக இராஜதந்திரமாக முடிவுறுத்தப்படுகின்றன. இவை அனைத்தையும் தாண்டி விசாரணைகளும் அவற்றுக்கான பரிந்துரைகளும் தமக்கான வரையறை எனும் விலங்குகளை உடைத்தெறிதல் என்பது. அதனுள்ளிருந்து மீண்டு வெளிவருதல் என்பது எவ்வளவுதூரம் சாத்தியமென்பது தெரியவில்லை.

ஆனாலும், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் என்பது அரசியல் தலையீடுகள் ஒப்பீட்டளவில் எட்டிவிட முடியாத நிலையினுள்ளேயே வரையறை செய்யப்பட்ட இதிலுள்ள சாதனங்களை தமிழர் தலைமைத்துவங்கள் சதானமாக எட்ட முடியுமெனில் பல விடயங்களை வெளிப்படுத்தலாம். விசாரணை, தீர்வு என்கின்ற விடயங்கள் தமிழர் தரப்பின் நியாயங்களை ஓரளவுக்கு செல்வாக்குச் செய்யலாம்.




நிலை மாறாத நீதியின் அறிமுகங்கள் தமிழர்களைப் பின் தொடர்ந்து கொண்டேயிருக்கும்...! சிந்தனைக்குரியவர்கள் நிந்தனையின்றி எதிர்காலம் பற்றி கண்டுகொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவில் அதிகம் சம்பாதிக்கும் நடிகர்




போர்ப்ஸ் பத்திரிக்கை ஆண்டு தோறும் உலக அளவில் அதிகம் சம்பாதிக்கும் பிரபலங்கள் பட்டியலை வெளியிட்டு வருகிறது. 2016 ஆம் ஆண்டுக்கான பட்டியலை நேற்று வெளியிட்டது. இதில் உலக அளவில் அதிகம் சம்பாதிப்பவராக அமெரிக்காவின் பிரபல பாடகர் டைலர் ஸ்விட் இடம் பெற்றுள்ளார். 17 கோடி அமெரிக்க டொலர் இவரது வருமானம் ஆகும்.

உலக அளவில் 86 ஆவது இடத்திலும் இந்திய அளவில் முதல் இடத்திலும் இருக்கிறார் ஷாருக்கான். இவரது ஆண்டு வருமானம் 3.30 கோடி டொலர். அதாவது சுமார் 215 கோடி ரூபா ஆகும். அடுத்த இடத்தில் இருக்கிறார் அக்ஷய குமார். இவரது வருமானம் 3.15 கோடி டொலர். அதாவது சுமார் 211 கோடி. தொடர்ந்து ஹாட்ரிக் ஹிட் கொடுத்ததே ஷாருக்கானின் வருமான உயர்வுக்கு காரணம் என்று போர்ப்ஸ் தெரிவித்துள்ளது. அக்ஷயகுமாரின் விளம்பர வருமானமே அவர் இந்திய அளவில் இரண்டாவது இடத்தில் இருப்பதற்கு காரணம் என்றும் அது தெரிவித்துள்ளது. உலக அளவில் இரண்டாம் இடம் பிடித்திருப்பது ஹொலிவுட் நடிகர் லியாம் பேன். இவரது வருமானம் 11 கோடி டொலர் ஆகும்.

**வள்ளி ம(கன்)ணிகண்டன்**
**பதில் வரவில்லையென்றால் கேள்வி இருக்கிறது என்றர்த்தம்**

"என்ன சார் சம்பளம் கேட்டா பலாப்பழம் தாறீங்க?"

"நாங்க தான் அப்போவே சொன்னோமே சம்பளம் 'சுளை'யா தருவோம் என்று"




**இன்றையில இருந்து எப்படியாவது காசு சேக்கணும் என்று நினைத்த அன்றைக்கே**



**பெரிய செலவா வரும் பாருங்க... அந்த கருமத்துக்கு பேருதான் சார் வாழ்க்கை!**



**நடக்கவே தெரியாத போது இடுப்பிலிருந்து இறங்கி ஓட எத்தனிப்பதும், நடக்க ஆரம்பித்த பிறகு தூக்கச் சொல்லி அடம்பிடிப்பதும் தான் குழந்தை!**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** வாழ்வில், சங்கடமான சூழ்நிலை ஏற்படலாம். பொறுமையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில், சுமாரான இலாபம் கிடைக்கும். பெண்கள், வீட்டுச் செலவில் சிக்கனம் கடைப்பிடிப்பர்.

**இடபம்:** உற்சாகத்துடன் பணியில் ஈடுபடுவீர்கள். குடும்பப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், ஆதாயம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு, படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

**மிதுனம்:** அன்றாட பணிகளில், ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்புக் கிடைக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் ஏற்படும்.

**கடகம்:** குடும்பப் பிரச்சினை பற்றி பிறரிடம் சொல்ல வேண்டாம். தொழில், வியாபார நடைமுறை, மந்த கதியில் இயங்கும். இலாபம் சுமாராக இருக்கும். உடல் நலத்திற்கு, மருத்துவ சிகிச்சை செய்யத் தேவைப்படலாம்.

**சிங்கம்:** சிலர் உங்களை ஏளனமாக பேசும் நிலை உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். பெண்கள் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம். உணவு விடயத்தில் கவனம் தேவை.

**கன்னி:** மனதில் மகிழ்ச்சி நிலைத்திருக்கும். நிலுவைப் பணிகளை நிறைவேற்ற புத்துணர்வுடன் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், ஆதாயம் உயரும். குடும்பத்தில், மங்கல நிகழ்வு ஏற்படும்.

**துலாம்:** நண்பர்களால் தொந்தரவு ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர். வாகனப் பயணத்தில், மிதவேகம் பின்பற்றுவது நல்லது.

**விருச்சிகம்:** செயல்களில், சமயோசித குணம் வெளிப்படும். தொழில், வியாபாரத்தில், வளர்ச்சி நிலை திருப்திகரமாகும். வருமானம் பன்மடங்கு உயரும். உறவினர் வருகையால், வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**தனுசு:** உங்களின் வளர்ச்சி கண்டு, பிறர் பொறாமைப்படுவர். தொழில், வியாபாரம் செழிக்க, மாற்று உபாயம் பின்பற்றுவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும். மனைவியின் ஆலோசனையை ஏற்பது நல்லது.

**மகரம்:** சிறு செயலையும், மிக நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி, பெருமளவில் குறையும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்திடம் பாராட்டு பெறுவர்.

**கும்பம்:** தியாக மனப்பான்மையுடன் செயற்படுவீர்கள். தொழிலில், விற்பனை அதிகரிப்பால் வருமானம் உயரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்க அனுகூலம் உண்டு.

**மீனம்:** எவருக்கும், தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறுக்கீடுகளைச் சரி செய்வது அவசியம். மிதமான பணவரவு கிடைக்கும். தகுந்த ஓய்வு, உடல்நலத்தைச் சீராக்க உதவும்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | 3 | 7 | | | | |
| 8 | | | | | | 6 | | |
| | | 9 | 1 | | | | 3 | |
| | 4 | | | 6 | | | | |
| | | 6 | | 5 | | | | |
| | | | 9 | 1 | | 3 | | 6 |
| | | | 7 | 9 | | 2 | 8 | 5 |
| | | | 5 | | | | 6 | |
| | | 5 | 6 | | 1 | 4 | | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 8 | 4 | 3 | 5 | 2 | 6 | 1 |
| 6 | 2 | 1 | 7 | 8 | 9 | 5 | 3 | 4 |
| 3 | 5 | 4 | 2 | 1 | 6 | 8 | 9 | 7 |
| 2 | 4 | 6 | 1 | 5 | 8 | 9 | 7 | 3 |
| 7 | 3 | 9 | 6 | 4 | 2 | 1 | 5 | 8 |
| 1 | 8 | 5 | 3 | 9 | 7 | 6 | 4 | 2 |
| 8 | 1 | 7 | 5 | 6 | 4 | 3 | 2 | 9 |
| 5 | 9 | 2 | 8 | 7 | 3 | 4 | 1 | 6 |
| 4 | 6 | 3 | 9 | 2 | 1 | 7 | 8 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு

## விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 600 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 200 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 500 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 900 | 650 |
| சீலா | 300 | 400 | 400 | 800 | 400 | 300 | – |
| விளை | 650 | 500 | 400 | 800 | 500 | 400 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 400 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 300 | – | 370 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 150 | 300 |
| நகரை | 250 | 300 | – | 300 | 300 | 150 | 350 |
| சூடை | 150 | 150 | 100 | 200 | 200 | 100 | 80 |
| ஒட்டி | 300 | 200 | 150 | 400 | 300 | – | 200 |
| திருக்கை | 150 | 400 | 200 | 350 | 300 | 200 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | 600 | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 400 | – | – |
| வாழை | 100 | 200 | 200 | – | 300 | – | – |

# காய்கறிகள் எப்படி பார்த்து வாங்க வேண்டும்



✦ முருங்கைக்காய் - முருங்கைக் காயைக் கட்டை மற்றும் ஆட்காட்டி விரல்களைப் பயன்படுத்தி சிறிது முறுக்கினால் எளிதாக வளைந்தால் அது நல்ல முருங்கைக்காய்.

✦ தக்காளி - தக்காளி நல்ல சிவப்பில் இருந்தால் அதை வாங்கலாம்.

✦ சின்ன வெங்காயம் - பழைய வெங்காயம் வாங்குவேத நல்லது. இரண்டு பல் இருப்பதாக, முத்து முத்தாகத் தெளிவாக இருப்பதை வாங்கவும்.

✦ குடை மிளகாய் - தோல் சுருங்காமல் இருப்பதை வாங்கவும். கரும்பச்சையில் வாங்கவேண்டாம்.

✦ கோலிபிளவர் - பூக்களுக்கிடையே இடைவெளி இல்லாமல், அடர்த்தியாகக் காம்பு தடித்ததாக இல்லாமல் வாங்கவேண்டும்.

✦ மாங்காய் - தேங்காயை காதருகே வைத்து தட்டிப் பார்ப்பதுபோல் மாங்காயையும் தட்டிப் பார்க்கவும். சத்தம் வரும். அத்தகைய மாங்காயில் கொட்டை சிறிதாக இருக்கும்.

✦ பீர்க்கங்காய் - அடிப்பகுதி குண்டாக இல்லாமல் காய் முழுவதும் ஒரே அளவில் இருக்குமாறு பார்த்து வாங்குவது நல்லது.



## நாளை ஆடி-04

செவ்வாய்க்கிழமை -19.07.2016
திதி: பூரணை பி.இ.05.25 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.ப.05.06
ராகுகாலம்: 03.01-04.31 வரை
சுபநேரம்: 10.31-12.01 வரை
பூரணை விரதம்

# சீரக மீன் குழம்பு



### தேவையான பொருள்கள்

மீன் – 500 கிராம்
சின்ன வெங்காயம் – 150 கிராம்
தக்காளி – 150 கிராம்
பச்சை மிளகாய் – 4
உள்ளி – 10 பல்
மிளகாய்த் தூள் – 2தேக்கரண்டி
சீரகத்தூள் – 2 தேக்கரண்டி
புளி – சிறிய எலுமிச்சை அளவு
எண்ணெய் – 3 மேசைக் கரண்டி
தேங்காய் விழுது – அரைக் கப்
உளுத்தப் பருப்பு, வெந்தயம், சீரகம் – தலா அரை தேக்கரண்டி
கொத்தமல்லி, கறிவேப்பிலை –சிறிதளவு

### செய்முறை

மீனைச் சுத்தம் செய்து நன்கு கழுவி தண்ணீரை வடிகட்டவும். புளியை நன்றாகக் கரைத்துக் கொள்ளவும்.

சின்ன வெங்காயத்தைத் தோல் உரித்து சிறிது சிறிதாக நறுக்கி வைக்கவும்.

தக்காளியையும் சிறிது சிறிதாக நறுக்கி வைக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு காய்ந்ததும் சீரகம், உளுத்தம் பருப்பு, வெந்தயம் போட்டு தாளித்த பின் பச்சை மிளகாய், உள்ளி, கறிவேப்பிலை போட்டு வதக்கவும். அத்துடன் வெங்காயத்தைச் சேர்த்து பொன்னிறமாக வதக்கவும். வெங்காயம் நன்றாக வதங்கியதும் தக்காளி, சேர்த்து நன்றாக வதக்கவும்.

தக்காளி நன்றாக மசிந்து பதமாக வந்த பின் மிளகாய்த் தூள், சீரகத்தூள் சேர்த்துப் பிரட்டவும். அடுத்து தேங்காய் விழுது, புளித்தண்ணீர் சேர்த்து நன்றாகக் கொதிக்க விடவும். குழம்பு கொதிக்க ஆரம்பித்தவுடன் உப்பு, மீனைச் சேர்த்து மிதமான தீயில் வைக்கவும். மீன் வெந்தவுடன் நறுக்கிய கொத்தமல்லி இலை தூவி இறக்கவும். புளி, காரம் உங்கள் விருப்பம் போல் சேர்த்துக் கொள்ளலாம்.

சுவையான சீரக மீன் குழம்பு தயார்.

# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 80 | 80 | 120 | 80 | 40 | – | 30 |
| கத்தரி | 120 | 120 | 140 | 140 | 100 | 100 | – | 70 |
| கரட் | 240 | 200 | 180 | 180 | 200 | 200 | – | 140 |
| மரவள்ளி | 100 | 100 | 100 | 80 | 100 | 100 | – | 50 |
| பயிற்றை | 200 | 120 | 160 | 120 | 120 | 80 | – | 80 |
| பாகல் | 200 | 200 | 280 | 240 | 200 | 220 | – | 150 |
| கருணைக்கிழங்கு | 200 | – | 140 | – | 140 | 160 | – | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 70 |
| சி.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 100 | 120 | – | 100 |
| பூசணி | 180 | 140 | 140 | 140 | 160 | 140 | – | 130 |
| தக்காளி | 200 | 180 | 180 | 260 | 180 | 250 | – | 200 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 120 | 120 | 80 | – | 50 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 20 | – | 15 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | – | 10 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | – | 600 |
| புடோல் | 80 | 80 | 80 | 100 | 60 | 60 | – | 60 |
| கோவா | 160 | 160 | 80 | 120 | 160 | 180 | – | 120 |
| வெண்டி | 100 | 100 | 160 | 120 | 100 | 80 | – | 60 |
| போஞ்சி | 200 | 180 | 120 | 240 | 160 | 180 | – | 140 |
| லீக்ஸ் | 140 | 160 | 160 | 240 | 160 | 200 | – | 120 |
| தேங்காய் | 40 | 27 | 40 | 25–30 | 30 | 30 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 100 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 100 | 150 | 140 | 160 | 140 | 80 | – | 120 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | – | 10 |
| கறிமிளகாய் | 350 | 240 | 300 | – | 260 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 170 | 250 | – | 300 | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 280 | 380 | 600 | – | 300 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு / நிதி அமைச்சு/ கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சு

**அத்தியாவசிய உணவுப் பொருள்களை எவ்விதத் தடடுப்பாடுமின்றி நியாய விலையில் நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுக்கும் அரச அனுசரணையின் கீழ் தனியார்த் துறையினரின் விசேட வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்காக தனியார்த்துறை இறக்குமதியாளர்கள், மொத்த வர்த்தக நிறுவனங்கள் மற்றும் சில்லறை வர்த்தக இறக்குமதியாளர்களிடம் ஆலோசனை கோரல்**

அரச அனுசரணையின் கீழ் தனியார் துறையினரின் விசேட வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதன் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருள்களை எவ்வித தட்டுப்பாடுமின்றி நியாய விலையில் நுகர்வோருக்குப் பெற்றுக் கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் ஒரு தேர்தல் பிரதேசத்தில் குறைந்தது 15 வர்த்தக நிலையங்களின் படி நாடெங்கிலும் 2,400 வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள அரச அனுசரணையின் கீழான தனியார் துறையின் விஷேட வர்த்தக நிலையங்களில் சாதாரண வர்த்தகப் பொருள்கள் விற்பனை செய்யப்படுவதோடு அத்தியாவசிய உணவு பொருள்களை அரசாங்க உத்தரவாத விலையின் கீழ் எவ்வித தட்டுப்பாடுமின்றி நுகர்வோருக்கு விற்பனை செய்வதே இவ்வேலைத் திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

தமது வர்த்தக நிலையத்துடன் இணைந்ததாக அரசாங்க அனுசரணையின் கீழ் தனியார் துறையின் விஷேட வர்த்தக நிலையங்களை ஆரம்பிப்பதற்கு விருப்பம் கொண்ட தனியார்துறை நிறுவனங்கள், மொத்த அல்லது சில்லறை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு வர்த்தக நிறுவனங்களிடமிருந்து இதன் நிமித்தம் யோசனைகள் கோரப்பட்டுள்ளன. இவ்வாறு ஆரம்பிக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு கீழே குறிப்பிடப்படும் வசதிகளை அரசாங்கத்தினால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

- **கடனடிப்படையில் பொருள்களை விநியோகித்தல்**
- **விற்பனை மற்றும் கணக்கிடுதல் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப ஒத்துழைப்பு**
- **கணினி வசதி**
- **தன்னியக்க டெலர் இயந்திரம்**
- **அரசாங்கம் வழங்குகின்ற ஏனைய கவர்ச்சிகர சந்தை வசதிகள்**

இதன்படி, கீழே குறிப்பிடப்படும் விவரங்களையும் உள்ளடக்கி உங்களது விண்ணப்பத்தை 2016.07.25 ஆம் திகதிக்கு முன்னர் கீழே குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். (யோசனைகள் அடங்கிய கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில், **'அரசாங்க அனுசரணையின் கீழ் தனியார் துறையின் விஷேட வர்த்தக நிலையங்கள்'** எனக் குறிப்பிடுங்கள்).

1. **உங்கள் நிறுவனத்தின் வர்த்தகப் பதிவு சான்றிதழின் பிரதி.**
2. **உங்களது நிறுவனத்திற்குரிய வரிக் கோப்பு இலக்கம்.**
3. **வர்த்தக முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் பெயர் மற்றும் தொலைபேசி இலக்கம்.**
4. **உங்களது நிறுவனத்தின் அனுபவம் தொடர்பான விவரம்**
5. **விற்பனை செய்யப்படும் பொருள்களின் வகைகள் தொடர்பான விவரம்**
6. **தேர்தல் பிரதேசத்திற்கு ஏற்ப உங்களது நிறுவனத்தில் தற்போது காணப்படும் விற்பனை நிலையங்கள் மற்றும் அவை அமைந்துள்ள இடங்கள் குறித்த விவரங்கள்**
7. **ஒவ்வொரு தேர்தல் பிரதேசத்திலும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள பட்டய விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை**

**த.பெ. இல. 1529,**
**டி.ஆர் விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 01**
**2016 ஜுலை 18**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுத்தம் தரப்படின் பதவி விலகுவேன்

## கணக்காய்வாளர் நாயகம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 18
சுதந்திரமாக செயற்பட விடாது போனால் பதவி விலகப் போகின்றேன் என்று அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார் கணக்காய்வாளர் நாயகம்.

"அரச நிதி முறைகேடாகப் பயன்படுத்தப்படக்கூடாது என்பதை வலியுறுத்தும் வகையிலேயே எனது அறிக்கையில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அதனை அரசு உணர்ந்து கொள்ளவேண்டும்.

கோப் குழுவுக்கு அரச நிறுவனங்கள் தொடர்பில் வழங்கியுள்ள அறிக்கை தொடர்பில் அமைச்சர்கள் சிலர் கருத்துக்களை வெளியிட்டனர். இது தொடர்பில் நிதியாள்கை நிபுணர்களுடன் கலந்தாலோசிக்கப்படவில்லை என்று அவர்கள் குற்றம்சுமத்துகின்றனர். என்னை விமர்சிப்பவர்களுக்காக அல்ல, மக்களின் நலனுக்காகவே எனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளேன்" என்று கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

(வ-5)

## மைத்திரி - மகிந்தவை ஒன்றிணைக்க முயற்சி

### ஜோன் செனவிரட்ன களத்தில்

கொழும்பு, ஜூலை 18
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் ஒற்றுமைப்படுத்தும் முயற்சிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்குரிய பொறுப்பு அமைச்சர் ஜோன் செனவிரட்னவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

"சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரிவடையச் செய்வது ஆபத்தானது. கட்சியை ஒன்றிணைக்கவேண்டும். மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிய கட்சியை ஆரம்பித்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும்" என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலர் கருத்துத் தெரிவித்தனர்.

கட்சியை ஒருங்கிணைக்க முயற்சிக்கும் மூத்த உறுப்பினர்கள் பலர் அண்மையில் ஒன்று கூடி கலந்துரையாடல் நடத்தினர். இந்தக் கலந்துரையாடல் பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சந்திம வீரக்கொடியின் இல்லத்தில் நடைபெற்றது.

"கட்சியையும் கட்சித் தலைமையையும் விமர்சனம் செய்வதனால் நாட்டுக்கோ, கட்சிக்கோ எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை. அனைத்துத் தரப்பினரையும் இணைத்துக் கொள்வதன் மூலமே கட்சியை வெற்றியீட்டச் செய்ய முடியும்" என்று அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்தார்.

(வ-5)


## மரண அறிவித்தல்கள்



### திருமதி தனுஷ்கா ஜெயரஞ்சன்

(ஆசிரியை - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை)

கலைமகள் வீதி, அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனுஷ்கா ஜெயரஞ்சன் 14.07.2016 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சுரேந்திரன் (இத்தாலி) - வசந்தகுமாரி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற தேவபாலசந்திரன் மற்றும் தவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகளும், ஜெயரஞ்சனின் (கியூமெடிக்கா) பாசமிகு மனைவியும், ஜெனுஷாவின் (மாணவி - ஏஞ்சல் சர்வதேச பாடசாலை) அன்புத் தாயாரும், கவிநயாவின் (மாணவி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான தம்பு - அருளம்மா, வைரமுத்து (கபில்) மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ஜெயரஞ்சித் (முகாமையாளர் - தேசிய சேமிப்பு வங்கி- மல்லாவி), காலஞ்சென்ற ஜெயரஞ்சினி மற்றும் ஜெயசுதன் (முகாமையாளர் H.N.B அசூரன்ஸ் - கிளிநொச்சி), ஜெயராம் (சித்தமருத்துவர் - கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான நேசராசா, அமிர்தலிங்கம் மற்றும் மகேஸ்வரி, பரநிருபராணி, கேதீஸ்வரன்- நாகேஸ்வரி, செல்வரட்ணம்- நந்தினிகுமாரி ஆகியோரின் பாசமிகு பெறாமகளும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை, பாலசிங்கம், பரமேஸ்வரி மற்றும் தர்மகுலதேவி, ஜெகநாதன் தர்மராணி, சந்திரகுமார் - ஞானேஸ்வரி, சௌந்தகுமார் - ரஜனி, வசந்தகுமார் - சர்மிளா, அசோக்குமார் - மேகலை ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (18.07.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்துக்காக பூதவுடல் முற்பகல் 10 மணிக்கு கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/3015)
(11,17,18)

**தகவல்: குடும்பத்தினர்.**
**33/8, கலைமகள் வீதி,அரியாலை,யாழ்ப்பாணம்.**

### திருமதி இராஜேஸ்வரி கனகசபை



கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி கனகசபை 16.07.2016 சனிக்கிழமை இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நல்லம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - மாரிமுத்து தம்பதிகளின் மருமகளும், கனகசபையின் (இளைப்பாறிய பிரதம சிறாப்பர், யாழ்.மாநகரசபை, நிதி ஆலோசகர்- இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசம்மா மற்றும் இராசநாயகம் (நொத்தாரிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் விஜயகுமாரி, சாந்தமலர், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தெல்லியூர் நடராசா - கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், இராஜமனோகரன் (முகாமையாளர் - வர்த்தக வங்கி திருநெல்வேலி), இராஜமோகன் ( Soft ware Developer Canada ) ஆகியோரின் அன்புத் தாயாரும், இரஜனி (ஆசிரியை - சைவப்பிரகாச வித்தியாலயம் - கந்தர்மடம்), சுஜித்தா (Canada) ஆகியோரின் அன்பு மாமியாரும், பிரியந்தி (மாணவி - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), ஆரபி, ஆதிரை, ஆரணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

**இல.07, குமாரசாமி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**

(J/3014)

**தகவல்: [illegible] கனகசபை (கணவர்)**

**021 222 6369**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அக்னஸ் மனுவேல்பிள்ளை



பிறப்பு: 14.01.1923
இறப்பு: 17.07.2016

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியைச் சேர்ந்த திருமதி அக்னஸ் மனுவேல்பிள்ளை நேற்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மனுவேல்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கிறேஸின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற ஜேக்கப் மற்றும் வில்பிறட், லீலா, அல்பிறட், காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் இந்திராவதி மற்றும் பத்மாவதி, சந்திராவதி ஆகியோரின் தாயாரும், காலஞ்சென்ற லூட்ஸ் மற்றும் எட்வேட், வனஜா, ஜெயா, கிரிதரன், தேவா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.07.2016)திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்குப் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.33, விதானையார் வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**
**077 531 1252**

### திருமதி நேசமணி கந்தசாமி



சாவகச்சேரி, தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசமணி கந்தசாமி நேற்று (17.07.2016)ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரேசு - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், நடராஜா, காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜானகியின் அன்புத் தாயாரும், செந்தில்குமாரின் அன்பு மாமியாரும், கோகிலவதனன், கோகில்ராஜ், விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**தபாற்கந்தோர் வீதி,சாவகச்சேரி. குடும்பத்தினர்.**

### திருமதி புஸ்பராணி பொன்னுத்துரை



கட்டுவனைப் பிறப்பிடமாகவும், மீசாலை வடக்கை (வயற்கரை) வதிவிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி பொன்னுத்துரை 15.07.2016 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் (RVDB-பொறியியலாளர்) அன்பு மனைவியும் நரேன் (லண்டன்), ரேகா(பிரான்ஸ்), சுரேன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நேசமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஞானாமிர்தம் (இந்தியா), காலஞ்சென்ற தேவராசா மற்றும் செகராசா (RVDB இலங்கை), சந்திரலீலா (கனடா), காலஞ்சென்ற யோகராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னத்துரை, இராசதுரை, யோகநாதன், கந்தசாமி, குமாரசாமி (சுவிஸ்), தவயோகம் ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வயற்கரை, மீசாலை வடக்கு.**

தகவல்:
**நரேன், சுரேன், ரேகா (பிள்ளைகள்)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மலர்சோதி தில்லையம்பலம்

**தோற்றம்:10.10.1930**
**மறைவு:17.07.2016**



கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மருதனார்மடம் 3ஆம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மலர்சோதி தில்லையம்பலம் நேற்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி செல்லப்பா (வைத்திய நிபுணர்)-தங்கமுத்து தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற தில்லையம்பலம் (தபால் அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் சிவசோதி நாகமணி (கனடா), காலஞ்சென்ற பரஞ்சோதி சிவகுரு நாதர், ஜெகசோதி (ஓய்வு பெற்ற ஆங்கில ஆசிரியர், மகாஜனக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற ராமசந்திரனின் அன்புச் சகோதரியும் சுகந்தியின் (கனடா) தாயாரும் ஞானகணேஸின் மாமியும் சதீஸ் (கனடா), விதுஸ் (கனடா) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் மருதனார்மடம் 3 ஆம் ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**ஜெகசோதி செல்லப்பா (சகோதரி),**
**சுகந்தி (மகள்)**

### நல்லதம்பி சிவஞானலிங்கம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி சிவஞானலிங்கம் (மில் வெள்ளை) நேற்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், ராணிபுஸ்பம், சிவபாலகிருஸ்ணன், புவனேந்திரன், கிருஷ்ணகுமாரி, சந்திரிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2.00 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**டாக்டர் சுப்பிரமணியம் வீதி,**
**சுன்னாகம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 627 9986**

### தம்பிப்பிள்ளை குணசேகரம்பிள்ளை



கொய்யாத்தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை குணசேகரம்பிள்ளை நேற்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கலட்சுமியின் அன்புக் கணவரும் அருந்தவம், கதிர்காமநாதன் (பரா), சண்முகநாதன் (சிவா), பத்மநாதன் (ஜெகன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜசிங்கம், விமலா, விபுலா, சிவா ஆகியோரின் மாமனும் சுந்தரம்பிள்ளை, சிதம்பரப்பிள்ளை, கைலாயபிள்ளை, தில்லையம்மா, சிவஞானம், பரிமளம், இலக்ஷ்மி, முருகேசம்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபாஷினி, பிரியன், இன்பன், நீத்தா, நிலாந்தன், சாருகாந், கிருசாந், தர்சினி, சுதா, ரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஷேஷந்தின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(18.07.2016) திங்கட்கிழமை பி.ப 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**7/1, புது வீதி,**
**கொய்யாத்தோட்டம்,**
**சுண்டுக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**மகள்.**

## படை முகாம்வெடிப்பு; இடரில் பாதித்த மக்களுக்கு இழப்பீடு

கொழும்பு, ஜூலை 18


சலாவ இராணுவ முகாமில் ஏற்பட்ட திடீர் இடர் நிலமை காரணமாகப் பாதிக்கப்பட்ட சொத்துக்கள் மதிப்பீட்டுப் பணிகள் 90 சதவீதம் பூர்த்தி அடைந்துவிட்டன. இதன் பிரகாரம் மதிப்பீட்டுத் தொகையில் 50 சதவீதத்தை அடுத்த வாரம் இழப்பீடாக வழங்கவிருப்பதாக நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பாக நிதியமைச்சில் கலந்துரையாடலில், இழப்பீடு வழங்குவதற்கு எந்தவித நிதிப் பிரச்சினையும் கிடையாது எனவும் அவர் குறிப்பிட்டார். (வ-5)

## மரண அறிவித்தல்

### தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்

(இளைப்பாறிய அதிபர்-நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்)



நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை பாலசிங்கம்கடந்த (16.07.2016) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பெரியநாயகியின் அன்புக் கணவரும் சசிதேவி(கனடா), ஹரிகரன் (கனடா), இளங்கோ(கனடா), ரஜனி (கனடா), ஜெயலலிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, மனோன்மணி, குணபாலலெட்சுமி, கமலாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராஜபாலன் (கனடா), ரேணுகா (கனடா), கலாநிதி(கனடா), குலசிங்கம்(கனடா), சச்சிதானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான விசாகப்பெருமாள், மங்கையற்கரசி, பாலசுப்பிரமணியம், குற்றாலலிங்கம், ச.நா.கந்தையா, கார்த்தியேசு, இராமுப்பிள்ளை, பாலசிங்கம் மற்றும் பார்ப்பதிதேவி ஆகியோரின் அருமை மைத்துனரும் கேசவகாந், மிதுஷனா, கம்ஷனா, அனோஜிதா, சோபிதா, ஹரிசன், டிலக்ஷனா, விதுஷா, அனோஜ், கபிலன், றேகன் மற்றும் நிவாணன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.07.2016 புதன்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**5ஆம் வட்டாரம்,**
**நயினாதீவு.**

தகவல்:
**க.குலசிங்கம் (மருமகன்)**
**077 9763300 (இலங்கை), 001416321 8194 (கனடா)**

## காணிப் பிணக்கு கைகலப்பில் முடிந்தது

சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று கைகலப்பு இடம் பெற்றது. தமிழ் – முஸ்லிம் சமூகத்தவர்களிடையே காணி உரிமை தொடர்பில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பாக மாறியதாக பொலிஸார் தெரிவித்தனர். கைகலப்பு சம்பவம் தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அப்துல் மஜீது (வயது - 63), கோணேஸ்வரன் கணேஸ் (வயது - 22) இருவருமே கைதாகினர்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இந்தக் கைகலப்பு இடம்பெற்றது. கைகலப்பை தொடர்ந்து பதற்றமான நிலமை அந்தப் பகுதியில் ஏற்பட்டது.


சம்பவத்தில் காயமடைந்த அறுவரில் நால்வர் சேருநுவர வைத்தியசாலையிலும் இருவர் மூதூர் வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டனர்.

தோப்பூர் செல்வநகர் பகுதியைச்சேர்ந்த அப்துல் மஜீது நஜிமுதீன் (வயது -57), நஜிமுதீன் இர்சாத் (வயது-20), நூர்து முஹம்மது குபைபுல்லாஹ் (வயது - 45), ஏ.எம்.சிராஜிதீன் (வயது -58), உப்பூரல் பகுதியைச் சேர்ந்த நாகராசா (வயது -40) மற்றும் ந.சிவசோதி (வயது - 45) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (வ-5)

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற தொழிநுட்ப உத்தியோகத்தர்- மல்லாகம் பிரதேச சபை)



குப்பிளான் கேணியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை தர்மலிங்கம் நேற்று (17.07.2016) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் சாரதாதேவியின் அன்புக் கணவரும் காலஞ் சென்ற வேலாயுதபிள்ளை-சிவபாதம் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற சண்முகம்-சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருகனும் சிவராமுவின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற K.K.இராசரத்தினம் மற்றும் அருந்தவநாதன் ஆகியோரின் அன்புச் சகலரும் கலா, சறோஜினிதேவி, ராதா ஆகியோரின் அன்பு மைத்துனரும் காணப்பிரியா, சிந்துஜா, கிரிசுதா, செந்தூரன், கரிகரன் ஆகியோரின் பெரியப்பாவும் சுஜந்தன், ஓங்காரரூபன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.07.2016) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible] வீதி,**
**தாவடி வடக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: மனைவி,**
**இ.செந்தூரன்**
**077 9408489**

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி (பேபி) கதிர்காமராசா



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி (பேபி) கதிர்காமராசா நேற்று (17.07.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை- இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற வர்களான நடராசா - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும், கதிர்காமராசாவின் அன்பு மனைவியும், மதுராவின் பாசமிகு தாயாரும், செல்வக்குமார் (குமரன் -சுமங்கலி நகை மாடம்) பாசமிகு மாமியும், கவின்சன், அஸ்மிதன் ஆகியோின் அன்புப் பேர்த்தியும், இரத்தினம் மாவின் அன்புப் பெறாமகளும் வசந்தாதேவி (லண்டன்), பிறேமா (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.07.2016) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தட்டு மடம் வீதி,**
**கோண்டாவில் மேற்கு,**
**கோண்டாவில்.**

**தகவல்:**
**ந. கதிர்காமநாதன் (கணவர்),**
**செ. செல்வக்குமார் (குமரன் மருமகன்)**
**021 492 0043, 077 0306738**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய பாதுகாப்பு அதிகாரிகள் முக்கிய பேச்சு



கொழும்பு, ஜூலை 18

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய பாதுகாப்புத் தலைமை அதிகாரிகள் குழுத் தலைவர் எயர் மார்ஷல் அஜித் பொன்ஸ்லே, இலங்கையின் பாதுகாப்பு உயர் அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் ககன் புலத் சிங்களவை விமானப் படைத் தலைமையகத்திலும், பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சியை பாதுகாப்பு அமைச்சு அலுவலகத்தில் அஜித் பொன்ஸ்லே சந்தித்துப் பேச்சு நடத்தினார். இராணுவ மற்றும் கடற்படைத் தளபதிகளுடனும், அவர் இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த, பலதரப்பு உறவுகள் குறித்தும் பேச்சுக்கள் நடத்தினார் என பாதுகாப்புத் தரப்புச் செய்திகள் தெரிவித்தன. (வ-5)

# பயங்கரவாதச் சட்டத்தை நீக்க அமெரிக்கா கோருவது தவறு

## இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா கூறுகிறார்

துருக்கியில் இராணுவப் புரட்சியை ஏற்படுத்துவதற்குக் காரணமான அமெரிக்கா, இலங்கையில் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் எவ்வாறு கேட்க முடியும். இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் போர் நிறைவடைந்து விட்டது. தற்போது பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இல்லை. பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குமாறு கோருவதற்கு அமெரிக்காவுக்குத் தகுதி கிடையாது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிற்கு அழுத்தம் கொடுப்பதனை எங்களால் நிராகரிக்க முடியாது. ஏனெனில் பன்னாட்டுச் சமூகத்துக்கு கொடுத்த வாக்குறுதியை அவர் நிறைவேற்றவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான ஆட்சியில் அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார். (5)

# வற் வரி சட்ட வரைவில் திருத்தம் செய்ய வேண்டும்

## சுதந்திரக்கட்சி வலியுறுத்து

வற் வரி தொடர்பாக நாடாளுமன்றில் முன்வைக்கப்படவுள்ள சட்ட வரைவில் திருத்தம் செய்ய வேண்டும். திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவு வழங்காது.

இவ்வாறு நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்களின் கோரிக்கைகளுக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். அரசில் இருந்து கொண்டு போராட்டம் நடத்துவோம்.

வற் வரி விதிப்பின் காரணமாக ஏற்படக் கூடிய பாதிப்புகளை ஆராய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் நியமிக்கப்பட்ட குழுவினது அறிக்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கப்படவுள்ளது - என்றார். (வ-5)

### தமிழ்த்

சுருங்கிச் செல்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இதனை நிவர்த்தி செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள்ளே முழுநேர அரசியல் செயற்பாட்டாளர்கள் அதிகம் இருக்கின்றனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நிலைத்து நீடிப்பதற்கு இதுவும் காரணம். முழுநேர அரசியல் செயற்பாட்டாளர்களை, கூட்டமைப்பு உரிய வகையில் பயன்படுத்த வேண்டும். கூட்டமைப்பை மக்கள் மயப்படுத்தவேண்டும்.

தமிழ் மக்களுக்காக எடுக்கப்படும் முடிவுகளை, இராஜதந்திர வரையறைக்குள் வைத்துக் கொண்டு அதனை வெளிப்படுத்தாமல் விடக்கூடாது. கூட்டமைப்பில் தற்போது வெளிப்படைத் தன்மை இல்லை. மக்களுக்காக எடுக்கப்படும் முடிவுகளை அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யார் செல்வது, என்ன பேசுவது என்பது தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கூடி முடிவெடுக்க வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாகாணசபை உறுப்பினர்களுக்கு இடையில் ஒற்றுமையில்லை. இவர்களை ஒற்றுமைப்படுத்த கூட்டமைப்புதலைமை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற கருத்துக்களும் சிலரால் முன்வைக்கப்பட்டன.

இதன் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் உரையாற்றினார். அவர் தெரிவித்ததாவது:

மகிந்த ஆட்சியுடன் ஒப்பிடுகையில் தற்போது ஓரளவு விடயங்கள் நடைபெற்றிருக்கின்றன. காணி விடுவிப்பு, படைக் குறைப்பு என்பன ஓரளவாவது நடந்திருக்கின்றன.

வடக்கில் நடைபெறும் இந்த முன்னேற்றங்களைத் தென்பகுதியில் காண்பித்துக் குழப்புவதற்கு மகிந்த தரப்பு முயல்கின்றது. மகிந்த தரப்பினர் எதிர்வரும் 28ஆம் திகதி கண்டியிலிருந்து கொழும்புக்கு நடை பயணம் செல்ல இருக்கின்றார்கள். இந்த அரசினால் முன்னெடுக்கப்படும் அரசமைப்பு உருவாக்க முயற்சியையும் குழப்ப முயற்சிக்கின்றார்கள். தென்பகுதியில் குழப்பத்தை ஏற்படுத்துவதில் அவர்கள் தீவிரமாக இருக்கின்றார்கள்.

வடபகுதியில் அதே வகையில் குழப்பங்கள் உருவாகக்கூடாது. இங்கு குழப்பங்கள் உருவாகினால் மகிந்த ஆட்சி அமைவதற்கு அதுவே வழிகோலும். எனவே மக்கள் இயன்றளவு பொறுமையாக இருக்க வேண்டும். குழப்பங்களினால் மகிந்தவை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டு வந்து விடக் கூடாது.

நாம் ஒரு போதும் ஒற்றையாட்சிக்குள் வழங்கப்படும் தீர்வை ஏற்றுக்கொள்ள மாட்டோம். வடக்கு - கிழக்கு இணைந்த கூட்டாட்சி முறையிலான தீர்வையே நாம் கோரி நிற்கின்றோம். இதில் எந்த மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

கட்சிக்குள் காணப்படும் மாற்றுக் கருத்துக்களைக் கொண்டு கட்சிக்குள் குழப்பம் என்று சொல்ல முடியாது - என்றார் இரா. சம்பந்தன். (வ-5)

### தமிழ்

ரிகர்கள் பயணித்த வாகனம் கதிர்காமம் நோக்கிச் சென்று கொண்டிருந்தது. "இது எமது இடம் உங்களை யார் வரச் சொன்னது" என்று கேட்டுத் தாம் தாக்கப்பட்டனர் என தமிழ் யாத்திரிகர்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்தனர். சிங்களவர்களே தம் மீது தாக்கு தல் நடத்தினர் என்றும் கூறி உள்ளனர். இதன்போது பின்னால், ஒரு வாகனம் வந்துள்ளது. அது முந்திச் செல்ல தமிழ் யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற வாகனச் சாரதி இடமளிக்கவில்லை. இதையடுத்தே பின்னால் வந்த வாகனத்தில் இருந்த சிங்களவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று பொலிஸ் முறைப்பாடு தெரிவிக்கிறது.

மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் தாக்குதலில் காயமடைந்தனர். அவர்களின் வாகனம் சேதமாக்கப்பட்டது. சம்பவம் தொடர்பில் கதிர்காமம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர். (உ-வ-5)

### மாணவர்கள்

இதுபோன்ற சம்பவங்களோ அல்லது வேறு சம்பவங்களோ, சமூகத்தின் உண்மையான நல்லிணக்கத்தைப் பாதிப்பதற்கு மாணவர்கள் அனுமதிக்கக் கூடாது என்று கூட்டமைப்பு கோருகின்றது.

வெளியேற்றப்பட்ட மாணவர்களைத் திரும்பி வருமாறு அழைப்பு விடுக்கும் அதே வேளையில், அவர்களை வரவேற்று அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி கற்றல் நடவடிக்கையினை மீள ஆரம்பிக்க நல்வரவு கூறுமாறு ஏனைய மாணவர்களிடம் கேட்டுக் கொள்கின்றது.

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்காலத்தில், வெவ்வேறு பின்னணிகளைக் கொண்ட மாணவர்கள் வசிக்கவும், படிக்கவும் ஏற்ற சூழலை உருவாக மாணவர்களும் நிர்வாகமும் இணைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் – என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)

### இனவாதத்துக்குள்

பரப்பப்பட்டு வருவதைக் காண முடிகின்றது.

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில், தமிழ் - சிங்கள மாணவர்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அடிதடி இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து விடுதியில் தங்கியிருந்த சிங்கள மாணவர்கள் வெளியேற்றப்பட்டனர். தாக்குதல் தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் அதிகளவில் பகிரப்பட்டு வருகின்றது. தாக்குதலுக்கு இலக்கான சிங்கள மாணவர்கள் மற்றும் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட மாணவர்களும் தமது கருத்துக்களைக் காணொலிகளாக முகநூலில் பகிர்ந்துள்ளனர்.

"தமிழ் மாணவர்கள் இனவெறியுடன் சிங்கள மாணவிகள் மீது தாக்குதல் நடத்தினர்" என்று சிங்கள மாணவர்கள் கருத்துத் தெரிவிக்கும் காணொலியும் சமூகவலைத் தளத்தில் பகிரப்பட்டுள்ளது.

இந்தக் காணொலியின் கீழே கருத்துத் தெரிவித்திருப்பவர்கள் இனவாதத்தை அள்ளித் தெளித்துள்ளனர். விடுதியிலிருந்து வெளியேறிய மாணவர்களில் ஒரு தொகுதியினர் தமது முகநூலின் முகப்புப் படத்தை கறுப்புக் கொடியாக மாற்றியுள்ளனர்.

இதேவேளை தமிழ் முகநூல் பதிவாளர்கள், பல்கலைக்கழகச் சம்பவம் தொடர்பில் பல்வேறு கருத்துக்களைப் பகிர்ந்தனர். "தற்போதைய சூழலில் இவ்வாறான தாக்குதல் சம்பவங்கள் தென்பகுதியில் மகிந்தவுக்கு ஆதரவான நிலைப்பாட்டை ஏற்படுத்தும், தென்பகுதி பல்கலைக் கழகங்களில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களின் நிலையையும் கருத்தில் கொள்ள வேண்டும்", என்று ஒரு சாரார் கருத்திட்டுள்ளனர். யாழ்.பல்கலைக்கழகம் தமிழர் போராட்டத்தின் அடிநாதம். அங்கு தமிழர் கலாசார முறைப்படியே நிகழ்வு இடம்பெற வேண்டும், சிங்கள மாணவர்கள் இனத்துவேச அடிப்படையில் தங்களால் எதுவும் செய்யமுடியும் என்பதைக் காண்பிக்க முற்படுகின்றனர்" என்று மற்றொரு சாரார் பதிவிட்டுள்ளனர்.

சம்பவத்தை ஊதிப் பெருப்பித்து – மோதலை மேலும் வலுவாக்கும் கருத்துக்களும் சமூகவலைத் தளங்களில் உலா வருகின்றன என்று அவதானிகள் தெரிவித்தனர். இது கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தனர். (வ-5)

### விடுவிக்கப்பட்ட

தனர்" என்று மக்கள் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 25ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வலி.வடக்கில் 201 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டது. காங்கேசன்துறை பிரதான வீதியில் தல்செவன விடுதி வரை மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்டது. இந்தப் பகுதியில் நிலைகொண்டிருந்த படையினர் வெளியேறினர். பொலிஸார் 59 ஏக்கரை விடுவிக்கவில்லை. பொலிஸாருக்கு மாற்றுக் காணி மாவட்டச் செயலகத்தினால் வழங்கப்பட்டது. எனினும் பொலிஸார் அங்கிருந்து அகலவில்லை.

பொலிஸாரின் பாவனையிலுள்ள 59 ஏக்கரைவிட, மக்கள் பாவனைக்குக் கையளிக்கப்பட்ட காணிகளையும் தற்போது பொலிஸார் வேலிகளை அமைத்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று மக்கள் கூறுகின்றனர். இதனால் காணிகளைத் துப்புரவு செய்த மக்கள் ஏமாற்றமடைந்தனர்.

விடுவிக்கப்பட்ட இந்தப் பகுதியில் இரண்டு வீதிகளைத் திருத்தம் செய்வதற்கு மாவட்ட செயலகம் விலைமனுக் கோரியிருந்தது. இந்த வீதிகளும் பொலிஸாரினால் நேற்றைய தினம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளன. (உ-வ-5-101)

### இழுத்து

பின்னர், அனைத்துப் பீடங்களையும் தற்காலிகமாக மூடுவது என்ற முடிவு நேற்று எடுக்கப்பட்டது. குழப்பத்தினால் பல்கலைக் கழகத்தில் கண்ணாடிகள் நொறுக்கப்பட்டமை உள்ளிட்ட சேதவிவரங்களைக் கோப்பாய் பொலிஸார் நேற்றுச் சென்று பார்வையிட்டனர்.

"பல்கலைக்கழகத்தில் நடந்த எதிர்பாராத சம்பவம் தொடர்பில் நிர்வாகம் கவலையடைகிறது. விரிவுரையாளர்களும் மாணவர்களும் அனைத்துப் பீடங்களின் கல்விசார் நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளனர். நிர்வாகம் அனைத்து மாணவர்களுக்குமான கல்வி நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு ஏற்ற பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திக் கொடுக்கும் என்பதனை அனைத்து மாணவர்கள், அவர்கள் தம் பெற்றோர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிக்கின்றது" என்று யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் விஞ்ஞான பீடத்தில் புதுமுக மாணவர்களை வரவேற்கும் நிகழ்வில், நிகழ்ச்சி நிரலில் இல்லாத, கண்டிய நடனத்தை திடீரென நடத்த அனுமதிகோரியதனால் முரண்பாடு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறதது. இதனால் தமிழ் – சிங்கள மாணவர்கள் இடையே அடிதடி ஏற்பட்டது. காயமடைந்த 4 பேர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் ஒருவர் தலையில் படுகாயமடைந்ததனால் கொழும்பு வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஏனையவர்கள் சிகிச்சை பெற்று நேற்றுமுன்தினமிரவே தென்பகுதிக்குத் திரும்பிவிட்டனர். (வ-4)

### பல்கலைக்கழகக்

என்று தெரியவருகின்றது. யாழ்.பல்கலைக் கழகத்தில் நடந்த அடிதடி சம்பவம் தொடர்பில் ஆராய்வதற்காக நேற்று சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது. இதில் யாழ்.பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பீடங்களையும் உடனடியாக காலவரையறையின்றி மூடுவதற்கு தீர்மானம் எட்டப்பட்டது. அத்துடன் அடிதடி சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்த மூன்று பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டது.

இந்தக் குழுவில் அங்கம் வகிக்கும் மூவரில் இருவர் பல்கலைக்கழக நிர்வாகத்தினைச் சேர்ந்தவர்களாக இருப்பர் என்றும் ஒருவர் வெளிநபராவார் என்றும் தெரிய வந்தது. அவர்களுடைய விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இதேவேளை, பல்கலைக் கழகத்தின் நிலமை தொடர்பில் நேற்று மாலையில் வடக்கு மாகாண ஆளுநரை துணைவேந்தர் மற்றும் விஞ்ஞானபீட பீடாதிபதிகள் ஆகியோர் சந்தித்துக் கலந்துரையாடினர். (வ-5-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடகளத் தொடரில் இறுதிநாள் இன்று

யாழ்ப்பாணம், ஜுலை 18
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரின் இறுதிநாள் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன.

இன்றைய இறுதிநாள் போட்டிகள் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். 15 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் நடைபெறவுள்ளன.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் உயரம் பாய்தல், 110 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் என்பனவும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 110 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 110 மீற்றர் சட்டவேலி, 100 மீற்றர் ஓட்டம், 4 வீரர்கள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் பெண்கள் பிரிவில் 100 மீற்றர் சட்டவேலி, தட்டெறிதல், 100 மீற்றர் ஓட்டம், 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 400 மீற்றர் அஞ்சலோட்டம் ஆகியனவும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து மாலை நடைபெறவுள்ள பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துகொள்ளவுள்ளார். (ம-422)




# சரிவிலிருந்து மீண்டது யாழ். நான்காம் நாளில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜுலை 18
பாடசாலைகளுக்கு இடையிலான தடகளத் தொடரில் நேற்றைய நான்காம் நாள் முடிவில் யாழ். கல்வி வலயம் முதலிடத்தைப் பிடித்தது.

மூன்றாம் நாளில் மன்னார் கல்வி வலயம் ஆதிக்கம் செலுத்திய போதிலும் நான்காம் நாளில் அதனைத் தொடர முடியவில்லை.

நான்காம் நாள்களின் முடிவில் யாழ். கல்வி வலயம் 528 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது. முதலிடத்தில் உள்ள யாழ்ப்பாணத்துக்கும் இரண்டாம் இடத்தில் உள்ள மன்னாருக்கும் இடையே 21 புள்ளிகள் வித்தியாசமே காணப்படுகிறது. இதன்படி மன்னார் 507 புள்ளிகளைப் பெற்றுள்ளது. 371 புள்ளிகளுடன் வலிகாமம் கல்வி வலயம் மூன்றாம் இடத்தில் உள்ளது. 298 புள்ளிகளுடன் வடமராட்சி நான்காமிடத்திலும், 263 புள்ளிகளுடன் கிளிநொச்சி ஐந்தாமிடத்திலும் உள்ளன. 6 முதல் 12 வரையிலான இடங்களில் முறையே முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா தெற்கு, மடு, தென்மராட்சி, வவுனியா வடக்கு, தீவகம் ஆகிய கல்வி வலயங்கள் உள்ளன. (ம-23)

## டிரிபேர்க் கல்லூரிக்குத் தங்கம் உயரம் பாய்தலில் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜுலை 18
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான உயரம் பாய்தலில் டிரிபேர்க் கல்லூரிக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

குறித்த கல்லூரியின் சார்பாக களமிறங்கிய கே.ரதீஸ் 1.84 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கத்தைத் தனதாக்கினார். 1.94 மீற்றரே சாதனையாக உள்ளது. சென். ஹென்றிஸ் கல்லூரியின் கே.ராம்குமார் 1.80 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், நெல்லியடி மத்திய கல்லூரியின் எஸ்.இனியவன் 1.75 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## கோலூன்றிப் பாய்தலில் மகாஜனாவுக்குத் தங்கம்

யாழ்ப்பாணம், ஜுலை 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு கோலூன்றிப் பாய்தலில் மகாஜனக் கல்லூரி தங்கம் வென்றது.

மகாஜனக் கல்லூரியின் சார்பாகக் களமிறங்கிய எஸ்.டிலுக்சன் 4.3 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து தங்கப் பதக்கத்தை வென்றார். அருணோதயக் கல்லூரியின் வீரர்களான எம்.தனேஸ் 4.1 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப்பதக்கத்தையும், கே. நெப்தலிஜொய்சன் 3.4 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)



# மைதானம் இல்லாததால் ஓட்டம் நிற்கவில்லை தடகளத்தில் சாதனை படைத்தார் அனுசலா

மன்னார் கற்கிடந்தகுளம் மாகாண மட்டப் போட்டிகளில் சாதனைக்குச் சொந்தம் கொண்டாடி தசாப்த காலமாகிவிட்டது. நீண்டகால காத்திருப்பு, நீண்ட காலத் தவிப்புக்கு மத்தியில் நடப்பு வருடத்தில் அந்தப் பாடசாலையின் கனவை நனவாக்கியுள்ளார் ஏ.அனுசலா.

மன்னார் நகர்ப்புறத்திலிருந்து கிட்டத்தட்ட ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் உள்ளது கற்கிடந்தகுளம் என்னும் குக்கிராமம். இக்கிராமத்தின் அடையாளங்களில் ஒன்றுதான் கற்கிடந்தகுளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை. வசதிவாய்ப்புக்கள் குறைவான ஓர் பாடசாலை. இந்தப் பாடசாலைக்கு என்று சொந்தமாக மைதானம் இல்லை. மைதானம் இல்லாமை, வளப்பற்றாக்குறை இவற்றால் அனுசலாவைக் கட்டிப்போட இயலவில்லை. 239 மாணவர்களைக் கொண்ட அந்தப் பாடசாலையின் அன்றாட பிரார்த்தனை நடைபெறும் இடத்தில்தான் அவ ளின் பயிற்சியும் நடைபெற்றது. விடாமுயற்சி பெரு வெற்றி என்பதுக்கேற்ப நடப்பு வருட தடகளத் தொடரில் 17 வயதுக்குட்பட்ட




பெண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் குறித்த பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்து தங்கம் வென்றதுடன் சாதனையும் நிலைநாட்டினார் ஏ.அனுசலா.

அனுசலாவின் தந்தை ஓர் விவசாயி. வரவுகள் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளுக்கே சரியாகிவிடும் என்பதால் விளையாட்டுடன் தொடர்புடைய தேவைகளையெல்லாம் பாடசாலைதான் பொறுப்பேற்றது. "அவளின் முயற்சிக்கு ஏற்ற வெற்றிதான் கிடைத்தது" என பெருமிதத்துடன் தெரிவித்தார் அதிபர் எஸ்.பிரான்சிஸ். "அனுசலாவும் அவரது பயிற்சியாளரான ஏ.அருள்ரூபனும் (குறித்த பாடசாலையின் உடற்கல்வி ஆசிரியர்) காலை ஆறு மணிக்கு பயிற்சிகளை ஆரம்பிச்சுடுவினம். ஏதேனும் தேவை எண்டால் கேப்பினம். உடனே செய்துகொடுத்துவிடுவன். மற்றும்படி இந்த வெற்றிக்கும் எனக்கும் சம்பந்தமில்லை" எனத் தெரிவித்து பயிற்சியாளரின் கடின உழைப் பையும் கவனிக்க வைக்கிறார்.

தனது பாடசாலையின் பிரதிநிதியாக மேடையேறிப் பதக்கம் பெற்றமையைப் பெருமையாகக் கருதும் அனுசலா, தனது பயணத்தின் அடுத்த கட்டமாக தேசியத்தில் வடக்குக்காக ஓடவுள்ளார். தேசியத்திலும் தனது வெற்றி உறுதி என்கிறார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகர்க்கப்பட்டவையும் படைக்கப்பட்டவையும்

யாழ்ப்பாணம், ஜூலை 18
மாகாணமட்ட தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. நேற்றைய நான்காம் நாளில் ஏழு சாதனைகள் படைக்கப்பட்டன.

17 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் 4 வீராங்கனைகள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அணி 55 செக்கன்கள் 8 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனை படைத்தது. குறித்த பாடசாலையில் 2012 ஆம் ஆண்டு அஞ்சலோட்ட அணி 56 செக்கன்களில் இலக்கை அடைந்ததே சாதனையாக இருந்தது.

17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் அடம்பன் மத்திய மகா வித்தியாலயத்தின் எம்.மேரிஜான்சி 5 நிமிடங்கள், 9 செக்கன்கள், ஒரு மில்லிசெக்கனில் இலக்கை அடைந்து சாதனை படைத்தார். வவுனியா பூவரசங்குளம் மத்திய மகா வித்தியாலயத்தின் கே.நேர்மதி கடந்த 2013 ஆம் ஆண்டு 5 நிமிடங்கள், 20 செக்கன்கள், 8 மில்லிசெக்கனில் இலக்கை அடைந்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஹாட்லிக் கல்லூரி அணி 47 செக்கன்கள் ஒரு மில்லி செக்கனில் ஓடி முடித்து சாதனை படைத்தது. இதே பாடசாலை அணி கடந்த வருடம் 47 செக்கன்கள் 3 மில்லி செக்கன்களில் ஓடிமுடித்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

17 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு 400 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் சென். ஆன்ஸ் மத்தியமகா வித்தியாலயத்தின் ஏ.அபிக்சன் 53 செக்கன்கள், 8 மில்லிசெக்கன்களில் ஓடி முடித்து சாதனை படைத்தார். கடந்த 2008 ஆம் ஆண்டு சென்.பற்றிக்ஸ் கல்லூரியின் ஜெ.ஜக்சன் 54 செக்கன்கள், 3 மில்லிசெக்கன்களில் ஓடிமுடித்ததே இதுவரை சாதனையாக இருந்தது.

19 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் தட்சணாமருதமடு அ.த.க. பாடசாலையைப் பிரதிநிதித்துவம் செய்த பி.பிரியங்கா 5 நிமிடங்கள், 16 செக்கன்கள், 5 மில்லிசெக்கன்களில் ஓடிமுடித்து நேர்மதியிடம் இருந்த சாதனையை இல்லாமல் செய்தார்.

19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி 44 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து சாதனை படைத்தது. கடந்த வருடம் ஹாட்லிக் கல்லூரி அணி 45 செக்கன்கள் 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தமையே இதுவரை சாதனையாக இருந்தது.

19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான முப்பாய்ச்சலில் யாழ். மத்திய கல்லூரியின் ரி.செந்தூர்ஜன் 13.66 மீற்றருக்குப் பாய்ந்து புதிய சாதனையைப் படைத்தார். யாழ். இந்துக் கல்லூரியின் எம்.டக்சன் கடந்த 2013 ஆம் ஆண்டில் 13.28 மீற்றருக்குப் பாய்ந்ததே இதுவரை சாதனையாக இருந்தது.
(ம-23)

# மாகாணத்தில் ஓர் அரிய சாதனை; படைத்தார் மடு வலய பிரியங்கா

மாகாணமட்டத்தில் தங்கப்பதக்கம் பெறுவதே பல வீர, வீராங்கனைகளின் கனவாக உள்ள நிலையில் தான் களமிறங்கிய மூன்று போட்டிகளிலும் சாதனை படைத்து சாதனைகளில் ஓர் சாதனை படைத்தார் மடு கல்வி வலயத்தில் உள்ள தட்சணாமருதமடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பி.பிரியங்கா.

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டத் தடகளத் தொடர் யாழ். துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் தட்சணாமருதமடு கல்வி வலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய பிரியங்கா 400 மீற்றர் தடை தாண்டல், 800 மீற்றர் ஓட்டம், 1500 மீற்றர் ஓட்டம் என்பனவற்றில் சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றுள்ளார்.

நடப்பு வருட தடகளத் தொடரில் மூன்று விளையாட்டுக்களில் களமிறங்கி மூன்றிலும் சாதனையை நிலைநாட்டிய பெருமை நேற்றையநாள் முடிவுவரை பிரியங்காவுக்கே உண்டு. மடு கல்வி வலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்து பதக்கம் ஒன்றைக் கையிலேந்துவதென்பது அரிதிலும் அரிதான நிலையில் பிரியங்காவின் இந்தச் சாதனை பலரையும் வியக்க வைக்கிறது.

தொட்டாச்சிணுங்கி என்று அறியப்படும் முட்செடி நிறைந்த மைதானத்தில், கதிரைகளை சட்டவேலிகளாகப் பயன்படுத்தியே அவர் இந்த மைல்கல்லை எட்டியுள்ளார். சிறந்த மைதானம் இல்லை, சட்டவேலிப் பலகைகள் இல்லை, மாற்றி அணிய விளையாட்டுக்குரிய பிரத்தியேக பாதணி இல்லை, இலக்கை குறிவைத்து பயிற்சி மேற்கொள்ள நிறுத்தற் கடிகாரம் இல்லை. இவ்வளவு தடைகளையும் தாண்டி மாகாணத்தில் சாதிப்பதென்பது எம்மில் எத்தனை பேரால் முடியும்? ஆனால் பிரியங்கா தனது பயணத்தை துரையப்பா அரங்குடன் (மாகாணத்துடன்) நிறுத்திவிட விரும்பவில்லை. அவரின் கால்கள் தேசியத்தில் ஓடத் தயாராகிவிட்டன. மூன்று நாள்களில் மூன்று சாதனைகளுக்கு சொந்தம் கொண்டாடும் அவரது தனிப்பட்ட வாழ்க்கையும் துன்பம் மிகுந்ததாகவே உள்ளது. பிரியங்காவின் வேண்டுகோளுக்கு இணங்க அவை பகிரப்படாமல் விடப்படுகின்றன. வளவுக்குள்ளும், ஒழுங்கைக்குள்ளும் விளையாட கால்பந்தும், துடுப்புமட்டையும் வாங்கிக்குவிக்கும் அரசியல் பிரமுகர்களில் ஒருவரது பார்வையாவது பிரியங்காவின் பக்கம் திரும்புமாயின் நிச்சயம் அவரால் இன்னும் உயரச் செல்ல முடியும்.





# ஈட்டி எறிதலில் தங்கம் வென்றது யாழ். மத்தி

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவு ஈட்டி எறிதலில் யாழ். மத்திய கல்லூரிக்கு தங்கமும், வெள்ளியும் கிடைத்தன.

யாழ். மத்திய கல்லூரியின் சார்பாக களமிறங்கிய எம்.சஜீவன் 57.73 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வர்ணச் சான்றிதழுடன் தங்கத்தைக் கைப்பற்றினார். வெறும் 19 சென்ரிமீற்றராலேயே இவர் சாதனையைத் தவற விட்டார். ஜெ.பினெஸ்காஸ் 49.4 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப்பதக்கத்தையும், முல்லைத்தீவு பாரதி வித்தியாலயத்தின் ஆர்.தமிழ்வாணன் 45.4 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## நானாட்டான் ம.வித்தி. 400 மீற்றரில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
மாகாணமட்ட தடகளத் தொடரில் 21 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 400 மீற்றர் ஓட்டத்தில் மன்னார் நானாட்டான் மகா வித்தியாலயத்துக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது.

குறித்த வித்தியாலயத்தின் பி.தீபா 1 நிமிடம், 11 செக்கன்கள், 8 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தைக் கைப்பற்றினார். பாரதி வித்தியாலயத்தின் என்.யாழிசை 1 நிமிடம், 15 செக்கன்கள், 3 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப்பதக்கத்தையும், கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் எஸ்.சபித்தா 1 நிமிடம், 15 செக்கன்கள், 9 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.
(ம)



15 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான நீளம் பாய்தலின்போது...

## சென். ஆன்ஸ் ம.ம.வி. குண்டெறிதலில் தங்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 18
தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் மன்னார் சென். ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்துக்கு தங்கத்தைப் பெற்றுக் கொடுத்தார் டி.ரி.பெர்னான்டோ.

11.53 மீற்றர் தூரத்துக்கு எறிந்தே பெர்னான்டோ தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். மானிப்பாய் இந்துக் கல்லூரியின் சார்பாக களமிறங்கிய ஆர்.சுஜீபன் 11.39 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், ஹாட்லிக் கல்லூரியின் ஜி.ஜதர்த்தன் 10.87 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## 200 மீற்றர் ஓட்டத்தில் தனுஜா புதிய சாதனை

யாழ்ப்பாணம், ஜூலை 18
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவு 200 மீற்றர் ஓட்டத்தில் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தனுஜா சாதனை படைத்தார்.



வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியை கடந்த 2012ஆம் ஆண்டில் பிரதிநிதித்துவம் செய்த எம்.கமலினி 28 நிமிடங்கள் 4 செக்கன்களில் இலக்கை அடைந்து படைத்திருந்த சாதனையை, நடப்பு வருடத்தில் முருகானந்தாக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த பி.தனுஜா 28 நிமிடங்கள் 3 செக்கன்களில் அடைந்து சாதனையை நிலைநாட்டினார்.

200 மீற்றர் ஓட்டத்தைத் தவிர 400 மீற்றர் ஓட்டத்திலும் இவர் தங்கப்பதக்கம் வென்றிருந்தார். 100 மீற்றர் இறுதிப்போட்டி இன்று நடைபெறுகிறது. இதிலும் தனுஜாவுக்கு பதக்கம் கிடைக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

17 வயதுக்குட்பட்ட 100 மீற்றர், 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டங்களில் அனைத்து சாதனைகளும் இவரிடமே உள்ளன. இந்தச் சாதனைகளைப் படைத்த போது பி.தனுஜா விஸ்வமடு மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்தார்.
(ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸ்வின் ரெடி

இந்திய அணியின் பிரதான சுழற் பந்து வீச்சாளரான அஸ்வின் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் சாதிக்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார்.

இந்தத் தொடர் சவாலானதாகக் காணப்படுமென நான் உறுதியாக நினைக்கிறேன். இறுதியாக இடம் பெற்ற பயிற்சி ஆட்டத்தில் ஆடுகளம் சுழலுக்கு ஒத்துழைத்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. ஆடுகளங்கள் சரியாக அமைந்துவிட்டால் இந்தியாவின் வெற்றிக்கு நிச்சயம் பெரியதொரு பங்களிப்பை வழங்க முடியும் என அஸ்வின் மேலும் தெரிவித்தார். (ம)

விசேட கருத்தரங்குகள்
நாளை செவ்வாய் (19/7)
சனி (23/7)
காலை 9.00-4.00
மணிவரை
* வடமாகாண வரி உத்தியோகத்தர்
* புகையிரத திணைக்கள பாதுகாவலர்
* நில அளவை புல உதவியாளர் தெரிவு
T.P 076 6883394
யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

பொருளியற் கல்லூரி
நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
A/L 2016 (Batch)
கருத்தரங்கு
விவசாய விஞ்ஞானம்
திகதி: 19.07.2016 (நாளை)
நேரம்: (8.30-12.30) A.M
(1.00-4.00) P.M
S.சஜீவன்
* வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
Note: பிரிவு!! இற்கான 2017, 2018 வகுப்புக்கள் 23.07.2016 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.
(உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்)

விஷேட வைத்திய நிபுணர்களின் சேவை
➧ மூட்டுவலி, மூட்டு வாதம் (ஆத்திரைட்டிஸ்) மற்றும் மூட்டுக்களில் ஏற்படும் சகலவிதமான பிரச்சினைகளுக்கு வைத்திய ஆலோசனை பெறுவதற்குச் சிறப்புத் தேர்ச்சி பெற்ற **விசேட மூட்டுவாத வைத்திய நிபுணர்.**
➧ சலரோகம் (நீரிழிவு) மற்றும் கோமோர்ன்ஸ்களினால் (தைரொய்ற்) ஏற்படும் பிரச்சினைகளுக்கு ஆலோசனை பெறுவதற்கு விசேட தேர்ச்சி பெற்ற **நீரிழிவு, கோமோர்ன்ஸ் வைத்திய நிபுணர்.**
➧ அனைத்து விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள அழையுங்கள்.
(தொலைபேசியில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்)
021 320 2300, 077 045 7976
றோயல் மெடிக்கல் சென்ரர்
இல.458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(யாழ்.போதனா வைத்தியசாலை பழைய OPD எதிரில்)

# பெறுமதிவாய்ந்த அணியாக கௌபோய்ஸ் தெரிவானது



அமெரிக்கன் உதைபந்தாட்ட அணியான டலஸ் கௌபோய்ஸ் அணி, உலகின் பெறுமதிமிக்க அணியாக தெரிவானது.

பிரபல சஞ்சிகை ஒன்று மேற்கொண்ட தரப்படுத்தலில் நான்கு பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் கௌபோய்ஸ் அணி உலகின் பெறுமதியான அணியாகத் தெரிவானது. 2011ஆம் ஆண்டு இந்தத் தரப்படுத்தல் ஆரம்பிக்கப்பட்ட பின்னர், கால்பந்தாட்ட அணியல்லாத ஒரு அணி முதலிடத்தில் வருவது இம்முறையே முதற்தடவையாகும். ஸ்பெய்னின் கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட் 3.65 பில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் பெறுமதியுடன் இரண்டாவது இடத்திலும், ஸ்பெய்ன் நாட்டின் பிறிதொரு கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனா 3.55 பில்லியன் அமெரிக்க டொலர்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன. ரியல்மட்ரிட் அணியில் றொனால்டோவும் பார்சிலோனாவில் மெஸ்ஸியும் விளையாடுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# ரியோ ஒலிம்பிக்; கேலெப் விலகல்

ருமேனிய ரென்னிஸ் வீராங்கனையான கேலெப் நடப்பு வருட ஒலிம்பிக் தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் அடுத்தமாதம் 5 ஆம் திகதி ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது. பிரேஸிலில் சிகா வைரஸ் பிரச்சினை தற்போதும் சிறிதளவு இருந்துகொண்டுதான் உள்ளது. நுளம்புகளால் பரவும் இந்த வைரஸின் தாக்கத்துக்கு அஞ்சியே தொடரிலிருந்து விலகுவதாக கேலெப் அறிவித்தார்.

கனத்த இதயத்துடன் ஒலிம்பிக்கில் இருந்து விலகுவதாக அறிவிக்கிறேன். எனது குடும்பத்தினர் மற்றும் பயிற்சியாளர்களிடம் தீவிர ஆலோசனை நடத்தினேன். குறிப்பாக அங்கு பரவும் சிகா வைரஸ் பாதிப்பு குறித்து விவாதித்து இந்த முடிவுக்கு வந்தேன் என கேலெப் தெரிவித்தார். (ம)






# ஓட்டுசுட்டான் ம.வித்திக்குத் தங்கம் 1500 மீற்றர் ஓட்டத்தில் கிடைத்தது

யாழ்ப்பாணம், ஜூலை 18

மாகாணமட்ட தடகளத் தொடரில் 19 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டத்தில் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயம் தங்கம் வென்றது. குறித்த வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த பி.ஜெனந் தனன் 4 நிமிடங்கள், 23 செக்கன்கள் 6 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கத்தை தனதாக்கினார். பெரியபன்றிவிரிச்சான் மகா வித்தியாலயத்தின் சார்பாக களமிறங்கிய இ.அன்ரனிஸ் றோச் 4 நிமிடங்கள், 26 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தைப் பிரதிநிதித்துவம் செய்த இ.அனுஜன் 4 நிமிடங்கள், 27 செக்கன்கள் 5 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 18.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.